தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

50 காசு



தமிழில் கற்க முன்வருக!

பழக்குலை கோதும் கிளிக்குழாம் அன்ன
    பசுந்தமிழ்த்தீம்
பழக்குலை உண்டிட முன்வரல் வேண்டும்
    தமிழ் இளையோர்!
சழக்குளங் கொண்டவர் நாணும் படிக்குடன்
    நண்ணியொன்றாய்
முழக்குக அன்னார் செவிப்பறை யில்''தமிழ்
    வேண்டு''மென்றே!

ஓவியம்: செம்பியன்.

தென்மொழி

இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.

சுவடி 1. ஓலை 8

தி. பி. 1994

புரட்டாசித்திங்கள்.

(1963–செப்டம்பர்)

சிறப்பாசிரியர்

புலவ, பண்டித

ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்

பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்

ம. இலெ. தங்கப்பா

மு. சாத்தையா

செம்பியன்

உரிமை, வெளியீடு

தாமரை

உலக முதல்வி

அச்சகம்

மித்திரா அச்சகம்

திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

நற்காலக் கல்வி முறை.

வளர்ந்து வரும் நாகரிகம் புறத்துறையில் பற்பல புரட்சியான மாற்றங்களைச் செய்துள்ளதேனும் அகத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் மிக மிகக் குறைவே ஆகும். இத்தகைய அகத்துறை மழுக்கத்துக்குக் காரணமாக உள்ள பலவற்றுள் செப்பமில்லாத நம் கல்வி முறையும் தலையாய ஒன்றாகும். மக்களின் உலக வாழ்க்கை பெரும்பாலும் வயிற்றைப்பற்றிய நோக்கத்தையும் உடல் உணர்வைப் பற்றிய ஏக்கத்தையும் கொண்டுள்ளதேயன்றி உள்ளத்தின் மலர்ச்சிபற்றியும், அறிவின் வளர்ச்சிபற்றியும் மக்களினம் கொள்ளும் முயற்சிகள் மிகச் சிலவே. இவ்விரு வகை மாறுபட்ட உணர்வுகளில் எந்த ஒரு நாடு மிகுவாக முன்னேற்றம் கண்டுள்ளதோ, அந்த நாடே இன்றைய உலகப் போக்கில் முன்னோடியாகவிளங்குகின்றது. அறிவு வளர்ச்சிக்கு முழு முதற் காரணமாகவுள்ள கல்வித்துறை செம்மையாக அமையாமையால் பின் தங்கியுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இங்கு அறிவு வளர்ச்சி என்பது வெறும் கரும முறையிலேயே வளர்ந்திருக்கின்றதன்றி, காரண முறையில் ஏற்பட்ட வளர்ச்சி மிகவும் குறைவே. இம் மென்னடைப் பயணத்திற்கு நாம் கல்வித் துறையில் செப்பமடையாமல் இருப்பதே பெரிய முட்டுக் கட்டையாக அமைந்துள்ளது.

கல்வி என்றால் என்ன? நெடுங்கணக்கைப் பயின்று கொள்ளுதலும், அந்நெடுங்கணக்குப் படிப்பை நம் வாழ்வுத் தேவைக்கான பொருளீட்டத்திற்கே அடிப்படுத்துகின்ற போக்குமே கல்வி ஆகுமா? மலர்ச்சியின்றிச் சுருங்கிக் கிடக்கும் உள்ளம், கல்வி எனும் நல்லுணர்வால் விரிந்து மலர்ந்து மணங் கமழ வேண்டாமா? உள்ளத்தை நோக்கி நடையிடாத கல்வி, உயிரற்ற பிணத்திற்குச் செய்யும் புனைவுகளைப் போன்றது; உடல் ஊட்டத்தை ஏற்படுத்தாத உணவைப் போன்றது. கல்விக்கெனப் பல்லாயிரங்கோடி உருபாக்களைச் செலவிட்டு நம்கல்வித் துறையை அகலப் பெருக்கினோமின்றி ஆழப் பெருக்காத புன்மையை நினைத்து, நாம் இனியேனும் அப்போக்கினின்று மீண்டு உள்ள மலர்ச்சிக்குத் துணை நிற்கும் கல்வியை எவ்வகைக் காலத்தாழ்த்தமுமின்றி உடனே அமைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் உலக மக்கள் யாவரும் வெளிப்புற நாட்டமிகுந்து அகப்புற நாட்டங் குன்றி நாகரிகமுற்ற விலங்குகளாக எண்ணப்படுவரே அன்றி ஒருபொழுதும் மீமிசை மாந்தராக விளங்குதல் இலர்.

இக்காலத்துப் பொருள் நாட்டத்திற்கும், அதை உள்ளிட்ட மேம்பாடான புல்லிய வாழ்க்கைப் போக்கிற்குமே யன்றி உண்மையான அறிவு வளர்ச்சிக்கும் உள்ளத் துலக்கத்திற்கும் கல்வி கற்பார் எத்தனைப் பெயர் இருப்பார்? தொழு நோய் கொண்ட ஒருவன், தன்னுடல் நாற்றத்தைப் போக்கப் பல் வகையான மணப்பொடிகளைப் பூசிக்கொண்டும், உடற் புண்ணை மறைக்கப் பருத்தியானும் பட்டானும் பல்வகை வண்ண உடைகளைக் கால இடங்கட்குத் தக்கவாறு மாற்றிமாற்றி அணிந்துகொண்டுந் திரிவானுகில், அவனை நாம் தொழு நோயினின்று நீங்கப் பெற்ருன் என்று கொண்டு அவனுடன் பழகுவோமா? பெருகிப் பரந்து கிடக்கும் பல்துறை அறிவிற்கேற்பச் சுவடிகளையும் புத்தகங்களையும் நம் இளஞ்சிருர்களின் மென் கைகள் கனக்கும்படியாகவும் சோர்ந்து போகும்படியாகவும் நாம் தேடித் தந்தோமன்றி அவர்கள் உள்ளம் நிரம்புமாறும், மலர்ச்சியுற்று மணங் கமழுமாறும் அவர்க்கான கல்வி முறையை ஏற்படுத்திக் கொடுத்தோமா? இல்லையே. நம் நாட்டம் முழுமையும் பொருள் ஈட்டத்திலேயே இருப்பதால், அதற்கேற்ற கல்வியையே நாம் நம் மக்கட்குத் தேர்ந்தெடுக்கின்ருேம். மக்களின் விருப்பப்படி அரசினரும் பணங்கொழிக்கும் புன்மை வழிகளைப் பயிற்றுவிக்கும் புறவியற் கல்விக்கே முதலிடமும் அளித்துள்ளனர்.

கல்விக் கூடங்களை, வானளாவவும், அழகுபடவும் கட்டுவதும், அவற்றுள் பயிலும் மாணவர்கட்கென்று இருக்கைகளையும் மேடைகளையும் ஆய்வுக் கருவிகளையும் வாங்கி அக்கூடங்களை நிரப்புவதும், இவ்வடிப்படை வீண் செலவுகளைக் கணக்கிட்டுப்

பகிர்ந்து அதனைக் கற்க வரும் பிள்ளைகளிடம் ஊதியமாகத் தண்டுவதும், ஆரவாரமும் போலிமையும் நிறைந்து வயிற்றுக் கென வாயசைக்கும் பேராசிரியர்களைக் கொண்டு ஓரிரு மணிப் பொழுதே பயிற்றுவிப்பதும், இறுதியில் தேர்வெனப் பெயர் கொண்டு விருப்பு வெறுப்புகளை அடிப்படையாக வைத்து மாண வர்களில் சிலரைத் தேர்ந்தார் என்றும், சிலரைத் தேரார் என் றும் அறிவிப்பதுமே நம் கல்வி முறையாக இருந்து வருகின்றது. உயர்நிலைக் கல்வி முறையே இத்தகையதாக விருக்கும்பொழுது தொடக்க நிலைக் கல்வி முறையின் ஒழுக்கல் வழுக்கல்களை நாம் கூறவேண்டுவதில்லை. சிற்றூர்ப்புறங்களில் உள்ள ஆசிரியர்கள் கைகளில் சிக்கித்தவிக்கும் பிள்ளைமைப் பருவத்துப் பேதைஉள் ளங்கள் பல்வகையாலும் சிதைக்கப்படுவதைக் காணும்பொழுது நம் நாட்டின் எதிர்கால மக்களை நினைந்து கண்ணீர் உகுக்க வேண்டியுள்ளது.

உயர்ந்த தாளில் அழகுற அச்சிட்டுக் கட்டடம் செய்யப் பெற்ற நூல்களின் உட்புறத்து எழுதப் பெற்றிருப்பது என்னை? அச்சிறு நெஞ்சங்கட்கு விளங்கி வராக் கதைப் புனைவுகளும் கணக்குப் பெருக்கங்களும் போலிப் பொய்யுரைகளும் மேம் போக்கான அறிவு முறைகளுமே அன்றி, அவர்தம் உள்ளுணர் வைத் தீண்டி ஒளியேற்றும் ஓரிரு சொற்களையேனும் காட்டல் கூடுமா? அஃது அவ்வாறிருப்பின் பசித்தவன் பாற்சோற்றை அருந்தல்போல் கல்வி நாடிவரும் நம் குழந்தைகள் விருப்புடன் ஈடுபடாவா? விழுங்க முடியாத பொருள்களை ஆசிரியர்களின் துணைக்கொண்டு குழந்தைகளை விழுங்கச் செய்வதுதாமோகல்வி முறை? இக்கால மாணவர்களில் நூற்றுக்குப் பத்துப் பெயர்களா வது கல்விவேட்கையுடன் பள்ளிக்குப் போகின்றவராகக் காண கிலமே! பெற்றோரின் தொல்லைக்குப் பொறுக்காமலும் பள்ளி யாசிரியரின் கைக்கோலுக்கு அஞ்சியுமன்றோ குழந்தைகள் கல்விக்கூடங்களை நாள்தோறும் நண்ணுகின்றன; அவர்க்கு விருப்ப மில்லா எட்டிக் கனிகளை எடுத்து உண்ணுகின்றன. ஒன்றுமறியாச் சிறுவர்தம் குழந்தை உள்ளத்திற்கும் நிறைவளிக் காத கல்வியினால் இம் மக்கள்கூட்டம் வளர்க்கப் பெற்றமையா லன்றோ, பொறாமையும், சூழ்வும், போர்களும் ஆங்காங்கே ஊடுருவி அச்சுறுத்திக் கொண்டுள்ளன.

தமிழ் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் கல்விப் பெருக்கத் திற்கு ஒருவாறு நாம் மகிழ்ந்தாலும், வயிற்றில் வைக்கோலைப் போட்டு அடைப்பது போன்ற கல்வியையே அவர்கள் பெறு கின்றனர் என்பதை நினைக்க உள்ளம் வருந்துகின்றது. பூச்செடி களையும், பழமரங்களையும் வைத்துப் புரக்கும் தோட்டக்காரனும் அவற்றின் மலர்ச்சிக்காகவும் கனிவிற்காகவுமே தம் முயற்சி களைச் செலவிடுகையில், உலக வரலாற்றை உருவாக்கிக்

கொண்டு போகும் நம் குழந்தைச் செல்வங்களைப் பேணிப்பயிற்றுவிப்பதில் நாம் முழுக்கருத்தையும் செலுத்துவதில்லை. பதினாறு ஆண்டுகளைக் கடந்த ஒரு மாணவனோ மாணவியோ தன்னாற்றல் மிகுக்கப்பெற்று உண்மை, போலிகளைப் பிரித்தறிந்து செப்பமான உயரிய வாழ்வு வாழத் தினைத்தானும் அறிவு பெற்றவராகக் காண முடியாதே!

பொருள் வருவாய்க்கு மட்டுமே வழிகோலுவதாக நம்கல்வி முறையை நாம் மேன்மேலும் வளர்த்துக்கொண்டு போவோமாகில் மக்கள் குலத்துக்குத் தனிச்சிறப்பாக உள்ள உள்ளம் அழியப் பெற்று மீண்டும் காட்டுமிராண்டிகள் காலத்திற்கே நாம் நடையிடுவோமன்றி வேறு எவ்வகைப் பயனையும் காணுதல் முடியாது. இக்காலக் கல்வி முறைப்படி, கல்லூரிக் கல்வியை முழுமையாகப்பெற்ற ஒருவர், தம் வாழ்வில் எதிர்நேரும் சிக்கல் சிணுக்குகளைத் தாமே அவிழ்த்துக்கொண்டு மேல் நடப்பவராக வெளிவரக் காண்பது அரிதிலும் அரிதே!

கல்விக்கூடங்களை எளிமையானவையாக அமையுங்கள்! இயற்கையின் பேராற்றலை அறிந்து வியக்கும்படியான அவை சோலைகளின் நடுவிலோ, ஆற்றுப் படுகைகளிலோ அமைக்கப் பெறட்டும். உண்மையான மனவளர்ச்சிக்கு வித்திடும் பல்வகை நூற்செல்வங்களைத் தாய் மொழியிலேயே குழந்தைகட்குக் கற்பியுங்கள். புற நாட்டம் குன்றி அக நாட்டம் மிகுக்கப் பெறுவதே நாம் கல்வி கற்பதின் பெருநோக்கமாக அமையப் பெறல்வேண்டும் தொழில் ஆரவாரமும் செருக்குத் தோற்றமும் புலப்படும் வகையில் அவர்கட்கு அளிக்கப்பெறும் கல்வி முறைக்கு முற்றுப் புள்ளி இடுங்கள். எடுத்த எடுப்பிலேயே குழந்தைகட்கு வெறுப்பூட்டும் செய்திகளை அவர்கட்குக் கற்பித்துக் குருட்டுத் தனமாக மனப் பாடம் செய்து ஒப்புவித்துத் தேர வாய்ப்பளிக்கும் தேர்வு முறைகளை ஒழித்துக்கட்டி, உளவியல் அறிவியல் ஆசிரியர்களைக்கொண்டு தெளிவு செய்யும் முறைகளைக் கைக்கொள்ளுங்கள். கல்வி முறைகளை அடிக்கடி மாற்றிக் குழப்புவதைவிட ஆய்ந்து அறிந்த மெய்யறிவு சான்ற பேரறிஞர்களைக் கொண்டு ஒரு தகுதியான கல்விமுறை உடனடியாக அமைக்கப் பெறல் வேண்டும். எழுமைக்கும் ஏமாப்பளிக்கும் கல்வி, அரசியல் விளம்பரத்தை நாடும் குறுகிய மனப்பான்மை கொண்ட சிற்றறிவினர் தம் கைகட்கு எட்டாத வகையில் பேணிக்காக்கப் பெறல் வேண்டும்.

பற்பல உணர்வுகள் கொண்ட குழந்தைகளை அவரவர் உண்மைத்திறம் புலப்படுமாறு பல்துறைகளிலும் வேறுவேறாகப் பயிற்றுவித்தல் வேண்டும் அரசியல், பொருளியலில் துணிந்து மாற்றஞ்செய்யும் அரசினர் கல்வித்துறையிலும் ஒரு நல்ல மாற்றத்தைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா? ○

(இப்பகுதி தென்மொழியின் புகழுரைகளைப் பறைசாற்ற வேண்டும் எனும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்றதன்று! உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் எங்கெங்கு உறைகின்றன என்பதையும், அவை தென்மொழியால் எவ்வாறு கீண்டப் பெற்று உயிர்த் தெழுகின்றன என்பதையும் தூங்கும் தமிழர் கட்கும் தீங்குசெய் பகைவர்கட்கும் உணர்த்த வேண்டு வதே இதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றிப், பிறர் புகழுரைக்கும் மயங்கோம்! புல்லியர்தம் இகழுரைக்கும் தயங்கோம்! — **ஆசிரியர்**.)

*
அறிந்த தமிழேட்டில் ஆன்ற புலவோர்
செறிந்த தமிழ்நாட்டில் செப்பின்—அறிவறி
வென்னும் பெயரால் இழிபொருளே எங்குமுள
தென்மொழி போலில்லை திறம்.

— *தரங்கை*. **பன்னீர்ச்செல்வன்.**

* தமிழ் வாழவேண்டும், வளரவேண்டும் என்று முழக்கமிடு வோர் நம்மிடையே பலருளர். ஆனால் உண்மையிலேயே தமிழை வாழ்விக்க வேண்டும், வளர்த்தல் வேண்டுமென்னும் உளப்பாங்கோடு செயல் வழிப்படுவோர் மிகச் சிலரே. அச் சிலருள் இற்றைநாள் தலையாய தமிழ்ப்பணிபுரிவோர் தென்மொழி உடையாரென்பது தெளிவு. வருங்காலத் தமிழகமும் தமிழும் சிறப்புறல் வேண்டுமெனின் நாம் அனைவரும் தென்மொழி நெறி நின்று தொண்டாற்ற வேண்டும்.

— இலெ. க தங்கவேல்,
பாவாணர் தமிழ் மன்றத் தலைவர், மலைநாடு.

* தென்னவர்தம் மொழி தேன்மொழி; அதனை அறியார் இந் திக்கு வால்பிடிப்பார். தென்னவர் தம் மொழியைத் தேன் மொழி யில் திங்கள் தோறும் பருக உதவும் உங்களை வாழ்த்தி, 'தென்மொழி'யும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

— பல்லவன், மன்னார்குடி.

* தீட்டுகின்றீர் நலம்பயக்கும் கட்டுரையைத்
தென்மொழியில்; நற்றமிழில் மகிழ்ச்சியுற்றேன்;
ஓட்டுகின்றீர், இந்நாட்டில் தனித்தமிழ்க்கே
ஓரிதழும் இல்லைஎனுங் கவலைதன்னை!
பாட்டினிமை தாங்கிவரும் நல்லமிழ்தே,
பழந்தமிழர் நற்கருத்தைப் புவியின்மீது
காட்டிவரும் ஒளிவிளக்கே, இன்பமூட்டிக்
கலைமணக்கும் தென்மொழியே, வாழ்கஎன்றேன்.

— பெ. இளவரசு, கிருட்டிணபுரம்.

* கேட்டை ஒழிப்பதற்கே-தென்மொழி
கிளர்ந்து முரசுகொட்டி,
மூட்டும் மொழிஉணர்வாம்!-தென்மொழி
முற்றும் புதுப்பொலிவாம்!

— இரா. தமிழழகன், சுங்கைசிப்புட், மலாயா.

* தனித்தமிழின் மணங்கமழ எழுந்திட்ட
தனிமலரே, நின்பால் வந்தேன்;
இனித்தஉன்றன் நல்லுரையால் என்னெஞ்சத்
தின்பூறச் செய்தாய்; வாழ்க!

— வே. அரங்கன், வடுகை.

* ''தென்மொழியைப் படிப்பதில் எனக்கு ஓர் ஆவல். தங்கள் இதழில் மணக்கும் இலக்கிய நடையினை அப்படியே ஏற்றுக்கொண்டுவிட மாட்டோமா என்று ஏங்கும்படி அழகான தூய தமிழ்ச் சொற்களான் ஆகிய இதழ் முழுவதும் ஓர் இலக்கியப் பேழை. ஒவ்வொரு வரியிலும் தமிழ்த் தாயே காட்சியளிப்பது போன்ற ஒரு கற்பனை என் உள்ளத்தை நிறைவிக்கும் திரு. பாவாணர் அவர்களின் கேள்வி விளக்கம் மிக நன்றாக உள்ளது பள்ளி யிறுதியாண்டில் யாப்பு முதலிய இலக்கணமெல்லாம் கற்று மேற்படிப்புக்குப் போக இயலாத நிலையில், உண்மைத் தமிழ் மணம் கமழும் தங்கள் இதழ் என் தமிழ்ப்பசி நீக்கும். தங்கள் தென்மொழி வளர என் நெஞ்சங் கனிந்த வாழ்த்துகள்.

— தி. கி. பாண்டுரங்கன்,
சைதாப்பேட்டை, சென்னை.

செய்தி.

மொழிப் பேரறிஞர் உயர்திரு.

ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.

அவர்கள் முன்னிலையில் நடந்த

தமிழ்த் திருமணம்.

நிகழும் திருவள்ளுவராண்டு 1994 ஆவணித் திங்கள் 7-ஆம் நாள் (23-8-1963) அன்று கடலூர் அரசினர் அடிப்படைப் பயிற்சிப் பள்ளித் தமிழாசிரியர், உயர்திரு. சீனி. சட்டையப்பன் அவர்கட்கும், பரங்கிப்பேட்டை துணைப்பதிவாளர் திரு. கோவிந்தராசன் அவர்களின் மகள் செல்வி மணிமேகலைக்கும், பாவாணர் அவர்கள் முன்னிலையில் திருஇந்தளூரில் மணம் நடைபெற்றது. திருமணத்தில் செம்பொருட் கருவாயமைந்த தமிழ்ப் பாடல்கள் பாடப்பெற்றன. மண வாழ்த்து நிகழ்ச்சிக்குப் புலவர். திரு. வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல், அவர்கள் தலைமை தாங்கினார். மணமக்களை வாழ்த்திப் பாவாணர் அவர்கள் கருத்து நிறைந்த சொற்பொழிவாற்றினர். ஆண்டு வந்த புலவர் பெருமக்கள் சிலரும் வாழ்த்துரை வழங்கினர். தென்மொழிச் சார்பில் பொறுப்பாசிரியரும், உறுப்பாசிரியரும் திருமணத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். இனித் தமிழர் யாவரும் தமிழ்த் திருமணமே செய்து கொள்ளல் வேண்டும்; தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் அது பெருந்துணை நல்கும் என்று பாவாணர் அவர்கள் தம் பேச்சில் குறிப்பிட்டனர். இத்தமிழ்த் திருமணத்திற்கு வந்திருந்தார் அனைவர்க்கும் மணப்பிள்ளை நன்றிகூறினார். திருமண நினைவாகத் தென்மொழியின் வளர்ச்சிக்கு உருபா பத்து நன்கொடையாக அளிக்கப் பெற்றது.

இந்தி மொழியின் பிள்ளைத்தன்மை.

இஞ்ஞான்று வழங்கும் இந்தி மொழியானது 'லல்லுசிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தம் செய்யப்பட்ட தொன்றாகும். இதற்குமுன் உள்ளதான பிராகிருதச் சிதைவுமொழியில் கலந்த பாரசீக அராபிய மொழிச் சொற்களை அறவே ஒழித்துச் சமற்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் இந்திமொழியைப் புதிதாய் உண்டாக்கினார். ..... இக்கலவைப் புதுமொழியான இந்தியில் கி. பி. 1400–ஆம் ஆண்டுமுதல் 1470–ஆம் ஆண்டு வரையில், அதாவது இற்றைக்கு 467 ஆண்டுகளுக்கு முன்னிருந்த 'இராமானந்தர்' எனப் பெயரிய ஒரு துறவி இராமனையே முழுமுதற் கடவுளாக வைத்துப் பாடிய பாடல்கள் அடங்கிய நூல்தான் முதன் முதல் இந்தி மொழியில் உண்டான நூலாம். இஃது 'ஆதிகிரந்தம்' என்றுவழங்கப்படுகின்றது. இராமானந்தர்க்குப் பின் அவர் தம் மாணாக்கருள் ஒருவரான 'கபீர்தாசர்' என்பவர் இற்றைக்கு 430 ஆண்டுகட்கு முன், இந்திமொழியின் ஒரு பிரிவான 'அவதி மொழியில் இந்து சமயப் புரட்டுகளை மிகவும் கடுமையாக மறுத்துப் பாடியிருக்கின்றார். இவர் பல செய்யுள் நூல்களைப் பாடியுள்ளார். இவரின் பாடல்கள் இந்தி மொழியில் உண்டான பிறகுதான், அதாவது சென்ற நானூறு ஆண்டுகளாகத்தாம் இந்தி மொழியின் ஒரு பிரிவுக்கு ஓர் ஏற்றம் உண்டாயிற்று

கபீர்தாசருக்குப்பின் அவர்தம் மாணாக்கரான 'நானக்' என்பவர் பஞ்சாபியும் இந்தியும் கலந்த ஒரு கலப்பு மெழியில் பல பாடல்களைப் பாடினார். இம்மூவர்தம் பாடல்களையும் எளிதில் புரிந்து கொள்ளல் இயலாது. அதன்பின் இன்றைக்கு 480 ஆண்டுகளுக்கு முன் 'வித்யாபதி தாகூர்' என்பார் இந்தியின் மற்றொரு பிரிவான 'மைதிலி' மொழியில் கண்ணனுக்கும் அவன் காதலி இராதைக்கும் இடையே நிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளை விரித்துப் பாடி யுள்ளார்.

இதுவரையிற் கூறியது கொண்டு, இந்தி மொழியானது 500 ஆண்டுகளுக்கு முன் நூல் வழக்கு இல்லாமற் கல்வியறிவில்லா வடநாட்டு மக்களால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப்பேசப்பட்டு வந்தது என்பது நன்கு விளங்கும்.

– மறைமலையடிகள்.

சமற்கிருதவாக்கம் - (சொற்கள்)

வேத ஆரியர் நாவலந்தேயம் அல்லது நாவலம் பொழில் என்னும் இந்தியாவிற்குட் புகுந்தபோது, இங்கிருந்த இலக்கியம் தமிழிலக்கியமே. அவர் இந்திய நாகரிகம் தமதெனக்காட்டித் தம்மைக் குமுகாய (சமுதாய) நிலையில் உச்ச நிலைக்கு உயர்த்து வான் வேண்டி, தமிழ் நூல்களை மொழி பெயர்த்து ஓர் இலக்கியத்தை அமைத்தற்குப் போதிய சொல்வளம் தம் முன்னோர் மொழிக்கின்மையால் ஆயிரக்கணக்கான சொற்களைத் தமிழினின்று கடன் கொள்ள வேண்டியதாயிற்று. இங்ஙனங் கடன் கொண்டமைத்த இலக்கியச் செயற்கைக் கலவை மொழியே சமற்கிருதம். இதற்கு, ஏற்கனவே இரு வேறு நிலைகளில் நேரல்லா வழியிற் கடன் கொள்ளப்பட்டிருந்த தமிழ்ச் சொற்களும் துணை செய்தன. இதனால், கீழையாரியம் மூவேறு காலத்தில் தமிழ்ச் சொற்களைக் கடன் கொண்டமை அறியப்படும்.

அவற்றுள்:-

முதற்காலம் மேலையாரியக் காலமாகும். அக்காலத்திற் கடன் கொள்ளப்பட்டவை முதற் காலத் தமிழ்ச் சொற்கள் (Tamil of the First Period) எனத்தகும்.

இரண்டாங்காலம் வேத ஆரியக்காலமாகும். அக்காலத்திற் கடன் கொள்ளப்பட்டவை இரண்டாங் காலத் தமிழ்ச் சொற்கள் (Tamil of the second Period) எனத்தகும்.

மூன்றாங் காலம் சமற்கிருதக் காலமாகும். அக்காலத்திற் கடன் கொள்ளப்பட்டவை மூன்றாங் காலத் தமிழ்ச் சொற்கள் (Tamil of the Third Period) எனத்தகும்.

1. மேலையாரியத் தமிழ்ச் சொற்கள்.

எ. டு:

தியூத்தானியம்:

அம்ம-amma, ஆன் (= அங்கு)-yon, இரு-are, இரும்(பு) -iron, ஈன்-yean, ean; உரறு-roar, கரை-cry, காண்-con,

மொழிப் பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

cun, can; குரங்கு (=வளை)-crank. குருள்-curl, கொடுக்கு-crook, சப்பு-sup, sip; துருவ-through, நாகு-nag, பட்டு (அடி)beat புல்லம்-bull, மெது-smooth, முன்னு-mun(think). வேண்டு-want.

இலத்தீனம்

அமர்-amo (love), amor; உருளை-உருண்ட-rota (wheel) உரை-or, கும்மல்-cumulus, சமம்-similis, சேர்-ser, தா-do, நாவாய்-navis, படகு-barca, புரை-par (èqual), மன்-man (remain), முதிர்-maturus. மெல்-mellow (soft.) வல்-val (strong), வரி (வளை)-vers (turn).

கிரேக்கம்

அரசன்-arthos, arkhon, குரு (நிறம்)-chroma, கோணம் -gona, சாயை (நிழல்)-skia, தச்சன்-tekton, திருப்பு-trepos துரப்பணம்-trapanon, தொலை-telos, நரம்பு-neuron, நீரம்-neros (wet), பல-polus பரி-peri (round), பறழ்-proles, பாழி (நகரம்)-polis, புரை-poros, மத்திகை-mastix mastigos மால்-melas (black), விழை-philos.

பொது

பல தமிழ்ச் சொற்கள் மேலையாரியத்தில் பல மொழிகட்கு அல்லது மொழிக் குடும்பங்கட்குப் பொதுவாகவும் வழங்குகின்றன.

எ. டு:

அ. (சேய்மைச் சுட்டு)-E. a (that), Du. a (dat). Ger. a (das).

இ. அண்மைச் சுட்டு)-E. i (this,) O E. (hit), Goth (hita) L (hic)

ஈ. (அண்மைச் சுட்டு)-E. (these).

இதோள் (இவ்விடம்)-E. hither. OE. hider, L. citra.

(இய்)-இயல்-L. i, e; Gr i ei; Goth. i. Slav. i, Lith ei.

இயலுதல் = இயங்குதல், நடத்தல், செல்லுதல். உய்(இய்) -இய-இயங்கு. இய-இயவு = செலவு, வழி. இய-இயவுள் = வழி உய்தல் = செல்லுதல். உய்த்தல் = செலுத்துதல்.

ஏர் (கலப்பை). E ear. L ar.

ஒன்-ஒன்னு, ஒன்று-E one. Du een, Ger ein. L. unus, Gr oinos

கொத்தி = பூனை (கன்னடச் சொல்). பகலிற் குருடு போலிருப்பது என்பது இதன் பொருள். L. catta; E cat

சாலை-Ger saal It sala, salone, F. salon, E. saloon, E. hall Du. and Dan hal

பதி-பதம்-பாதம். நிலத்திற் பதிவது பதம் அல்லது பாதம். பாதம்-பாதை = வழி. பதம் = வழி. அடித்தடம் தொடர்ந்து பதிவதனால் ஒரு வழி அமையும். அடி என்பது ஒரு பொருளின் அடிப்பாகம். அது, கால், பாதம், கீழிடம் முதலிய பல பொருள்களையுணர்த்தும். பாதம் என்பது நிலத்திற் பதியக்கூடிய பரந்த அடிப்பகுதி. பாதம் வைத்த விளக்கு என்னும் வழக்கை நோக்குக. அடி மரம் பருத்தது, மரத்தடியில் உட்கார்ந்தான், மேடைக்கடியிற் பார், அடிநாளிலிருந்து சொல்லிவருகின்றேன், என்னும் வழக்குகளில் பாதம் என்னும் சொல் பொருந்தாமை காண்க.

பதம், பாதம்-Gr. podos. L. pedis. O. E. fot (E. foot), Ger. fuss.

பாதை-E path OE. paeth Dut. pad. Ger pfad.

பொறு-O E, O H G, ber, Goth. bair E. bear, L. fer, Gr. pher,

போடு-E. put. pot. pyt; Dan putte. L. pon.

போகவிடு-போக்கு-போடு.

இங்குக் காட்டிய சொற்களுள், கீழையாரியத்தில் இல்லாதனவு முள. அவை மேலையாரியத்தினின்று பிரிந்து வரும் போது கீழையாரியத்தால் இழக்கப்பட்டனவாகும்.

சில தமிழ்ச் சொற்கள் மேலையாரியத்தினும் கீழையாரியத்தில் திரிந்திருப்பது, பின்னதன் பின்மையைக் காட்டும்.
எ. டு:

அம்மா-O. G amma-Sans. amba

காண்-O. E. con-cna (metathesis)-E. know,

O H G cna, L. and Gr. gno-Sans jna (ஜ்ஞா).

முழுகு-L. merg. Sans majj

இரும்(பு)-O E iren. O. G. er. Mod Ger eisen. Goth eisarn

L. aer. aes; Sans. ayas.

வல்-L. val Sans. bal.

சில தமிழ்ச் சொற்கள் கீழையாரியத்தினும் மேலையாரியத்தில் திரிந்திருப்பது, வட திரவிடம் வட மேற்காய்ச் சென்று படிப்படியாய்த் திரிந்து ஐரோப்பாவில் முழுவாரியமாய் மாறியதையும், கீழையாரியம் இந்தியாவிற்குட் புகுந்தபின் வடஇந்திய வடிவத்தைச் சில சொற்களில் மேற்கொண்டதையும், உணர்த்தும்.

எ. டு.

உம்பர்-வ. தி. ஊப்பர், Tent. upper, over; L. Super, Gr huper, Sans. upari.

ஆயிரம். அயிர்-(அயிரம்)-(அசிரம்). North Indian, hazar, Persian, hazar Gr. kesloi, kilioi; Sans. sahasra (sa + hasra).

சில தமிழ்ச் சொற்கள் தியூத்தானியத்தினும் இலத்தீனில் திரிந்திருப்பது, வடமேற்கிற் சென்ற திரவிடம் ஐரோப்பாவின் வடமேல் மூலையை முட்டித் திரும்பியதையும், திரும்புகாலில் கிழக்கு நோக்கித் திரிந்ததையும் காட்டும்.

எ. டு:

துருவ-Tent. through, L trans.

துள்–துரு-துருவு-துருவ (வி. எ.).

துருத்து-Tent. thrust, L. trud (o) (intrude, protrude, obtrude etc).

2. வேதவாரியத் தமிழ்ச் சொற்கள்

வேதவாரியர் வட இந்தியாவிற்குட் புகுந்தபோது (கி. மு. 2000-1500), அங்கு வாழ்ந்தவருட் பெரும்பாலார் திரவிடரே. பெலுச்சித்தானத்திலும் வங்காளத்திலும் இன்றும் திரவிட மொழிகள் வழங்குவதையும், காளிக்கோட்டம் (Calcutta) என்னும் பெயர் தூய தமிழ்ச் சொல்லாயிருப்பதையும், ஊன்றி நோக்குக.

ஆரிய வேதம் வட திரவிடம் வழங்கும் நாட்டில் இயற்றப் பெற்றமையால், நூற்றுக்கணக்கான தென் சொற்கள் அதிற் புகுந்துவிட்டன.

எ. டு: அகவு, அவை-சவை, இலக்கு, உத்தரம், உரு-உருவு-உருவம், உலகு, உவணம்-சுவணம், கடுகம், காலம், கருள் (கருமை), குமரன்-குமரி, தக்கணம், தண்டம், தூது, நடம், பக்கம், மண்டலம், மந்திரம், முத்து-முத்தம், வட்டம்.

விரிவஞ்சி இவற்றுட் சிலவற்றிற்கே இங்கு மூலம் விளக்கப் பெறும்.

அமலுதல் = நெருங்குதல். அமர்தல் = நெருங்குதல். அமைதல் = நெருங்குதல், நிறைதல், பொருந்துதல், சேர்தல், கூடுதல் திரளுதல். அமை = திரண்ட கெட்டி மூங்கில்.

அமை-அவை = கூட்டம். ம-வ, போலி. ஒப்புநோக்க:

அம்மை-அவ்வை, குமி-குவி.

அவை-சவை. உயிர் முதற் சொற்கள் சொல்லாக்கத்தில் மொழி முதல் மெய்கள் ஏறப்பெறும். அவற்றுள் ஒன்று சகரம்.

எ. டு: உருள்-சுருள், உவணம்-சுவணம், ஏண்-சேண், ஏமம்-சேமம். சபா (Sabha) என்னும் சொற்கு வடமொழியிற் பொருத்தமான வேரில்லை.

உத்தரம் = உயரம், உயரமான வடதிசை. தக்கணம் = தாழ்வு, தாழ்வான தென்திசை. குமரிமலை முழுகிப் பனிமலை தோன்றிய பின், நாவலத்தில் வடதிசை யுயர்ந்து தென்றிசை தாழ்ந்தது. தக்குத் தொண்டை = தாழ்ந்த குரல். குடமலையால் உயர்ந்திருப்பது மேற்றிசையென்றும், குணகடலால் தாழ்ந்திருப்பது கீழ்த்திசை யென்றும் வழங்கி வருதல் காண்க.

உருத்தல் = தோன்றுதல். உரு = தோற்றம், வடிவம், வடிவுடைப் பொருள். உரு — உருவு — உருபு = வேற்றுமை வடிவம், அதைக் காட்டும் இடைச்சொல். ஒ. நோ: அளவு — அளபு. உருவு — உருவம். தமிழிலக்கணம் ஆரிய வருகைக்கு எண்ணாயிரமாண்டு முற்பட்டது.

உலவுதல் = வளைதல், சுற்றுதல். உலா = நகரைச் சுற்றி வரும் பவனி. உலக்கை = உருண்ட பெரும்பிடி. உலம்வா — உலமா. உலமருதல் = சுழலுதல். உலவு — உலகு = உருண்டையாயிருப்பது அல்லது சுற்றி வருவது. ஒ. நோ: கொட்குதல் = சுற்றி வருதல். கொள்—கோள். உலகு-உலகம். லோக் என்னும் வடசொல், பார்த்தது அல்லது பார்க்கப்படுவது என்னும் பொருளது. அது நோக்கு என்னும் தென் சொல்லின் திரிபாம்.

இனி, உலகம் வட்டமாயிருக்கும் ஞாலம்(பூமி)என்றுமாம். ஒ. நோ: ''கடல் சூழ் மண்டிலம்'' (குறுந்தொகை, 300).

உகரம் உயரத்தைக் குறிக்கும் வேர்ச் சொல். எ. டு: உக்கம் = தலை, உவ்வி = தலை, உத்தி = ஒருவகைத் தலையணி உச்சி, உம்பர், உவண், உயர்.

உவண் = மேலிடம். உவணை = தேவருலகம். உவணம் = உயர்ச்சி, பருந்து, கலுழன், கழுகு. பருந்து உயரப் பறக்கும் பறவைகளுள் ஒன்று. ''உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?'' என்பது பழமொழி உவணம்-சுவணம் = பருந்து, கலுழன், கழுகு. உவணம் (சுவணம்) முல்லை நிலத்

துப் பறவையாதலால், அந்நிலத் தெய்வமாகிய மாயோனுக்கு ஊர்தியாகக் குறிக்கப்பெற்றது.

சுவணம் என்னும் சொல்லை வடமொழியாளர் சுபர்ண என்று திரித்துப் பின்பு சு + பர்ண என்று பிரித்து, நல்ல இலை, அழகிய இலையுள்ளது, அழகிய இலைபோன்ற சிறகையுடையது, என்று பொருந்தாப் புளுகலாகக் கரணியங் காட்டுவர். கடுகளவேனும் பகுத்தறிவுடையார், நகைச்சுவையான இச்சொற் பொருட் கரணியத்தைக் காணின் நகாதிரார்.

கும்முதல் = திரளுதல். கும் — குமர் — குமரன் = திரண்டவன், இளைஞன். குமரி = திரண்டவள், இளைஞை. ஒ. நோ. L. Virginem E. Virgin from Virgo to swell. விடைத்தல் = பருத்தல். விலங்கினத்திலும் பறவை யினத்திலும் திரண்டு இளமை யாயிருப்பவற்றை விடையென்பது மரபு. ஆடு, மாடு, குதிரை, மான், பூனை, கோழி, பாம்பு முதலியவற்றுள், திரண்டு இளமையாயிருப்பவற்றை விடையென்பது இருவகை வழக்கிலு முண்மை கண்டுகொள்க. விடை — விடலை = இளங்காளை, மறவன் (வீரன்) இளைஞன், 16 முதல் 30 ஆண்டு வரைப்பட்டவன், திண்ணியோன் இளநீரை விடலை யென்பது நாஞ்சில் நாட்டு வழக்கு. உயிரினங்களிற் பெரும்பாலும் ஆண் பருத்திருப்பதால், விடையெனபது இளவாளையே சிறப்பாகக் குறிக்கும். குமர் என்னும் சொல் உயர்திணையில் இருபாற் பொதுவாம். குமரி என்பது, இளமை பற்றிச் சில மரப் பெயர்க்கும், புதுமை (முதன்மை) குறித்துச் சில தொழிற் பெயர்க்கும், அழியாமை குறித்துச் சில இடப் பெயர் பொருட்பெயர்க்கும் அடைமொழியாம்.

குமரன், குமரிஎன்னும் தமிழ்ச் சொற்களை, வடவர் குமாரன் குமாரி என நீட்டி, முறையே தமிழ்ப் பொருளொடு மகன், மகள் என்னும் பொருளிலும் வழங்கி வருகின்றனர்.

முள் — முண்டு — முண்டை = முட்டை. முள் — முட்டு — முட்டை.

முண்டு — மண்டு — மண்டி. மண்டியிடுதல் = காலை மடக்குதல்.

மண்டு — மண்டலம் = வட்டம், வட்டமானபொருள். மண்டலம் — மண்டிலம்.

மண்டலம் — மண்டலி. மண்டலித்தல் = வளைத்தல்.

மண்டலம் என்பது இருக்குவேதப் பெரும்பிரிவின் பெயர். தமிழ்ச் செய்யுளில் எல்லாவடிகளும் அளவொத்துவரும் யாப்பு மண்டிலம் எனப்படும்.

> "ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
> குட்டமும் நேரடிக் கொட்டின என்ப." (செய்.114)

"மண்டிலம் குட்டம் என்றிவை யிரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர்." (செய். 116)

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள். "என்ப", "என்மனார் புலவர்" என்னும் வழி நூன் மரபுரைகள், 'மண்டிலம்' என்னுஞ் சொல் முதனூற் குறியிடென்பதைத் தெரிவிக்கும். முதனூல் ஆரிய வருகைக்கு முற்பட்டதென்பது முன்னரே கூறப்பட்டது.

மண்டலம், மண்டிலம் என்னும் இருசொல்லும் வட்டமான பொருள்களையும் தோற்றத்தையும் செலவையும் காலத்தையும் இடத்தையும் தொன்று தொட்டு இருவகை வழக்கிலும் குறித்து வந்திருக்கின்றன. நாற்பது அல்லது நாற்பத்தைந்து நாட் கொண்டது மருத்துவ நூல் கூறும் காலமண்டலம். தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என்பன பழமையான இட மண்டலம். "மண்டிலத் தருமையும்"என்பது தொல்காப்பியம் (977).

தள்-தாள் = மரஞ் செடி கொடி பயிர் புல்லின் தடித்த அடி; இலை பூவின் அடி தாளை ஒட்டிய பயிர் புல்லிலை; தாள் போன்ற கால், விளக்குத்தண்டு முதலியன.

தள்-தண்டு = செடி கொடிகளின் திரண்ட அடி. (எ. டு: கீரைத்தண்டு.), தண்டு போன்ற பொருள் (எ. டு: விளக்குத் தண்டு).

தண்டு-தண்டான் = தண்டுக்கோரை. தண்டுதல் = தண்டு போல் திரட்டுதல், பணத்தைத் திரட்டுதல்.

தண்டு = தடி, படகு வலிக்குங்கோல், தண்டினால் தாங்கும் பல்லக்கு, தண்டுபோல் திரண்ட படை.

ஒ. நோ: club = stick association. staff = stick. body of officers

தண்டு-தண்டன் = கோல்.

தள்-தட்டு, தட்டை = சோளப் பயிர் போன்றவற்றின் திரண்ட அடி.

தண்டு-தண்டி = பருமன் மிகுதி, தடி, வீணைக் கோடு, தடித்த மூங்கில்தாங்கும் பல்லக்கு. தண்டி-தண்டியம் = தாங்கும் கட்டை. தண்டி-தண்டிகை = பல்லக்கு. தண்டி-தண்டியல் = தண்டிகை.

தண்டித்தல் = பருத்தல், தடியால் அடித்து ஒறுத்தல், ஒறுத்தல்.

தண்டி-தடி. ஒ. நோ: பிண்டி-பிடி, கண்டி-கடி, மண்டி-மடி, அண்டி-அடி. இது தொகுத்தல் திரிபு.

தடித்தல் = பருத்தல். தடியன் = பருத்தவன், பருத்த பூசணிக்காய். தடி-தடிப்பு-தடிப்பம். தடி-தடிம்பு-தடிம்பல்.

தண்டு-தண்டம் = தடி, படை. தண்டத்தலைவன் = படைத் தலைவன்.

தண்டி + அம் = தண்டம் (ஒறுப்பு). தண்டி + அனம் = தண்டனம் (ஒறுப்பு). தண்டி + அனை = தண்டனை (ஒறுப்பு).

தண்டா என்பது கல்வெட்டுக் குறிக்கும் மூவகைத் தண்டனைகளுள் ஒன்று.

தள் என்னும் வேர்ச்சொற்கே பருத்தற் பொருளுளது.

தள்-தளம் = கனம், திண்மை (சீவக. 719, உரை)

தளம்-தடம் = பருமை. "தடவும் கயவும் நளியும் பெருமை". (தொல். 803).

தடா = பருமை. (கல்லாடம், 8, 15), பெரும்பானை (திவாகரம்).

தடவுத்தாழி = பெருஞ்சாடி.

தள்-தாள்-தாளி = கூந்தற்பனை. தாளி = தாழி = பெரும்பானை

தாள்-தாட்டி = பருமை, வலிமை.

'தழங்கு' என்னும் சொல் 'முழங்கு' என்பதுபோல் ஒலிப் பெருமையை உணர்த்தும்.

மூன்னுதல் = கருதுதல், எண்ணுதல்.

மூன்னம் = மனம் (திவா). முன்னம்-முனம்-மனம்.

மூன்-மன். மன் + திரம் = (மன்றிரம்)-மந்திரம்.

ஒ. நோ. மன்-மன்று-மந்து-மந்தை.

முன்று-முந்து, பின்று-பிந்து.

மந்திரம் = இன்னது ஆகவென்று உறுதியாய் எண்ணுதல், அங்ஙனம் எண்ணிச் சொல்லும் உரை.

> "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் (1434);

> "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்."

என்னும் திருக்குறளையும் (666); திருமூலர் திருமந்திரத்தையும் மந்திரம் சொல்லிச் சபித்துவிட்டான், மந்திரத்தினுல் வாயைக் கட்டிவிட்டான் என்னும் வழக்குகளையும்; மந்திரி, மந்திரம் (சூழ்வினை) என்னும் அரசியற்சொற்களையும், கூர்ந்து நோக்குக.

வாய்மொழி என்பது மந்திரத்தின் மறுபெயர். நாலாயிரத் தெய்வப் பனுவலில் நம்மாழ்வார் அருளிச்செய்த முதலாயிரம் திருவாய்மொழியெனப் பெயர் பெற்றிருத்தல் காண்க.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்)

இலக்கியம்

எண்சுவை எண்பது.

3. அச்சம்.

உருவங் குலைந்தற்றால்! உள்ளமலைந் தற்றால்!
இருகண் சிவந்தற்றால்! ஏந்துமிடை என்னோ?
பருவம் அணைந்ததவள் பாங்கு! (1)

குடையேந்து நல்லீர்! கொடுவழிகண் டீரோ;
நடையேந்து பூங்கால், நலிவுடற் செங்கட்
படையேந்து பாவையிப் பால்? (2)

---

3. அச்சம்.

உள்ளங்கொண்ட ஒருவன்பின், அன்னையையும், சுற்றத்தையும் மறந்து சென்ற மகளை, அவள் போன வழி நினைந்தும், அதனால் மேவும் பழி நினைந்தும் அஞ்சுதல் அச்சம் எனலாயிற்று.

1) அன்னையைப் பிரியுமுன் மகள் அதுபற்றி மிகவும் எண்ணி இடர்ப்படுவாளாதலின், உருவம் குலைதலும், உள்ளம் அலைதலும், கண்கள் உறக்கமின்றிச் சிவத்தலும் இயல்பாயின. இவைகண்ட அன்னை இவற்றிற்குப் பருவம் காரணமாமோ என்று கருதுவாளாகி **பருவம் அணைந்ததவள் பாங்கு** எனக்கூறி அமைவாளாயினள்.

இப்பாட்டு பிரிதற்கு முன் தோன்றிய நிமித்தம் என்க.

2) சென்றான் பின் சென்றாளைத் தேடி அன்னையுஞ் சென்றாள்; வழியில் எதிர்வரும் பெரியோரை வினவியது.

பழியறியீர்! காட்டீரோ? பாரறியாள்; மேவும்
இழிவறியாள்; பெற்ருேர் இடும்பறியாள்; வாழ்க்கை
வழியறியாள் போன வழி. (3)

குடையேந்து நல்லீர் என்றது, கடுங்கோடைக் கால மாதலின் வெயில் காரணம் பற்றி ஏந்திய குடையினராக வந்தாரை. விளித்தது. இனித் தன்மகளை, ஒருவனோடு போகக் கண்டிருப்பின் அதைக் கரவாது கூறல் வேண்டு மென வேட்டாள், நல்லீர் என விளித்தலாயினள்.

கொடு வழி கண்டீரோ – என்றது அவர் போன வழிக் கொடுமை தோன்றக் கூறியது.

நடை யேந்து பூங்கால் – என்றது, இதற்குமுன் ஏற்காத நடையை இன்று ஏந்தினள் என்பது பற்றி. பூங்கால் என்றது அதன் ஆற்ருமை தோன்ற மென்மை கூறியது.

கொடுவழி என்று முன்கூறிப் பூங்கால் என்று பின்கூறியது உன்னற் பாலது. நலிவுடல் – என்றது குடையேந்து வெயிற் கொடுமைக்கு ஆற்ருஉடல் என்பது பற்றி.

செங்கட் படை ஏந்து பாவை – என்றது அவட்குத் துணையாக நின்றது அவளின் கண்களாகிய படை ஆதல் பற்றியாம். அக் கண்களும் இப்பால் ஒருவர்க்கு அடிமை யானதைக் குறிப்பால் கூறினள் என்க.

3) நல்லவர்களைக் 'கண்டீரோ' என்று வினவிய அன்னை யிடம் அன்னோர் கண்டோம் என மொழிய, பின்னுமவரைக் காட்டீரோ வென்று கூறுவதாகும் இப்பாடல்.

காட்டீரோ என்ற பின் வினவினால் 'கண்டோம்' என்பது உய்த்துணர்தலாயிற்று.

பழியறியீர்! என்றது – பழியறியாத சான்ருேராக இருத்தல் பற்றியும், பொய் கூறுதலும் பழியே ஆதலினால், அது கூற முன் வாரார் என்றல் பற்றியும் என்க.

பாரறியாள் என்றது உலகப் பெருக்கத்தையும், அவள் தனிமையையும் நினைவு கூர்ந்து.

மேவும் இழிவறியாள் – என்றது, அவள் சென்றதால் மேவும் இழிவையும் உணரவியலாத சிறியாள் என்பது பற்றி.

பெற்ருேர் இடும்பறியாள் – என்றது பெற்றவர் பால் கொண்ட அன்பினும், அவள் கொண்டான் பால் கொண்ட

பிறக்குங்கொல் உள்ளப் பெருந்துணிவு! பெற்ருேர்
துறக்குங்கொல்! கண்துஞ்சாத் தொல்லைமகிழ் தாயை,
மறக்குங்கொல் பெற்ற மகள்? (4)

கலைமான் அடைவறியாக் கள்ளிநிழல் தேடி
அலைகான் அடைந்தவளோ டாற்றுங்கொல்; ஆற்ருள்
முலைமேண் வளர்ந்த முலை. (5)

மிகையான அன்பினுல் இவர் துன்பத்தை உணராள் என்றபடி.

வாழ்க்கை வழியறியாள் போனவழி: என்றது வாழ வேண்டிய முறைமை யறியாது, கொடுங்கானம் அடைந்த னள் என்பதுபற்றியும், அவ்வாறு போனதும் மேற்கொண்டு செல்ல வழியறியாது போயினள் என்பது பற்றியுமாம்.

4) இனி வழி கண்டு சென்று மகளைக் காணுத தாய் நொந்து கூறியது இப்பாடல் என்க.

பெருந்துணிவு என்றது தன்னுடைய இயலாமை பற்றியும், தன்னினும் அன்ருள் துணிவு கொண்டாள் என்பது பற்றியுமாம். பெற்றவரைத் துறத்தற்கும், பெற்ருரிலும் சிறந்த தாயை மறத்தற்கும் அத்துணிவு முன்னின்றதால் **பெருந்துணிவு** என்ருள். **கண்துஞ்சாத் தொல்லை மகிழ் தாய்** என்றது தாயாகிய தான் அவளைப்பெற்றுப் பேணிக் காத்துக் களித்தலில், கண்துஞ்சாததும்,தொல்லைகளை மகிழ் வெனக் கருதி இருந்ததும் விளங்கக் கூறிய வாறு. இத் துணைப் பெருமை யுடையவளை மறத்தல் அத்துணை எளிய தன்று என்று உணர்த்தி, அவ்வாறு மறத்தற்குத் துணிவு வேண்டும் என்று நிறுத்தி, அத்துணிவும் பெருந்துணிவா தல் வேண்டும் என்றிறுத்தி, அப் பெருந்துணிவும் அச்சிறிய வள் பால் பிறந்ததே என்று முடித்துக் கூறின வென்க.

5) இனி அவள் போனவழி பற்றிய அச்சம் உரைக்கப் புகுந்த னள் என்க. கலைமான் அடைவு அறியாமல் காய்ந்த கள்ளி யின் குறுநிழல் தேடி அலையும் பெற்றி வாய்ந்த கானம் அவள் சென்றது என்பாள்.

ஈண்டுக் **கலைமான்** என்றது தன்மகளையும், **கள்ளி நிழல் தேடி அலையும் கானம்** என்றது அவள்போன வழியையும், **அடைவு அறியாமல்** என்பது மணந்து சிறத்தலாகிய இல் லறப் பெருமையை அறியாமல் என்பதுவும் குறிப்பால் உணர்த்தப் பெற்றதென்க. ஆற்ருள் – பொறுக்காள்.

மாகைக் களிறு மரஞ்சாய்ப்ப, மண்டுபெடைக்
கூகை யலறக் குலைநடுங்கும்; என்னேவென்
தோகைக்கு வந்த துணிவு. (6)

இருங்கானின் நச்சுக் கிரைப்பட்டாள் எம்பெண்;
மருங்கொசிந்து சாயும் மடநல்லாய், ஆற்றேன்
கருங்குழலாள் வந்த கனவு! (7)

என்னடி பேதை இழைப்பாளோ இன்றுதான்
முன்னடி வைக்க முரணடி இல்லாமற்
பின்னடி வைக்கும் பிழை. (8)

முலைமேல் வளர்ந்த முலை என்றது தான் வளர்த்துக் காத்த வகையினையும், தன்மகள் இளமையையும் கூறியதென்க. ஒருத்தி உறுப்பு நலன்களைக்கூறுதல், தாய் ஒருத்திக்கே அமையும் ஆதலின், அவள் உறுப்பெதிர் வைத்துக்கூறுதல் ஈண்டுக் குற்ற மாகாது என்க.

6) மா – கரிய. கை – துதிக்கை. களிறு தன் கையால் வீழ்த்தியது தோன்ற கைக்களிறு என்று கூறிய தென்க.

மண்டு பெடைக் கூகை – அண்டிய பெடைக் கூகை. மடம் பொருந்திய பெடைக் கூகை எனினும் பொருந்தும்.

மகளை வேற்றார் அழைத்துச் சென்றவனைக், கிளையை முறிக்கும் யானைக்கும். அவனொடு போகித் துயருறும் மகளை மண்டு பெடைக்கும் குறிப்புக் காட்டிக் கூறினள் என்க. இல்லறப் பெருமையாகிய கிளையைப் பற்றி வீழ்த்தி, அதனுட் பொருந்திய பெடைக் கூகையை அலறியஞ்சும்படி அவன் செய்தனன் என்று கொள்க. அறிவற்ற மகளின் செயல் குறிக்க மண்டு பெடை என்றுள் என்க.

கூகை அலறக் குலைநடுங்கும் என்றது தன் மகளின் எளிய நெஞ்சம் குறித்தது.

7) அவள் வழி எண்ணி அஞ்சி யுறங்கிய தாய், கனவு நிலை உணர்த்தியது. மருங்கொசிந்து சாயும் மடநல்லாய் - என்றது மகடூஉ முன்னிலை. மகளின் தோழி பால் தாய் உரைத்தது இப்பாடல் என்க.

இருங்கானின் நச்சுக்கு இரைப்பட்டாள் எம் பெண் – என்றது அவள் கண்ட கனவாம்.

8) என்னடி பேதை – என்றது மகடூஉ முன்னிலை.

இன்றுதான் – என்றது மகள் கொண்டவனை; பழி நாணுப் பெற்றியன் ஆதலின் இன்றுதான் என்றுள்.

அஞ்சுவல்யான் ஆயிழைக்கே! அஞ்சேன் அவள்பிழைக்கே
கொஞ்சி, தலைநுகரும் கூன்ருய்க்கே, யான்பெற்ற
வஞ்சி யிழைத்த வகை! (9)

நடுங்கான் கொடுவாழ்வோ நண்ணினள்; நற்ருய்
கெடுங்காண் எனும்நினைவு முன்னினள்! கோதை
படுங்காண்யான் அஞ்சும் பழிக்கு. (10)

துரை மாணிக்கம்

முன்னடி வைக்க முரணடி யின்றிப் பின்னடி வைத்தலைப் பிழை யென்றது, இன்ருதான் பின் போயினதுபற்றி என்க. இது மிகுந்த இழிவாம். இனியான் பின் அவ்வாறு போதல் மிகு சிறப்பாயிற்று; நூல் இனியான் ஒருவன் அவ்வாறு கூட்டிச் செல்லான் என்பதைக் குறிப்பால் உணர்த்தினன்.

9) அவள் துயரம் எண்ணுங்காலை அஞ்சுகின்றேன். அவள் பிழையினை உன்னுங்காலை அஞ்சாதொழிகின்றேன். வஞ்சி இழைத்தது இந்த வகைதான் – என்று கூட்டுக.

10) நடுங்கான் கொடு வாழ்வை அடைந்ததற்கும், நற்ருய் துன்புறுவள் என்ற நினைவும் எண்ணுத துன்பத்திற்கும், அவள் படும் தண்டனை பழியே ஆதலின், **படுங்காண அஞ்சும் பழிக்கு** என்ருள்.

இப்பழிக்குத் தான்மட்டும் அஞ்சுவாள் என்று குறிக்க '**யான் அஞ்சும் பழிக்கு**' என்ருள்.

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, மந்திரம் என்னும் சொல் தமிழில் அரசியல், மதவியல், இலக்கணம் ஆகிய முத்துறைக்குரியதாகும். சேர சோழ பாண்டிய வரசுகள் வரலாற்றிற்கெட்டாத் தொன்மை வாய்ந்தவை. பண்டை நாளிற் கிழக்கத்திய நாடுகட்குத் தமிழ் நாட்டொடு அரசியல் தொடர்பும் வணிகத்தொடர்பும் இருந்ததினால், மந்திரி என்னும் சொல் மலேயா சீனம் முதலிய நாடுகளிலும் பரவியிருக்கின்றது. Mandarin என்னும் ஆங்கிலச்சொல் போர்த்துக்கீசிய வாயிலாய்ப் பிற்காலத்திற் புகுந்ததாகும். அதற்குமுன் மேலையாரியத்தில் இச்சொல் இல்லை. [தொடரும்]



முல்லைக் கன்னி

எழுதியவர்: புத்தூரான்
(விலை. 50. சல்லிகள்)

வில்லவன் வெளியீட்டகம்
கம்பம் புதுப்பட்டி, மதுரை மாவட்டம்

இக்காலத் தமிழ் இளைஞர் பலர் பாடல் எழுதுவதை ஒரு நாகரிகமாகக் (fashion) கருதுகின்றனர். காலுறையும் குப்பாயமும் கருங்கண்ணாடியும் அணிதல் எவ்வாறு நாகரிகமாகக் கருதப் படுகின்றதோ அவ்வாறே பாடல் எழுதுவதும் ஒரு சிலரால் நாகரிகமாகக் கருதப்பெறுகின்றது. அவ்வாடை யணிகள் எவ்வாறு போலிமையின் வெளிப்பாடாக உள்ளனவோ அவ்வாறே அத்தகைய பாடல்களும் உள்ளன. காளைப் பருவத்தே நெஞ்சில் இடங்கொள்ளும் பகற் கனவுகளையும், அறிவின் வழி அமையாது, ஆர்ப்பரிக்கும் உணர்வின் வழிக் கிளர்ந்தோங்கும் வலிவற்ற நிலையற்ற சீர்திருத்த, முற்போக்கு எண்ணங்களையும் கலந்து சொற்பகட்டாக (glibly) எழுதுவது இற்றைநாள் இளைஞர்க்குப் பழக்கமாகிவிட்டது. வளர்ச்சியின் தொடக்க நிலையில் ஓரளவுக்கு இஃதியல்பே என்றாலும் அத்தகைய பாடல்கள் நூல் மதிப்புப் பெறத்தக்கன அல்ல.

பழைய நாடக மேடைகளில் இயல்புக்குப் பொருந்தாத சில மேடை மரபுகளும் வலிந்த வழக்குகளும் இருந்து வந்ததுபோல இக்கால ''மறுமலர்ச்சி இளைஞர்''தம் பாடல்களிலும் சில வழக்குகள் பயில்கின்றன. பழகிப் பொருளற்றுப்போன உவமைகளையும் வலிந்த அடி முடிபுகளையும் அமைத்தல் மட்டுமல்லாமல் புதியனபோல் மருட்டும் உவமைகளையும் தேடிப் பிடித்துப் புகுத்திக் கொள்தலும் இவ்வகையினவாம். இப் படிநிலைகளை யெல்லாம்கடந்து மேலேறி உள்ளத்தை உண்மைத்திறனால் பிணித்து நிற்பதே பாட்டென்னும் பெயர்க்குத் தகுதி வாய்ந்ததாகும்.

முல்லைக் கன்னி என்னும் இப்பாட்டு நூல் அத்தகுதியினைப் பெற்றிருப்பதாகக் கூற முடியாது. தனிப்பாடல்களும் கதைப் பாட்டொன்றும் அடங்கிய இச் சுவடியில், எழுதியவரின் சீர்திருத்தத் துடிப்பினையும் பாடல் ஆர்வத்தினையும் தவிரச் சிறப்பாகக் கூறுவதற்கு எதுவுமில்லை. மொழிச் செறிவிலும் யாப்பமைதியிலும் தேவையான கவனம் செலுத்தப் பெறவில்லை. குறில் நெடில் இணைந்த நிரையசை நடுவாகிய மூவசைச் சீர்

களும் (இன்று வாழும், அதற்குமாருய், அதிகமான, கண்டு நானும் போன்றவை) நாஞவித. இன்பக் கதைபோன்ற கனிச் சீர்களும் எண்சீர் விருத்தத்தில் ஓசையைக் கெடுத்து விடுகின் றன. ஒற்றுப் பிழைகளும், குற்றியலுகரப் புணர்ச்சி விதி கரு தாமையான் வந்த ஓசைப் பிழைகளும் மிகுதியாகக் கிடக்கின் றன. வட சொற்கட்கோ வரம்பேயில்லை பாவலன் (கவிஞன்) என்ற பெயரைத் தமக்கிட்டுக் கொள்வதில் மிக ஆவல் காட்டும் இக்கால இளைஞர்கள் அதற்குரிய தகுதியைத் தமக்காக்கிக் கொள்வதில் மட்டும் ஆர்வம் காட்டாமை ஏனோ தெரியவில்லை!

திரு. முடியரசன் வழங்கியுள்ள முன்னுரை பயனுடையது. ஆனல் திரு. இராமநாதன், ''பாடல்கள் செஞ்சொற்களால் அமைந்து கருத்தாழமும் கற்பனைத் திறமும் கலந்து சிறந்து விளங்குகின்றன'' என்று கூறியிருப்பது வெறும் புகழுரையே! முன்னுரையாளர்கள் பொறுப்பற்ற முறையில் இத்தகைய வீண் புகழ்ச்சியுரைகளை வழங்குவது பாட்டெழுதுவோரின் உண்மை வளர்ச்சியைக் கெடுக்கின்றது என்றுதான் கூறவேண்டும். ○

● ● ●

கவிதைக் கனி

எழுதியவர்: பசும்பொற்கிழார்.
விலை 16 காசு

(பறம்பைத் தமிழ் மறைக் கழக வெளியீடு.)

இளைஞர்க்காய அறிவுரைப் பாடல்கள் 39 அடங்கிய சுவடி இது. மேற்கூறிய நூலிலுள்ள குறைகளே இதனிலும் காணப் படுகின்றன. ஆயினும் பாடல்களில் சற்று உயிர்ப்பு இருப்ப தாகக் கூறலாம். பாடல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் புதியன அல்ல. அற நூற் கருத்துக்களே. எனினும் அவை என்றும் தேவையானவையே. மற்றும் சிறுவர்க் கேற்பத் தெளி வாக அமைக்கப் பெற்றுள்ளன. எனினும் அமைப்பு முறையில் ஒழுங்கு பின்பற்றப் பெறவில்லை. கட்டுக்கோப்பின்றி எண் ணங்கள் சிதறிக் கிடக்கின்றன்.

பாடலில் திட்பமும் சொற்களில் கூர்மையும் இல்லை. கட்டித் தயிர்போல் அமையவேண்டிய பகுதிகள் மோர்போல் பெருக்கப் பெற்றிருக்கின்றன. எதுகைபற்றியும் யாப்புப் பற்றியும் சொற்கள் பயன் கருதாமலும் நுண்மை நோக்கப் பெருமலும் புகுத்தப் பெற்றிருக்கின்றன. ஆயினும் உவமை நலம் வாய்ந்து பாடல் அடிகள்சில படிப்பவர் நெஞ்சில் நிற்கக்கூடும்.

தவ்வும், கெதியுடல், 'மதியம்' (நண்பகல்) போன்ற வழுச் சொற்களும் வடசொற்கள் பலவும் காணக்கிடக்கின்றன. ஆசிரி யர் இக்குறைபாடுகளை நீக்கித் தம் எண்ணத்தைச் செறித்துச் செதுக்கிய கல்லுருப்போல் பாடல்களை அமைப்பாராயின் சிறப் படைதல் கூடும். ''கல்லாடன்''

மூன்று மடல்கள்.

புலவர். ஆ. சிவானந்தம் (B. O. L.)
பெத்த நாயக்கன்பாளையம்.

1. அவள் நெஞ்சம்.

அன்னமே, என்தோழி ஆருயிரே! இம்மடலை
முன்னமே சொன்னபடி முல்லை வரைகின்றேன்!
அன்னையாம் காவிரியின் ஆடிப் பெருக்கன்று
புன்னை மரநிழலில் பேசி இருந்ததுவும்
பின்னையென் இல்வாழ்வு பற்றிநீ கேட்டதுவும்
சின்னக் குழவியாய்நான் வெட்கிக் குனிந்ததுவும்
இன்றுமென் நெஞ்சில் இனிமையாய்த் தோன்றுதடி!
அன்றேநான் ஐயுற்றேன்! யாரிடமோ என்வாழ்வுக்
கோமகனைப் பற்றிக் குறிப்புகள் பெற்றுள்ளாய்!
ஆம்அவனே! இல்லையெனில் நீயோ விடுவாய்!
மருதப்பன் என்றபெயர்! மாத்தமிழன்! வாழ்வில்
பெருநோக்கம் கொண்டுழைக்கும் பேரறிஞன்! கல்விக்
கழகத்தே பாடங்கள் கற்பிப்போன்! யாரும்
பழகுதற்கு ஏற்றநற் பண்புடையோன்! அனனவனை
மங்கையென் மன்னவனாய்க் கொண்டால் மறுபடியும்
இங்கென்ன தேவையடி தோழி! இருந்தாலும்
செல்வர்தம் பிள்ளையென அஞ்சுகிறேன்! பெற்றோர்கள்
நல்வரவு கூறுவரோ நம்போன்ற ஏழைகட்கு!
காவிரியின் ஓரம் கனிந்த பெருங்காதல்
பூவிரி மங்கலப் பொன்மேடை தன்னிலே
எல்லாரும் ஏற்கும் எழில்மணமாய் மாறிடுமோ
சொல்லாயோ தோழி துணிந்து. உன் தோழி,
—முல்லை.—

2. அவன் கடிதம்.

தீங்கனியே! செந்தமிழே! தேன்முல்லைப் பூங்கொடியே!
ஏங்கித் தவித்திடுவாய் என்றறிந்தும் இம்மடலைத்
தாங்காத் துயரோடு தன்னிலைமை அற்றவனாய்,
பூங்காப் புறத்தமர்ந்து கண்ணீர் குளிப்பாட்டி
நைந்துருகும் நெஞ்சம் நடுங்க அனுப்புகிறேன்!
பைந்தமிழே! உன்னையென் பெற்றோர் விரும்பவில்லை!
கோடிசெல்வம் வேண்டுமாம்! கொஞ்சுமொழி போதாதாம்!
'தேடிவரும் செல்வத்தைக் காலால் உதைக்காதே'
என்றெனக்குக் கூறுவர்போல் எட்டப்பர் என்கின்ற
குன்றொத்த செல்வர்தம் பெண்ணைமணம் கூட்டுகின்றார்!
வான்நிலவே! தேனே! வடிவழகே! என்செய்வேன்!
கூன்பட்ட நெஞ்சுடையார் குற்றம் புரிகின்றார்!

ஏன்பிறந்தேன் என்றநிலை! என்நெஞ்சோ டுன்நினைவும்
தான்மறக்கக் கூடுவதோ! தென்றல் குளிர்பிரிந்தால்
வையம் கொதித்திடுமே! வண்ணக் கிளியுனையென்
கையினின் றும் தான்பிரித்தால் என்நெஞ்சும் வெந்திடுமே!
பிள்ளை விருப்பம் பெரியோர் உணராமல்
கிள்ளைக்குச் சொல்வதுபோல் சொன்னதையே சொல்கின்றார்!
தள்ளாத மூத்தோர்சொல் தள்ளி நடப்பதற்கும்
எள்ளளவும் நெஞ்சம் இணங்கவில்லை! அவ்வா(று)
அவர்முடிவை நான்மறுத்து என்முடிவைச் சொன்னால்
அவர்வாழ்க்கை அன்றே முடிந்துவிடும்! ஆகையினால்
என்னை மறந்துவிடு! என்பிழையைத் தாங்கிக்கொள்
பொன்னே! புதுநிலவே போ!

அன்பன்,
மருதப்பன்.

3. அவள் முடித்தாள்!

[காதலில் தோல்வியுற்ற தன் தோழி முல்லை என்ன ஆனாள் என்பதைச் சினமும் அவலமும் மிஞ்ச இம் மடலில் மருதப்பனுக்கு எழுதுகிறாள் அன்னம்.]

புனிதப் பணிபுரியும் பொறுப்புடையீர்! உம்மை
இனிமைதவழ் ஏந்தல் எனப்புகன்றாள் என்தோழி!
காதல் மொழிகளிலே கம்பனையும் வென்றீராம்
'சாதலெனும் ஒன்றில்தான் நம்வாழ்வு சாய்ந்தொழியும்'
என்றுரைத்து அன்னவளை மெய்மறக்க வைத்தீராம்!
இன்றவள்தான் தன்னந் தனியேபோய்க் காவிரியில்
சாய்ந்தொழிந்தாள் உள்நிறைவோ உங்கட்கு! வேறுமணம்
தோய்ந்தெழுந்து வாழுங்கள்! ஆனாலும் ஒன்றுரைப்பேன்
பெண்மை அழுதகண்ணீர் பேரெரியாய்ச் சுட்டெரிக்கும்!
தண்மை நிழலின்றி நீர்தவிப்பீர்! இம்மண்ணில்
வஞ்சிக்கும் ஆடவர்கள் வாழுமட்டும் ஏமாந்த
வஞ்சியரும் தாமிருப்பர்! என்செய்வோம்! எம்கொடுமை!
கொஞ்சு மொழிபேசிக் கொத்தடிமை கொள்கின்றீர்!
பிஞ்சுபழம் ஆவதற்குள் வீழ்வதுபோல் வீழ்கின்றோம்!
மாக்கொடுமை செய்தேபின் மங்கையர் தம்குலத்தைச்
சாக்காட்டில் வீழ்த்தும் சழக்கர்களே! ஆண்குலமே!
நல்லறிவு பெற்று நலிவுதனைப் போக்கீரேல்
தொல்லுலகிற் கில்லை துணை!

அவள் தோழி,
அன்னம்.

இப்பாடல் தென்மொழி நூல்நிறைப் பகுதிக்கு வந்த 'கவிதைக் கனிகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றது.

தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும்

சீதையைத் தேடிச் சென்ற அநுமன், பிண்டிமரக்காவில் (அசோக வனத்தில்) அவளைக் கண்டான். கண்டவுடன் அவளுடன் எம்மொழியில் உரையாடுவது என்று எண்ணிப் பார்க்கிறான். இறுதியாக இனிமையான தமிழ் மொழியில் பேசுகிறான் இது வடமொழி இராமாயண ஆசிரியரான வான்மீகரின் கூற்று. ''இம்மதுரமான தமிழ்மொழியை வளர்த்தமையால் பாண்டியர் தலைநகர் மதுரை எனப் பெயர் பெற்றது'' என்பது பேரறிஞர் இரா. இராகவையங்கார் அவர்களின் கருத்து. தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள் என்பதை,

''தமிழ் தழீஇய சாயலவர்'' – சிந்தாமணி
''தமிழெனும் இனிய தீஞ்சொல்தையல்'' – மணிமேகலை
''தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே'' – கம்பராமாயணம்
''இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'' – பிங்கலம்
''பாலேய் தமிழ்'' – திருவாய்மொழி

முதலியனவாய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தமிழ் மொழி ஒரு தனி இனத்தின் பண்பாட்டைத் தோற்றுவித்து வளர்த்துள்ள சிறப்புக்கும் உரித்தானது. பிற மொழியாளர்கள் இறைவனது படைப்புகளுள் மிகச் சிறப்புடையது பெண்ணினம் என்பர். தமிழரோ எனின், தமிழே இறைவனது படைப்புகளுள் தலைமையும் சிறப்பும் உடைத்து என மொழிவதோடு நில்லாது, '' தமிழே என் உயிரே, நறுந்தேனே '' என்றெல்லாம் போற்றுவர்.

தமிழின் தொன்மை

உலக மொழிகளுள் மிகப் பழமை வாய்ந்தனவாகப் போற்றப்படுவன தமிழ், சமற்கிருதம், எபிரேயம், கிரேக்கம் முதலியனவாகும். சமற்கிருதம், எபிரேயம், கிரேக்கம், முதலிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளமையை இரைசு டேவிசு என்பர் குறிப்பிட்டுள்ளார். ஞானப்பிரகாசர் அவர்கள் ''உலகிலேயே மிகப்பழைய நாகரிகத்தையுடையவர் எனமுடிவு செய்யப்பட்ட சுமேரியரது மொழியைத் தமிழோடு ஒப்புநோக்க, சுமேரியச் சொற்கள் இணையன''என்றுசுட்டுகிறார். இந்தியாவின்

வை. தட்சிணாமூர்த்தி, எம் ஏ.
(தமிழ்த்துறை, வளவர் கல்லூரி, திருச்சி.)

வரலாற்றைக் கணிக்கும் ஆராய்ச்சியாளர், ஆரியமறைக் காலத்துக்கு முந்திய சிந்துவெளி நாகரிகத்துக்குரிய மக்கள் பேசிய மொழியின் சொற்கள் தமிழ்ச் சொற்களே எனத் தெரிந்துள்ளனர். இந்தியாவில் இப்பொழுது பேசப்படும் உயர்தனிச் செம்மொழிகளுள் முதன்மையானது என்பதால் மட்டுமின்றி, திரவிடமொழிக் குடும்பத்தின் தலை மொழியாகத் தமிழ் இருப்பதிலிருந்தும், அதன் தொன்மையை உணர வாய்ப்புண்டு. ஆரியம் போல் உலக வழக்கொழிந்து, சிதையாத, தமிழின் சீரிளமைத் திறத்தைக் கண்டே அதன் தொன்மையையும், நிலைத்த மொழியாயிருக்கும் தகுதியையும் எளிதில் அறியலாம்.

தமிழின் தொன்மையைக் கணக்கிடுதற்கு அதன் இலக்கண இலக்கியங்களில் அகச்சான்றுகள் மிகுந்திருப்பினும் பிறரும் ஒப்புமாறு புறச் சான்றுகளையும் கூறவேண்டிய கடப்பாடு நமக்குள்ளது. உலக மொழிகளுள் சமற்கிருதம், கிரேக்கம், எபிரேயம், சோமாலி, அமாய், எகிப்து, அசிரியன், பாலவி, பாரசீகம், அரபு, சீனம் முதலியனவாய பலவற்றுள் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளமை கண்கூடு. பண்டைத் தமிழர் தம் வாணிகம் தந்த கொடைகள் இவை. வான்மீகி இராமாயணத்தில் சுக்கிரீவன் அநுமனிடத்து, தென்திசையிலுள்ள பாண்டியர் தலைநகராய கபாடபுரத்தைப் பற்றிக் கூறுகிறான். அநுமன் சீதையிடம் தமிழ் மொழியில் பேசியதாக (சுந்தர காண்டம் சருக்கம் 30, 43 ஆம் பாட்டில்) வான்மீகர் மொழிவதை முன்பே குறிப்பிட்டோம். முதற் பாவியமெனப்படும் இராமாயணத்தை அடுத்து, கி. மு. மூவாயிரத்துக்கு முந்தையதென மொழியப்படும் மாபாரதப் போரில் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்னும் தமிழ் மன்னன் இருதிறத்தாருக்கும் உணவு கொடுத்து, பெருமை கொண்டமையைப் புறநானூற்றிலிருந்து அறிகிறோம். முரஞ்சியூர் முடிநாகராயரின் புறநானூற்றுப் பாட்டு சேரனையும் பாரதப் போரையும் இணைத்துக் காட்டியது. வியாச பாரதத்திலேயே பாண்டியரது கபாடபுரத்தைப்பற்றியும், சாகரத்துவசப் பாண்டியன் (கடற்கொடிப் பாண்டியன்) என்ற பெயருடைய பாண்டியனைப் பற்றியும் கூறுகின்ற அகச் சான்றுகள் உள. பாணினியமாய வடமொழி இலக்கணத்துக்குக் கார்த்தியாயனர் இயற்றிய உரையில், பாண்டியரும், சோழரும், குறிப்பிடப்பட்டுள்ளனர். கி. மு. இரண்டாம் நூற்றாண்டையதான, பதஞ்சலியாரின் நூலில் காஞ்சியும், கேரளமும் குறிப்பிடப்பட்டுள்ளன. சீன மொழியில் உள்ள பண்டைக் கதையொன்றில் மூவேந்தர் பற்றிய வரலாறொன்று குறிப்பிடப் படுகிறதாம். அம்மூவேந்தர்களுள் முதல்வனான பூகி (Fuhi-பூழியன்-சேரன்) வில்லேந்திய வேட்டைக் கூட்டத்தின் தலைவனாக இருந்தான். இரண்டாமவனான சோ ஆன்ங் சென்னி (Show-Aung-சோழன்) தன் நாட்டின் நிலங்களைத் திருத்திப் பயிர்த் தொழிலைப் பெருக்கி வந்

தான். மூன்றுமவனுய காண்டி (பாண்டியன்) தன் தலைநகரில் அறிஞர்களைக் கூட்டிச் சேர்த்து நூலாராய்ச்சி செய்துவந்தான். மேற்கண்ட மூவேந்தர் பற்றியசெய்தி, நம் தமிழ் மூவேந்தரைப் பற்றிய தென்பதில் ஐயமேற்பட வாய்ப்பில்லை. இச் செய்தியைப் பேராசிரியர் செபரத்தினம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நச்சினார்க்கினியர் "தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணம், வியாசர் முதன் ஆரியமறைகளை நான்காக வகுப்பதற்கு முன்பே தோன்றியது என்பார். இத் தொல்காப்பியத்துக்கு முன்பே பன்னீராயிரம் நூற்பாக்களையுடைய முத்தமிழ் இலக்கண நூலாய அகத்தியம் இருந்துள்ளது. வடமொழிப் பழங்கதைகளில் கண்ட கபாடபுரத்துக்குரிய இலக்கணம் தொல்காப்பியம் எனின், அதற்கு முந்திய அகத்தியத்தின் தொன்மையையும் அதனைப் பெற்ற தமிழ் மொழியின் தொன்மையையும் கணக்கிடுதல் அத்துணை எளிதன்று.

இவற்றையன்றி, கீழை நாடுகட்குப் பயணம்வந்த பெரியார்களும், வரலாற்றாசிரியர்களுமாய பலரின் குறிப்புகளிலும் தமிழ் மூவேந்தரின் ஆட்சி முறை, வாணிகம் முதலியன பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இசுட்ராபோ அவர்கள் கி. பி. 55-இல் எழுதிய புவியியல் நூலிலும், பிளைனி அவர்கள் கி. பி. 77-இல் எழுதிய இயற்கை வரலாற்று நூலிலும், கி. பி. 510-இல் எழுதப்பட்ட தாலமியின் குறிப்புகளிலும், கி பி. 80-இல் எழுதப்பட்ட பெரிப்ளசின் கடற்பயண நூலிலும், கி. மு. 300இல் மௌரிய சந்திரகுப்தனின் அவைக்குக் கிரேக்க மன்னரின் பன்னன் (தூதுவன்) ஆகவந்த மெகசுதனீசு எழுதிய இன்டிகா என்ற நூலிலும், கி. மு. 200 இல் நிறுவப்பட்ட அசோகரது கல்வெட்டுகளிலும் தமிழ்ச் சார்புடைய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. முன்னைப் பழமைக்கும் பழமையான தமிழ் மொழியின் இனத்ததான பிராகுவி என்னும் மொழியை வடநாட்டில் பலுசித்தானத்தில் உள்ள மலைவாழ்நர் பேசி வருகின்றனர். திரவிட இன மொழிகளான கோந்த், கூ, முதலியனவற்றைப் பேசுபவர்கள் நடு இந்தியாவிலும், வங்கத்திலும் உள்ளனர். சோடாநாகபுரியிலும், ஒரிசாவிலும் முன்னரே திராவிடக்கூறுகள் வளர்ந்துள்ளன என்பதை அறிஞர் டால்டன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஏறத்தாழ 7000 ஆண்டுகட்கு முன்பே கோந்த் மொழியினர், தமிழர் முதலியோர் நடு இந்தியாவில் ஒன்றாக வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கால்டுவெல் கருதுகிறார். ஆரியரின் இருக்கு மறைநூலில், ஒடா (ஓடம்), முக்தா (முத்தம்), கமலம் (குவளை), கோகிலம் (குயில்) முதலிய எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளமையை பேராசிரியர் பர்ரோ அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளை அன்றி, தமிழ் மொழியின் தன்மை, தமிழினத்தின் சமய குமுகாய (சமுதாய)க் கொள்கை ஆயவற்றை ஆராயும்பொழுதும் அதன் தொன்மையினை எளிதில் அறியலாம்.

தமிழ் மொழியின் சிறப்பு.

''தமிழ் மிகவும் பண்பட்ட மொழி; அது தனக்கே உரித்தான வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கிறது''என, புலமை சான்ற மாக்சு முல்லர் கூறியுள்ளார். இது போன்ற அறிஞர் பலரின் கூற்றுக்களைக் கீழே காண்போம்.

''ஆற்றல் மிக்க சில சொற்களில், பல கருத்துகளை புலப்படுத்துவதில் தமிழ் மொழிக்கு ஈடில்லை''

— பெர்சிவல் அடிகள்.

''திராவிட மொழிகளுள் மிகவும் பண்பட்ட தமிழ் சமற்கிருதத்தை முற்றிலும் புறக்கணித்துவிட்டு வளர்ச்சியடையும் தன்னாற்றல் உடையது''.

— கால்டுவெல்.

''தமிழ், சொற்செல்வம் படைத்த ஒரு தனிமொழி. அதன் இலக்கண நெறிகள் ஏரண (தருக்க) உண்மைகட்குப் பொருந்தியன ஆயினும் தெளிவாக விளங்கக் கூடியன. தமிழ்மொழி ஒரு பண்பட்ட மொழி. அது தென்னிந்திய மொழிகளை ஈன்ற அன்னை''

''சொற் பெருக்கும், கலைநுட்பமும், பண்பட்ட தூய்மையும் உடைய மக்கள் பேசும் மொழிகளுள் தமிழும் ஒன்று''

— டெய்லர்.

''பாட்டுருவில் தமிழ் மொழி; கிரேக்க மொழியைக் காட்டிலும் பண்பட்ட தூய்மையும் நுட்பமும் உடையது என்பது உயர்வு நவிற்சி யாகாது. அதன் நிறைவும், ஆற்றலும், வழக்கு மொழிகள் பலவற்றுள்ளும், ஆங்கிலத்தையும், செருமன் மொழியையும் போன்றவை''

— வின்சுலோ.

வெளிநாட்டார் பலரின் வாய்மொழியாகத் தமிழின் தொன்மை, இனிமை, இலக்கிய ஆற்றல், தனித்தியங்கும் நிறைவு முதலியவற்றைக் கண்டோம். இனி அகச் சான்றுகளை நாடுவோம்.

தமிழில் உள்ள இலக்கணத்துக்குத் தனிச் சிறப்பு உண்டென்பதில் ஐயமெழ வாய்ப்பில்லை. எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கண்டதோடு மட்டுமன்றி, அவ்வெழுத்தையும் சொல்லையும் கொண்டு கூறப்படும், பொருளுக்கும் இலக்கணம் கண்டுள்ளது தமிழ். அப்பொருளை அகம், புறம் என வகுத்து, அவற்றை ஐந்திணை வாழ்க்கைமுறையுள் அடக்கியமை எண்ணி எண்ணி வியத்தற்குரிய ஒரு சிறப்பாகும். தொல்காப்பியர்

செய்யுளியலில் ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லை ஆயிரம் அடிகள் என வகுத்துள்ளமையை எண்ணிப் பார்க்கையில் தமிழில் பாட்டுக் கலையின் பரப்பு புலனாகும். ஒன்றே முக்கா லடியில் ஏழே சீர்களில் ஆகியுள்ள குறட்பாவையும், 782 அடி களையுடைய மதுரைக் காஞ்சியையும் பார்க்க நுண்மையும் விரிவும் கொண்டது தமிழ் என்பது சொல்லாமலே விளங்கும். பிற மொழிச் சொற்களையும், திரிசொல், திசைச் சொற்களையும் ஆளுதற்குத் தொல்காப்பியர் வழி வகுத்துள்ளமை, பிற மொழிக் கலைகளைத் தமிழிற்கொணர வகுத்த பண்டைவழியாகத் தோற்று கிறது. தமிழ் இலக்கணத்தில் வரும் உயிரெழுத்து, மெய் யெழுத்து, முதலெழுத்து, சார்பெழுத்து, அகம், புறம், திணை, துறை, வல்லினம், மெல்லினம், இடையினம் முதலியன ஏதோ மெய்யறிவுக் குறியீடுகளாகவே தென்படுகின்றன. வல்லின எழுத்துகள் பிற மொழிகளிற் போன்று வல்லோசையே பயக்கா. இடம் நோக்கி மெலிந்து ஒலிப்பதைப் பார்க்கிறோம். வடமொழி, ஆங்கிலம் போன்றவற்றுள் பல எழுத்துகள் சேர்ந்து ஒலிக்கும் ஒலிப்பு தமிழில் ஒரே எழுத்தில் கிடைத்து விடுகிறது. தமிழ் எழுத்துகள் ஓரொலிக்கு ஓரெழுத்தாக அமைந்துள்ளமையால் பலுக்கலில் இக்கட்டுகள் இல்லை. உயிரும் மெய்யுமாய முப்பது முதலெழுத்துகளே 247 ஒலிகளாக ஒலிக்கும் குறியீடு பெற்றுள் ளமை தமிழ் எழுத்து முறைக்கும், ஒலிப்பு முறைக்கும் பெருமை தருவன. பிற மொழிகளால் எழுப்ப இயலாத ழகர, றகர ஒலி களைத் தமிழ் கொண்டுள்ளது. சொற்களை உயர்திணை அஃறிணை என்று காரணம் நோக்கிப் பகுத்துள்ளமை வடமொழி முதலாய பிற மொழிகளுள் செம்மைப்படாத தமிழ்ச் சிறப்பாகும். பெருமைப் பன்மை என ஒன்று தமிழில் உள்ளது. கடவுள் வந் தான், அரசன் வந்தான் என்று ஒருமையில் எழுதாது பெருமை குறிக்கக் கடவுள் வந்தார்; அரசன் வந்தார் என்று பன்மை கொடுத்தெழுதும் முறை தமிழின் தனித் தன்மை.

மற்றும் ஒரு பொருளைக் குறிக்கவே தமிழில் பல சொற்கள் உள்ளன. இல், வீடு, மனை, அகம் என்ற சொற்கள் ஒரே பொரு ளில் வருகின்றன. முகை, நனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, போது, தார், அலர், மலர், தாமம், வீ, இணர், துணர் ஆகிய பதினைந்து சொற்களும் மலரைக் குறிப்பிடு வன. இஃது ஒரு பொருளுக்குப் பலசொல் நிலை. இதனையன்றி ஒரு சொல்லுக்குப் பல்பொருள் நிலையும் உண்டு. பகடு என்ற சொல், யானை, பெருமை, எருது, ஓடம், எருமைக்கடா முதலி யனவாய ஐந்து பொருள்களில் பயில்கின்றது. கோடு என்ற சொல், சங்கு, ஊதுகொம்பு, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு, வரம்பு, மலையுச்சி, நீர்க்கரை முதலிய ஏழு பொருள்களிலும், கடி என்ற சொல் காப்பு முதலிய பதின்மூன்று பொருள்களிலும் வருகின்றன.

ஆரிய மறைக்கால சமற்கிருதம் இன்று வழக்கிலில்லை. அம்மொழியே பேச இயலாததாகிவிட்டது. ஆனால் கழகக் காலத் தமிழுக்கும், மறுமலர்ச்சித் தமிழுக்கும் இடையே பொருட்செறிவு சொல்லாட்சி இவற்றில் வேற்றுமை இருப்பினும் என்றும் கன்னி யிளமையோடிருக்கிறது தமிழ். ஆங்கில மொழியில் பழைய ஆங்கிலம் இன்று வழக்கொழிந்து விட்டது கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், சமற்கிருதம் முதலியனவற்றின் நிலைபோன்றின்றி. கழகத் தமிழும் அதன் இலக்கண முறையும் இன்றும் வாழ்கின்றன.

இனி, தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பைச் சற்றுக்காணுதல் நன்று. கழகத் தமிழின் நுண்மை, பாவியங்களின் உறுதி இனிமை, குறள் போன்ற அறநூல்களின் அறிவு நுணுக்கம், சிற்றிலக்கியங்களின் சொல் பொருள் முறை போன்றன தனித் தனியே நேரே படித்தறிய வேண்டியன. இளங்கோவடிகள், திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார் போன்ற பாவிய ஆசிரியர்கள், உணர்ச்சியை, பாடல் தரு சொல்லாலும் பொருளாலும் மட்டுமன்றி ஓசையாலும்கூட உணர்த்தியிருப்பது தமிழின் சிறப்பு. மறுமலர்ச்சிப் பாடல்கள் படிப்போரின் உள்ளத்தை உணர்ச்சிக் கடலுள் ஆழ்த்தி, களத்தில் கொண்டு நிறுத்தும் சிறப்பும்பெற்றன. திருமுறைகள், நூற்றிருகுதிகள்(பிரபந்தங்கள்) ஆய தமிழ்ச் சமய நூல்கள் உடலையும், உயிரையும் ஒரு சேர உருக்கி ஆட்டிப்படைக்கும் திறன் வாய்ந்தன. போப் அவர்கள் திருவாசகத்தின் நெஞ்சுருக்கும் தன்மையைப் பாராட்டுவது நாமறிந்ததே. தமிழ் நூல்கள் வடமொழி போன்றன்றி என்றும், எல்லாருக்குமாகக் குல, இன, நாட்டு வேறுபாட்டைக் கடந்து எழுந்தன. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'', ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பன இதனைக் காட்டுவன. அறம், பொருள், இன்பம், வீடு என நூல்கள் நுவல வேண்டியவற்றை நான்காய்ப் பகுத்தனர் தமிழர். இந் நான்கையும் போற்றியது பெரும்பாவியம் (காவியம்) ஆகியது. வீடு தவிர்த்து, பிற மூன்றையும் மட்டும் சொல்வது சிறு பாவியமாகியது. இரண்டையோ ஒன்றையோ கூறுவன அற நூல்கள்; தனிப் பாடல்கள் முதலியன கழகப் பாடல்களுள் பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் பின்னிரண்டினைச் சேர்ந்தவை. பதினெண் கீழ்க் கணக்கு அற நூல் வகையைச் சார்ந்தது.

பல்வேறு நாடுகளினின்று வந்த பல்வேறு மொழிகளைப் பேசிய வெளிநாட்டார் சிந்து வெளியில் வாழ்ந்த தமிழரை விந்தியத்திற்குத் தெற்கே விரட்டிவிட்டனர். வடமொழி, அரபி ஆங்கிலம் ஆகிய மொழிகள் தமிழின்மேல் படை எடுத்ததுண்டு. தமிழில் இருந்த முதல் நூல்களைச் சமற்கிருதத்தில் பெயர்த்து வைத்துக் கொண்டு, வடமொழியின் துணையின்றித் தமிழ் வாழ

முடியாது என்னும் அளவிற்கு அப்படையெடுப்பு நடந்தது; நடந்து வருகின்றது. ஆனால் ஆரிய சமற்கிருதம் அழிகின்றது; தமிழ் வாழ்கின்றது. இன்றும் தமிழ்ப் பூங்காவில் இலைகளையும், தளிர்களையும், அரும்புகளையும் கொய்து உண்டு வாழ்கின்ற வண்டினங்கள் மலிந்துள. அவற்றின் வாய்க்குத் தப்பித்தான் தமிழ் வாழ வேண்டியுள்ளது. *

அருந்த இதழில்....!

பிற மொழி நடைமுறைச் சொற்களுக்கேற்ற தனித்தமிழ்ச் சொற்கள்.

தமிழகத்தே வழங்கிவரும் ஆயிரக்கணக்கான சமற்கிருதம், ஆங்கிலம், உருது, முதலிய அயன் மொழி நடைமுறைச் சொற்களுக்கேற்ற தனித்தமிழ்ச் சொற்களைத் துறை துறையாகவகுத்து வெளியிட வேண்டும் என்னும் அன்பர்களின் வேண்டுகோட்கு இணங்கி,

மொழிப் பெரும் புலவர் உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் அடுத்த இதழிலிருந்து நடைமுறைச் சொற்களின் நெடுந் தொடர் ஒன்றை எழுதிவருவர். தமிழக அரசினர் வெளியிட்டுள்ள கலைச்சொல் அகரமுதலியும், அதுபோன்று வெளிவந்துள்ள சொல்லாக்க நூல்களும் போதிய திறமையுடனும் முறைமையுடனும் வெளியிடப் பெறவில்லை யாகலின், இவ் வருந்தமிழ்ப் பணியை ஒலியியல், சொல்லியல், மொழியியல், வரலாறு முதலியவற்றைப் பழுதறக் கற்றுத் தெளிந்த திரவிட மொழிப் பேரறிஞர் பாவாணர் அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது தென்மொழி யன்பர்கள் தவறாமல் அத்தொடரைப் படித்துப் பயனடையுமாறு வேண்டுவதுடன், ஆங்காங்கு அச் சொற்களைப் பழக்கத்துக்கும், புழக்கத்துக்கும் கொண்டுவர வேண்டுகின்றோம். (– ஆர்.)

நன்றி!

தனித் தமிழ்ப் பணி தழைத் தோங்கும் பெரு விருப்பால்
தளரா நெஞ்சோடும் தணியாத் துடிப்போடும்
சென்னை திரு. மகிபை – பாவிசைக்கோ அவர்கள்
'தென்மொழி'யின் வளர்ச்சிக்கு உருபா ஐந்து நன்கொடையாக
உதவியருளினர். அன்னார்க்கு எம் நெஞ்சுகந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏங்குதற் பத்து.

ம. இலெ. தங்கப்பா. எம். ஏ.

ஊறும் குருதி, உயிர்ப்பால் தமிழர் எனப்பிறந்தும்
பேறென் றுணரார்; பெருமைக் குவவார்; பிசைந்துருட்டிச்
சோறுங் கறியும் குடலிட்டுத் தொப்பை வளர்ப்பதன்றி
வேறொன் றறியார் தமிழே இதுவுன் வினைப்பயனே! (1)

கழகம் அமர்ந்தும் கலையுணர் வேந்தர்தம் காப்பமர்ந்தும்
பழகும் இனியசொற் பாவை எனவளர் பைந்தமிழே!
அழகும் விழுப்பும் அழியப் பிறமொழிக் குன்னைவிற்கும்
இழிஞர் தொடர்பினுக் கோ கிடந் தாய்?துயர்
என்சொல்வதே! (2)

கற்றவர்; வல்லவர்; நூலினர்; மேலைக் கலையுணர்வார்;
உற்ற இடத்தால் உயரும் புகழினர்; ஒண்பொருளில்
சற்றுங் குறைவிலர்; ஆயினுந் தாய்மொழி மேலன்பிலார்
பெற்ற தமிழே,மற் றுன்றன் நிலையென்ன பேசுவனே! (3)

ஊரும் உலகமும் உய்யவென் பார்;வையம் ஒன்றேயென்பார்;
சீருறு சீனம் உருசியம் எங்கணுஞ் சென்றலைவார்;
பேருந் தமதன்றிப் பித்தர்கைப் பட்டிடில் தாயகத்தில்
ஆருந் தமிழே,மற் றுன்பணி ஆற்றுதற் காளில்லையே! (4)

பொருள்தேடி ஓடுவர்; போற்றுத் தொழில்செய்வார்;
புன்திரையாம்
மருள்தேடி மாய்குவர்; மாதரை நாடுவர்; மட்டுணவே
இருள்தேடி ஏங்குவர்; இன்தமி ழே,உனை எண்ணுகிலார்;
தெருள்தேடி உய்யுந் திறமிலார்க் கென்னையான்
செப்புவதே? (5)

தொழிலே பெரிதென்பர்; துன்பின்றி வாழும்எம் பெண்டுபிள்ளை
எழிலே பெரிதென்பர்; இன்பம் பெரிதென்பர்; ஈர்ம்பயிர்க்கு
விழலே பெரிதென்று வீழ்பவர் ஆயிரம்; எந்தமிழ்த்தாய்
மொழியே பெரிதென்றுன் தொண்டுக்கு முந்தவோர்
ஆளில்லையே! (6)

கதைபேசற் காளுண்டு; காடதிர் மேடை முழக்கமுண்டு;
புதிதான பல்மொழி போற்றுதற் காளுண்டு; பூம்புதர்க்குள்
பதிபோர்ந்து கன்னியிற் புட்பிடிப் பார்;அவர் பாழ்ம்பிடிக்குள்
அதிர்தமிழ் அன்னாய்நின் மெய்ப்பணி ஆற்றுதற்
காளில்லையே. (7)

வாணிகம் நாடுவர்; வண்பெரு மூதியம் வான்குவிப்பர்;
சேணகன் றேகலம் செல்விப்பர்; உண்டுண்டு சீர்கழிவர்;
நாணுகின் றாரிலர் நாயனையார்பல நன்மை பெற்றும்
பேணுகின் றாரிலர் தூய்தமி ழேஉனைப் பித்தர்களே! (8)

பெண்டுபிள் ளைக்கும் பிறங்கடை கட்கும், பிழைகளெலாம்
கண்டுகண் டேபின்னும் கல்லுரு மாறாக் கடவுளர்க்கும்
பண்டுதன் செல்வம் படைத்தலன் றித்திறன் பார்த்துனக்குத்
தொண்டுசெய் நன்னெஞ்சம் ஒன்றிலையே தமிழ்த்
தூமொழியே! (9)

நூலா யிரங்கற்பர்; நூறுயிரங் கருத் தேநுவல்வர்;
தோலாத நாவினர்; தூங்காத ஆண்மையர்; தூயதமிழ்
பாலாம் அமிழ்தாம் எனப்பல பாடுவர்; வாய்வளர்வர்;
மேலாம் தமிழேயுன் மெய்ப்பணி ஆற்றவோர்
ஆளில்லையே! (10)

பாவாணர் அறிக்கை.

பல ஊராட்சி மன்றங்களினின்றும், ஒன்றியங்களினின்றும் ஆண்டு மலர்க்குக் கட்டுரை விடுக்குமாறு வேண்டுகோள் அடிக்கடி வருகின்றது. கட்டுரை ஒன்றிற்கு 25 உருபாவிற்குக் குறையாது முன்பணமாக விடுக்க வேண்டுகின்றேன். தொகைக்குத் தக்கவாறு கட்டுரையின் வகை இருக்கும். நீண்ட கட்டுரை வேண்டுவார் உருபா 50 விடுக்கவும்.

அதுவன்றிப் பல மாணவரும் ஆசிரியரும் சொல் விளக்கம் கேட்டு எழுதுகின்றனர். சிலர் மறுமொழிக்கு அஞ்சற்றலையும் விடுப்பதில்லை. தென்மொழி வாயிலாகக் கேட்கப் பெறும் சொல், மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய வினாக்களுக்கே, தென்மொழி வாயிலாகவே விடையிறுக்கப் பெறும். நேரிடையாக அனுப்பப் பெறும் வினாக்கள் புறக்கணிக்கப்பெறும்.



மணிமொழிமாலை

● 'இவர் எனக்கு இத்தகையவர்; இவர்க்கு யாம் இத்தகையோம்' என்று புனைந்துசொல்லினும், நட்பு புல்லியதாய்ப் போய்விடும்.

● மனத்தன்மையால் பொருந்தாதவர்களைச் சொல்லாலும், அதுசான்ற வினையாலும் பொருந்தச் செய்தல் இயலாது.

— திருவள்ளுவர்.

'அடக்கம் உடையார் அறிவிலர்' என்று எண்ணிக்
'கடக்கக் கருதவும் வேண்டா' — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

— ஔவையார்.

பரபரப்பி னோடே பலபலசெய்து, ஆங்கு
இரவுபகல் பாழுக்கு இறைப்ப; ஒருவாற்றான்
நல்ஆற்றின் ஊக்கின் பதறிக் குலைகுலைப;
எவ்வாற்றான் உய்வார் இவர்?

— குமரகுருபரர்.

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்.

— சிவப்பிரகாசர்.

பொன் உடையரேனும், புகழ் உடையரேனும், மற்று
என் உடையரேனும், உடையரோ? — இன் அடிசில்
புக்குஅளையும் தாமரைக்கை, பூநாறும் செய்யவாய்
மக்களை இங்குஇல்லா தவர்?

— புகழேந்தி.

அறம்பேணி வாழாத வாழ்க்கை, வெறும்
பெட்டியைப் பூட்டி வைப்பது போன்றது.

— முனைப்பாடியார்.

திறமையுள்ள ஒருவனின் பின்னால் எப்பொழுதும் திறமையுள்ள பலபேர் இருப்பர்.

— சீனப் பழமொழி.

● உடைந்த உள்ளத்தை இறைவனிடம் கொடு;
அதை அவன் முழுமையாகத் தருவான்.
முழுமையான உள்ளத்தை ஒரு பெண்ணிடம் கொடு.
அதை அவள் உடைத்துத் தருவாள்!

– பிசுட்விச்.

● விளக்கு அணைக்கப்பட்டவுடன் எல்லாப் பெண்களும் அழகே.

– புளுடார்ச்.

● அறிவாளிகளிடமிருந்து முட்டாள்கள் தெரிந்து கொள்வதைவிட, முட்டாள்களிடமிருந்து அறிவாளிகள் நிறையக் கற்றுக் கொள்கின்றனர்கள்.

– கேடோ.

● கற்புள்ள ஒருபெண் தன் கணவனுக்கு மணிமகுடம் போல் விளங்குவாள்.

- பழைய ஏற்பாடு.

● அரசர்களின் வாணிகம் போர்.

– டிரைடன்.

● உலகின் வரலாறு என்பது பெரியோர்களின் வரலாறே.

– கார்லைல்.

● நான் நகைச்சுவையோடு பேசுவதெல்லாம் உண்மையைச் சொல்லுதற்கே! உலகத்தில் இதுவே வியப்பான நகைச்சுவை!

– பெர்னார்டுஷா.

● அன்பின் நாக்கு கண்களில் இருக்கின்றது.

– பைனிசு பிளிட்சர்.

● ஓர் ஆசிரியர் ஒரு மாணவனுக்குக் கற்பிக்க வேண்டியதெல்லாம், ஆசிரியர் இல்லாமல் அவன் எப்படி முன்னேற வேண்டும் என்பதே!

– எல்பர்ட் கிழுபெர்டு.

● அடிமைத்தன்மை என்பது குற்றமில்லையானல் உலகில் குற்றமென்பதே இல்லை.

– ஆபிரகாம்லிங்கன்.

● மாந்தன் ஓர் அரசியல் விலங்கு.

– பர். ஆர்புதாண்ட்.

● வரலாறு என்பது கடந்த கால அரசியல்; அரசியல் என்பது இன்றைய வரலாறு.

– சான் இராபர்ட் சீலி.

● நம் வாழ்க்கையின் முற்பகுதி நம் பெற்றோர்களால் சிதைக்கப்படுகின்றது. பிற்பகுதி நம் குழந்தைகளால் சிதைக்கப்படுகின்றது.

– கிளாரன்சு–டாரோ.

இன்பம் உண்டோ?

உளுந்தூர்ப்பேட்டை 'சுரா'

அரும்பெறலென் அன்னையினை மறந்தும் வாழ்வேன்;
அருகிருந்து நாளுமெனைப் பேணி இன்பம்
தருமென்றன் மனைவிதனைப் பிரிந்தும் வாழ்வேன்;
தந்தையினைத் துறந்தாலும் உய்ந்து கொள்வேன்;
மருவற்று முகமலர்ந்து சிரிப்பைக் கொட்டும்
மறந்தறியா மக்களையான் மறந்தும் வாழ்வேன்;
திருவுற்ற செந்தமிழே! உயிரே! உன்னைத்
தினையளவு மறந்தாலும் இன்பம் உண்டோ?

கற்றாழைப் பூப்போலப் பயனில் மாந்தர்
கடுகளவும் உணர்வின்றி வாழு கின்றார்!
வெற்றூர வாரமொடு தமிழை விட்டே
விலங்குமொழி இந்தியினை ஏற்பார் கண்டேன்!
பெற்றோரே பிள்ளையினை ஓதுக்கல் உண்டா?
பெருந்தமிழே உனைமறந்தார் தமிழர் ஆமோ?
நற்றமிழே! நானுன்னை இழப்பே னாகில்
நல்வாழ்வில் இருள்சூழும்! இன்பம் உண்டோ?

—

பாவாணர் நடத்தும் புலவர் வகுப்பு.

தமிழ் மாணவர்கள், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பிற தமிழ் அன்பர்கள் யாவர்க்கும் ஓர் அரிய வாய்ப்பாக,

உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்

வேலூரில்,

புலவர் வகுப்பு

ஒன்றைத் தொடங்கி நடத்தி வருகின்றார்கள். மொழிப் பெரும் புலவர் அவர்களிடம் தனித்தமிழ் கற்றுச் செந்தமிழ்ப் புலவர் களாகித் தமிழ்த் தொண்டு செய்யும் நற்பேறு பெற விரும்பும் மாணவர்களும், அன்பர்களும் இன்றே கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்க விரும்புகின்றோம்.

கட்டணமும் காலமும் குறைவு.

வேலூர் வட்டத்தில் உள்ள மாணவர்கள் இவ்வரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டுகின்றோம்.

விளக்கங்கட்கு:

திரு. ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.
சி- 79, ஆக்சிலியம் கல்லூரிச்சாலை,
காட்டுப்பாடி நகர் விரிவு (வ. ஆ.)

மகிழ்ச்சி என்பது என்ன?

உயிர்ப்பு: பெர்ட்ரண்டு இரசல் (Bertrand Russell)

பெயர்ப்பு: மு. சாத்தையா, எம். ஏ.

நான் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்படுவதாகச் சொல்கிறுர்கள். ஆனுல், நான் மகிழ்ச்சியிலேயே மிதந்த வேளைகளும் உண்டு. துன்பில் உழன்ற நேரங்களும் உண்டு. நல்ல வேளையாக நான் முதுமை அடைய, அடைய மகிழ்ச்சியே நீடிக்கிறது.

மகிழ்ச்சியின் கூறுபாடுகளாக இன்றியமையா நான்கைக் குறிப்பிடலாம். அவற்றுள் முதன்மையானது உடல் நலம். இரண்டாவது, தேவைகளை நிறைவேற்றப் போதுமான கருவி. மூன்ருவது மகிழ்ச்சியளிக்கும் நேரடியான உறவுகள். நான்காவது வெற்றியே தரும் வேலை.

ஏதாவது உடல் நலக் குறைவு ஏற்பட்டால் மகிழ்ச்சியாக இருப்பதே பெருந் தொல்லையாகிவிடும். சிலவகையான நலக் குறைவு மனத்தையே தாக்குகின்றது. பிறகு ஒரே துன்பந்தான். நலக்குறைவு ஏற்படுவதில் சிலவற்றையே பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ளலாம். சில குறைகளைத் தாங்கவே முடியாது. இதில், உடல் நலத்தோடிருப்பதுதான் மகிழ்ச்சியை உண்டாக்குகின்றதா அல்லது மகிழ்ச்சியாயிருப்பது உடலை நலப்படுத்துகின்றதா என்ருல் உடல் நலமே மகிழ்ச்சிக்கு அடிப்படை என்று நான் நினைக்கிறேன். மகிழ்ச்சியற்று வாழும் மாந்தனைவிட மகிழ்ந்த உள்ளங் கொண்ட மாந்தன் நோய்வாய்ப் படுவது அரிதிலும் அரிதே. இன்னும் சொன்ஞல், சரியாகத் தூங்காத இரவைவிட, ஆழ்ந்து உறங்கிய இரவுக்குப்பின் மலரும் காலையில் நாம் பெறும் மகிழ்ச்சி பெரிது.

இனி, வருமானம் என்பது நமக்குப் பழக்கமான வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தது. ஏழ்மையிலும், எளிமையாகவும் வாழ்வதே பழக்கமாகக் கொண்டுவிட்டால் பெரிய வருமானம் தேவையில்லை. செல்வச் சிறப்போடு வாழ்வதில் பழகிப் போய்விட்டால் பெரும் வருமானம் இல்லாத நேரங்களில் துன்புற்று மனம் வாட நேரும். ஆக, இது நீங்கள் எந்தத் தரத்தில் வாழ்க்கை நடத்தப் பழகியிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. பெரும் செல்வர்களே சிலவேளைகளில் சாவு நினைவால் துன்புறுகின்றனர். இஃது உலகத்தில் அடிக்கடி நிகழ்வது.

இதனால், அளவிறந்த பணப்பெருக்கம் மகிழ்ச்சியைப் பெருக்க உதவாது என்று நான் கூறவில்லை. நான் கருதுவதும் பணம் ஓர் அடிப்படைத்தேவை என்பதே. ஆனால் அதைப்பற்றி எந்நேரமும் நினைந்து மெலிந்து கொண்டிருக்கத் தேவையில்லை. பணத்தைப் பற்றியே அல்லும் பகலும் நினைக்கத் தொடங்கும் போதுதான், நீங்கள் மனக்கவலையால் வாடிச் சோர்வுற நேரும்.

அடுத்தது, நேரடி உறவுகள். இதை மூன்றாவதாகச் சொன்னதால் உண்மையிலேயே மூன்றும் தரத்தைச் சேர்ந்தது என்று நினைத்துவிட வேண்டாம். என்பட்டறிவைப் பொறுத்தவரை அதுவே முதல் தேவை என்றும் துணிந்து சொல்வேன். என்றாலும் உடல்நலத்திற்கு அடுத்ததாகக் குறிப்பிடுவது பொருந்தும். உறவு என்றால் சிலர் அதை நட்பாகவும், சிலர் காதலாகவும், சிலர் தம் பிள்ளைகளிடத்துக் காட்டும் அன்பு என்றும், நெருங்கிய உறவு முறைக்குப் பலவாறு பொருள் கொள்வர். இவற்றில் மகிழ்ச்சி யிழக்க நேர்ந்தால் வாழ்க்கை பெரும் சிக்கலாகவும், சுமையாகவும் ஆகிவிடுகின்றது.

நான்காவதாக, ஆற்றல் படைத்த எல்லா மக்களுடைய நிலைகளிலும் வெற்றி தரும் வேலையை உயர்ந்த தரத்திலேயே குறிப்பிட விரும்புகிறேன். சிலர் சோம்பேறிகளாக இருக்கிறார்கள். அவர்கள் எந்த வேலையிலும் மனமொன்றி ஈடுபடுவதில்லை. ஆனால், நீங்கள் ஆற்றல் மிகுந்தவர்களாக விருந்தால் உங்கள் ஆற்றல் பயன்படும் வகையில் ஒரு நற்பணி தேவை. எடுத்துக்கொண்ட வேலையில் வெற்றி கிடைக்காது போனால் மகிழ்ச்சி ஏற்பட வழியில்லை யென்றாகி விடும். வெற்றியோடு அமைந்துவிட்டாலோ அந்த நாளெல்லாம் மகிழ்ச்சியோடு துள்ளி ஓடும். அளவற்ற மகிழ்ச்சி உள்ளமெல்லாம் நிரம்பி வழியும். ஏதம் (அபாயம்) மிகுந்த சில வேலைகளைத் தவிரப் பிறவெல்லாம் நான் மேலேகுறிப்பிடும் நிலைக்குத்தகுதியானவை. வேலையில் இஃது இழிந்தது அல்லது தாழ்வானது என்பதெல்லாம் அவரவர் உணர்ச்சி நிலையைப் (temperament) பொறுத்து அமைகின்றது. பெரும் வெற்றிகளைப் பெற்றாலொழியச் சிலர் மகிழ்ச்சியடைய மாட்டார்கள். சிலர், சிறு வெற்றிகளைக் கொண்டே முழு மன நிறைவும், மகிழ்வும் பெறுவர். அதைத்தான் அவரவர் 'உணர்ச்சி நிலை' என்று குறிப்பிடுகின்றேன். ஏற்றுக்கொண்ட வேலைகளைத் திறம்பட முடிப்பதில் உங்களது திறமைகள் எந்த அளவு பயன் படுகின்றனவோ அந்த அளவு தான் உங்கள் வேலையின் விளைவும் இருக்கும். மேலும், ஒரு கடினமான வேலையில் ஈடுபட்டு அதில் ஒருபகுதி வெற்றி பெற்றாலும் நாம் பெறும் மகிழ்ச்சி மிக மிகப் பெரிது. ஒரு சோம்பேறி இந்த மகிழ்ச்சிக்கிணையாக என்றாவது, எதையாவது உணர்வான் என்று நான் நினைக்கவில்லை. அறிவுக் கூர்மை

குறையக் குறைய மகிழ்ச்சி பெருகுகிறது என்ற கருத்து பெருந் தவறாகும். இப்போதிருப்பதைவிட இன்னுங் கொஞ்சம் மிகுதி யான அறிவு பெறுவதால், என் இப்போதைய மகிழ்ச்சி குறைந்துவிடும் எனினும் அந்நிலையையே நான் விரும்புவேன். நுண்ணறிவு வளர்ச்சியின்மீது எனக்குக் கொள்ளை ஆவல்!

நீங்கள் மெய்யறிவியலில் (philosophy) ஆர்வமும், ஓரளவு திறனும் உடையவர்களாக இருந்தால் அதுவும் மகிழ்ச்சிக்குத் துணைநிற்கும். அல்லது நீங்கள் வேறு எதிலாயினும் மிகுதியான திறமை உடையவர்களாயிருந்தாலும் அது மகிழ்ச்சியை வளர்க் கிறது.

இனி, மகிழ்ச்சிக்கு எதிரானவை எவை என்றும் பார்க்க வேண்டும். மகிழ்ச்சியைச் சூறையாடுவதற்கென்றே அமைந் தனவற்றுள் முதன்மையானது கவலையாகும். கவலை நேருங்கால் அமைதியாக, ''நாம் நூறாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்திருந் தால் ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைவிட இன்றிருப்பவை சிறி தளவே'' என்று நானே முன்னைய எண்ணத்தைப் புதைத்துக் கவலையைக் கத்தரித்து விடுவேன். இப்படி உண்மையாகவே எண்ணத் தொடங்கிவிட்டால் கவலை பெருகி வாட்டும் என்ப தெல்லாம் பொய்யாகிவிடும். கவலை, விருப்பமும் சுவையும் இல்லாத நிகழ்ச்சிகளைத் துணிந்து எதிர்க்காததால்தான் உரு வெடுக்கிறது. எதிலும் நெஞ்சுறுதி இழக்காமல் இருந்தால் கவ லையை முறியடித்துவிட முடியும்.

பொதுவாகப் பொறாமை, மகிழ்ச்சியின்மைக்கு வித்தாகவும், ஊற்றாகவும் அமைந்து பெரும்பாலான மக்களின் மனங்களை எரித்துக் கருக்கிக் கொண்டிருக்கின்றது. ஓவியர் ஒருவரை எனக்குத் தெரியும். அவர் உண்மையில் முழுத்திறன் வாய்ந்த வரல்லர். என்றாலும், தன்னை ஒரு பெரிய ஓவியர் என்று நினைத் திருந்தார். அவரே, தன்னை வேறொரு பெரிய ஓவியரோடு ஒப் பிட்டுக்கொண்டு அந்த மன எரிச்சலால், பொறாமைத் தீயால் ஒரு காலைப்பொழுது முழுதும் துன்புற்றாராம் சிலரிடம் என் னென்னவோ திறமைகள் இருக்கின்றன. அவற்றைக்கொண்டே அவர்கள் பெருமகிழ்ச்சி கொள்ளலாம். ஆனால், தங்களைவிடக் கொஞ்சம் மிகுதியான திறனுடையவர்களைப் பார்த்து ஏங்கி உள்ள மகிழ்ச்சியையும் இழக்கிறார்கள். பிறர் நல்ல இயங்கி (car) வைத்திருக்கிறார்களே, பிறர்க்கு நல்ல தோட்டம் இருக் கிறதே, அந்த ஆளின் வேலையை எல்லாரும் இவ்வளவு பாராட் டித் தொலைக்கிறார்களே என்றெல்லாம் சிலர் எண்ணி, எண்ணித் தங்கள் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்கின்றனர். உள்ளதைக் கொண்டு உவகையில் நீந்தவேண்டிய சிலர் தங்களிடம் இல்லா தனவற்றை நினைத்து, நினைத்து ஏக்கப் பெருமூச்செறிகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் பொறாமைதான்.

பிறர் செய்யும் நல்ல வேலையை விடச் சிறப்பாகத் தாம் செய்ய வேண்டும் என்று பொறுமை கொள்வது தவறுகாதே; நல்லதாயிற்றே என்று கேட்கலாம். இஃது ஓரளவுக்கு உண்மை தான் என்றாலும் இந்தப் பொறுமையுணர்வே இருக்கின்ற நல்ல வேலையையும் கெடுத்துவிடுவதும் உண்டு. மேலும், நம் வேலையில் நாம் ஈடுபடுவதைத் தடுப்பதுடன் பிறருடைய வேலையில் வீணே தலையிடும் போக்கையும் உருவாக்குகின்றது. மற்றொருவனை வெற்றிகொள்ள இரண்டே வழிகள்தாம் உண்டு. ஒன்று, உங்களை நீங்களே உயர் நிலைக்குத் தகுதியாக்கிக் கொள்ளுதல்; பிறிதொன்று, மற்றவனை உங்களுக்குப் பின்நிலையாகவே வைத்துப் பார்த்தல்.

இனி, மகிழ்ச்சியின்மையின் கூறுபாடுகளில் குறிப்பானதும் எல்லாச் சூழலிலும் இயல்பாக உருவாகக் கூடியதுமான சலிப்புணர்ச்சி (Boredom) என்பது பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். மகிழ்ச்சிக்கு எதிரானவற்றுள் இது மூகாமையயானதாகக் கூறலாம். இது மாந்தர்க்கு மட்டும்தான் ஏற்படும் என்பதில்லை. சில பொருட்காட்சிகளில் வாலில்லாக் குரங்குகளைப் பார்த்திருக்கிறேன். எனக்கென்னவோ அவைசலிப்புணர்ச்சியால் சோர்ந்து போயுள்ளதாகவே காணப்பட்டன. ஆனால் பிற விலங்குகட்கு இந்த உணர்ச்சி இல்லையென்றே சொல்லலாம். இந்தச் சலிப்புணர்ச்சியை உயர்ந்த நுண்ணறிவின் அடையாளம் என்றும் குறிப்பிடலாம். இந்த இடத்தில்தான் இந்த உணர்ச்சியின் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். நாகரிகமற்ற முரடர்களின் நெறியிலிருந்தே இதைக் காணலாம். அவர்கள் முதன் முதலாக நாகரிக மக்களுடன் தொடர்பு கொண்டபோது எல்லாவற்றையும் விட மயக்கந் தரும் வெறி நீரை (ஆல்ககாலை) யே பெரிதும் விரும்பினர். இன்னும் சொன்னால் கிறித்தவ மறைநூலையும் 'மெய்யுரை' எனும் அறநூலையும் விரும்பியதைவிட அந்த வெறி நீரையே பெரிதும் விரும்பினர். இதற்கு ஒரே காரணம் ஒரு நொடிப்பொழுதிலேயே அஃது ஆளைமயங்கவைத்துச் சலிப்புணர்ச்சியே தோன்றாமற் செய்து விடுகின்றது என்பதுதான்.

இனி, மக்களுக்குள்ளேயே ஏற்படும் சலிப்புணர்ச்சியை எப்படிப் போக்கிக் கொள்வது என்றும், அதிலும் படித்த இளம் பெண்களுக்கு இஃது எப்படி இயலும் என்றும் வினா எழலாம். இளம் பெண்கள் மணஞ் செய்து கொண்ட பின்னர், வீட்டைக் காத்துக்கொள்வது தவிர வேறுஎந்த வேலையும் இல்லையே என்று கேட்கலாம். இதுதான் நமது குமுகாய (சமுதாய) அமைப்பில் உள்ள பெருங் குறைபாடாகும். இந்தக் குறையை, ஆங்காங்கே சிலர் தனிப்பட்ட முறையில் ஆற்றும் வினைப்பாடுகளால் மட்டும் அகற்றிவிட முடியாது. மேலும், மணஞ்செய்து கொண்ட மகளிர் வீட்டைப் காக்கும் வேலையொன்றிலேயே காலம் கடத்திச்

சலிப்புணர்ச்சியால் புழுங்கும் நிலை வருந்தத்தக்கதே. ஒரு பெண்ணுக்கோ ஓர் ஆணுக்கோ என்ன திறமையிருக்கிறதோ அதைப் பயன்படுத்தி உயர்வும், உளமகிழ்வும்பெற வாய்ப்பளிக்கும் ஒரு மன்பதை அமைப்பை உருவாக்கத் தவறிவிட்டோம். படித்த மகளிர் மணத்திற்குப்பின் எதையும் இயற்றவோ, எத் துறையிலாவது ஆர்வத்தோடு இயங்கவோ முடியவில்லை என்றால் இது நம் மன்பதைக் குறையே தவிர வேறென்ன?

ஒருவர் தன் குறிக்கோளையும், மனப்பாங்கையும் நன்கு புரிந்துகொண்டு தன்னையே ஏமாற்றிக் கொள்வதைத் தவிர்ப்பது மகிழ்ச்சிக்குப் பெரும் வழியாகும். எல்லா வகையான மக்களும் தங்களுடைய கொள்கையும் எண்ணமும் பிறரைத் தூண்டக் கூடிய பெருமையடைத்தவை என்ற நினைப்பில் எதிலாவது தலையிட்டுச் சிலர் அல்லது பலரது வெறுப்பைத் தேடிக்கொள்கின்றனர். உண்மையில் நோக்கினால், அவர்களது கொள்கைகள் பிறரை ஈர்த்துத் தூண்டக் கூடியனவாக இருப்பதில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் கொள்கைப் பற்றுடைய எல்லாரும் ஏமாந்து போகாமல் மகிழ்ச்சியை நுகர முடியும். பிறரிடம் ஏமாந்து போவது ஒரு புறமிருக்க, சிலர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு மகிழ்ச்சியிழந்து தவிக்கின்றனர்.

இவை நிற்க, எதிர் நீச்சல் போடுவதில் இன்பம் உண்டா? என்பது ஒரு வினா, எதிர் நீச்சல் போட்டு நான் சிறையிலிருந்த போது மிகமிக மகிழ்ச்சியாகவே இருந்தேன். ஆனால் சிறை வாழ்வின் தொல்லைகள் நெருங்கி வந்து தாக்க முடியாத முதற் பிரிவில் இருந்தேன். எனினும் மூளை உழைப்பில் பழக்கப்பட்டு விட்ட ஒரு மாந்தனுக்குச் சிறை வாழ்வு மிகமிகக் கடினமானது தான். உடல் உழைப்பில் பழக்கமுள்ளவர்களுக்கு இது மிக மிக எளிது. மூளை உழைப்பின் தன்மை உடல் உழைப்பு நேரத்தில் மறக்கப்படுவதே இதன் காரணம். நானே, திருடிவிட்டுச் சிறை சென்றிருந்தால் அதை நினைத்து நினைத்து மனம் நொந்து பொருமியிருப்பேன். ஆனால், பொதுவாழ்வில் எதிர் நீச்சல் போட்டுச் சிறை சென்றதால் எந்த வகையிலும் மதிப்புக் குறைந்ததாக நான் நினைக்கவில்லை. வாழ்வில் நான் அமைத்துக் கொண்ட நெறிமுறைகளில் எனக்குள்ள பற்றுதலே இந்த நினைவுக்குக் காரணம்.

வாழ்வதும் ஒரு காரணத்தோடுதான் என்று நினைப்பவர்களுக்கு ஒரு சொல். அவர்களுக்கு வெற்றி தராத ஒரு காரணம் அமைந்து விட்டால், அதில் அவர்கள் மகிழ்ச்சியடைவதில்லை. ஆனால், நொடிக்கு நொடி படிப்படியான வெற்றி கிடைத்துக் கொண்டிருந்தால், தாங்கள் அமைத்துக் கொண்ட காரணத்தை விடாதுபற்றிக் கொள்கின்றார்கள். இன்னும், முதுமை வளர

வளர மகிழ்ச்சி பெருகுவதற்கு அவர்கள் புறநிலைகளில் கொள்ளும் ஆர்வமும் காரணமாகும். உங்களது ஆர்வம் எவ்வளவுக் கெவ்வளவு உங்களைத் தவிர்த்த பிறர் மீதும், உங்களுடைய வாழ்க்கைச் சிக்கலுக்கும், தொல்லைக்கும் இடம் கொடாது வேறு நிலையிலும் அமைகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு சொந்த வாழ்க்கை எங்கே குறுகிய காலத்திற்குள் முடிந்துவிடப் போகிறதோ என்ற கவலையும் குறைவு. முதுமைக் காலத்தில் மற்றவரின் வாழ்க்கையில் ஆர்வங் கொள்வதுதான் பெரும் இன்பமும், மகிழ்வும் தரக்கூடிய செயல் என்பது என் துணிபு.

உள்ள மலர்ச்சியும், உவகைநினைவும் அமைந்து துடிதுடிப்போடு உலகில் உலாவருவோமாயின் வாழ்வில் கவலையும் இல்லை; கண்ணீர் சிந்துவதும் நடவாது.

—●—

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

கையொப்பம்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு உருபா 1—00 முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்கவும்.

கடலில்-ஒரு துளி.

திருக்குறள்:

மக்கட் குமுதாயத்திற்காகத் தாமே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால் ஆறு அறமுதலா அந்நான்கையும் அருளிச் செய்தார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். அம்மட்டுமோ! ஒன்றே பொருளெனின் வேறென்ப, வேறெனின் அன்றென்ப, ஆறு சமயத்தார்; இவ் ஆறு சமயத்தவரும், எப்பாலவரும் நன்றென இயையு மாறு தம் நூலை இயற்றியுள்ளார் ஆசிரியர். 'எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' யென்றும்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க் கேட்க நூலுளவோ?'

என்றும் சொல்லுதற்குப் பேறுபெற்ற தொரு நூல் இத் திருக்குறளேயாகும். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த நூலுக்குப் பண்டை உரையாசிரியர்கள் பதின்மர் உரையியற்றியுள்ளனர். ஆயினும் அப்பதின்மர் உரையையும் பெறக் கூடிய நற்பேற்றை நாம் பெறவில்லை. மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் ஆகியோர் உரைகளே நூல் முழுமைக்கும் கிடைத்துள்ளன. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையருரைபோன்று, திருக்குறட்குப் பரிமேலழகர் உரையே சிறந்ததெனப் போற்றிப் பலரும் பாராட்டியுள்ளனர்.

பேராசிரியர்.
கு. சுந்தரமூர்த்தி,
செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

பரிமேலழகர்:

இவர் உரையினை ஒரு கடலாகக் கூறலாம். கடலுக்குள் மூழ்கினால் பல பெறலரும் பொருள்களைப் பெற்று இன்பமடையலாம். அதுபோலவே, இவர் உரையினுள் மூழ்கினால் பல பெறலரும் கருத்துகளைப் பெற்று இன்பமடையலாம். இவர் உரை பிறருரை போலாது கூடிய வரையில் தூய தமிழிலேயே எழுதப் பெற்று, ஆங்காங்கு இலக்கண மேற்கோள்களையும், இலக்கிய மேற்கோள்களையும், உவமைகளையும், எடுத்துக் காட்டுகளையும், பாட வேறுபாடுகளையும் பிறருரை மறுப்புகளையும் கொண்டு மிளிர்வதாகும். இச்சிறப்பு நோக்கியே,

''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ, பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ-நூலிற்

பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி''

என்ற பாடலும் எழுவதாயிற்று.

இத்தகைய பெருமை பெற்ற பரிமேலழகர் வட நூலார் மதம் பற்றி உரையெழுதுவான் புகுந்து பிழைபட்ட இடங்களும் சில உள. அவற்றையெல்லாம்,

''அரியகற் றுசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு''

என்ற குறள் கொண்டு அமைதி கொள்வோமாக. இங்ஙனமே சேனாவரையர் செய்த குற்றத்தைக் காணுங்காலும் சிவஞான முனிவர் அமைதி கொண்டவாற்றைத் தொல்காப்பிய நூற்பா விருத்தியிலிருந்து அறியலாம்.

இனிப் பரிமேலழகர் உரைத்திறனில் ஓரிரு இடங்களைக் காண்போம்:

ஒவ்வோர் அதிகாரத்திற்கும் தோற்றுவாய் செய்யுங்கால், அவ் அதிகாரத்திலுள்ள குறள்களின் கருத்தைச் சாருகப்பிழிந்து முதலிலேயே தந்துவிடுவது பரிமேலழகர் உரைத்திறனில் ஒன்றாகும்.

எடுத்துக்காட்டாக, ''இன்னா செய்யாமை'' என்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யும்பொழுது அஃதாவது, தனக்கு ஒருபயன் நோக்கியாதல், செற்றம்பற்றி யாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை என்றுரைக் கூறுகின்றார்.

இவற்றில்,

(1) தனக்கு ஒரு பயன் நோக்கியாதல் என்பது,

''சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.''

என்ற குறளின் பிழிவாகும்.

(2) 'செற்றம்பற்றி யாதல்' என்பது

''கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்''

''செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்''

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்''

என்ற குறள்களின் பிழிவாகும்.

(3) 'சோர்வானுதல்' என்பது,

''அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போற் போற்ருக் கடை''

என்ற குறளின் பிழிவாகும்.

இதே போன்று ''பெருமை'' என்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யும் பொழுது 'அஃதாவது, செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூருமை என்றிவை முதலிய நற் குணங்'களால் பெரியாரது தன்மை' என்றெழுதுகின்ருர்.

இவற்றில்,

(1) 'செயற்கரிய செய்தல்' என்பது,

''பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமையுடைய செயல்''

என்ற குறளின் பிழிவாகும்.

(2) 'தருக்கின்மை' என்பது,

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து''

''பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்''

என்ற குறள்களின் பிழிவாகும்.

(3) 'பிறர் குற்றங் கூருமை' என்பது,

''அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்''

என்ற குறளின் பிழிவாகும்.

இங்ஙனம் அதிகாரத் தோற்று வாயில் குறள்களின் உட் கருத்தைப் பிழிந்து தருவது, இவர் உரைக் கடலில் கண்ட ஒரு துளி ஆகும். இவ்வுரை யருமை பிறருரையில் காணுத சிறப் புடையதாம்.

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந் துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்ற னர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ்செய்து அனுப்ப வேண்டுகிருேம்.

வேறென்ன சொல்வது?

● பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுங்கள் —ம. பொ. சி.

○ தமிழில்தானே எழுதுகின்றனர்; 'தி சிடி கோவாப்ரேடிவ் சொசைடி' என்று!

● அமைச்சரவையிலிருந்து விலகியோர் மீண்டும் தேவைப்பட்டால், சேர்த்துக் கொள்ளப் பெறுவர்......! —நேரு.

○ அட, காமராசரே!

● காமராசர் திட்டத்தால் கட்சியே அரசாகும். —ஏ. கே. கோபாலன்

○ அவர்கள் நோக்கமும் அதுதானே!

● எல்லா இந்திய மொழிகளுக்கும் பொருந்தக்கூடிய கலைச் சொற்களை இந்தியில் உருவாக்குவது கடினமாகவுள்ளது. —இந்தி மொழி ஆட்சிக் குழுத் தலைவர்.

○ குட்டுப்பட்டபின் தெளிவு......!

● ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கப்படவேண்டும் —நெ. து. சுந்தரவடிவேலு

○ யாருடை....?

● நேரு ஆட்சியில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த லோகியாவைக்கொல்வோமென்ற அச்சுறுத்தல் மடல்கள்! —செய்தி

○ கவருட்டத்தில் தோற்றவன் கூற்று!

● தடுப்புக்/காவல் சட்டத்தை எதிர்த்து உரிமை வழக்காட எவர்க்கும் உரிமையில்லை —தலைமை அறமன்றத் தீர்ப்பு

○ இதுவே குடியுரிமை!

● வட நாட்டிலிருந்து திரவிடரை ஆரியர் தெற்கே துரத்தியதற்கு வரலாற்றுச் சான்றில்லை. -சி. பி. இராமசாமி

○ முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்க முற்படுகின்றார். சிந்து வெளியில் தோண்டிக் கண்ட சான்றுகள் மீண்டும் புதைக்கப்பட்டனவா?

● தாலிக்குமட்டும் 22 'காரட்' தங்கம் – செய்தி

○ கட்டிய 14 'காரட்' தாலி களை அறுத்தெறியுங்கள்...!

● நேருவுக்கே 'அறிவுரை' கூறும் அளவுக்குக் காமராசர் உயர்ந்து விட்டார். அதனுல் இவரை நேருவின் 'குரு' என்று கூறலாம் – ஈ. வே. இரா.

○ 'குரு' 'சீடர்' இருக்கட்டும். கூறப் பெற்றது அறிவுரையா? தந்திரமா?

● கட்சி முழக்கங்கள் பொறிக் கப்பெற்ற உருபாய்த் தாள்கள் செல்லா.

– தில்லி அரசினர் அறிவிப்பு

○ அவற்றில் உள்ள ஆளுநர் (Governer) கையொப்பத்திற்கு மதிப்பு......?

● இந்தி கற்பதில் உள்ள இடையூறுகளைத் தில்லிக்கு விளக்கியுள்ளோம்

– பக்தவத்சலம்

○ செத்த பாம்பை அடிக்கும் செயல் மறவர்!

● நம் நாட்டின் உதவிக்கு வெளிநாட்டுப் படைகளை உதவி யாகப் பெறலாம்.

– சுதந்திரக்கட்சி

○ உதவிக்குப்பின் அவர்கள் விரும்பும் நன்றியாக நம் நாட் டையே தரலாம்.

● காமராசரின்இடத்தில் நான் வந்தாலும் என்னுல் இவ்வளவு நன்மை செய்ய முடியாது.

– ஈ. வே. இரா.

○ தன்னம்பிக்கை குறைந்த முதல் பேச்சு!

● ஊர் காவல் ஆணையர் (Commissioner of Police) அலுவலகத்திலேயே, மிதிவண் டித் திருட்டு..! திருடனைக் கண்டு பிடிக்க முயற்சி. – செய்தி.

○ திருடனை வேறெங்கும்தேட வேண்டுவதில்லை.. !

● ... இன்று பதவிகளை உதறி விட்டு மீண்டும் பொதுத் தொண் டில் குதிப்பது போற்றத்தக்கதா கும்! – 'குத்தூசி'

○ இது வரை செய்தது என்ன 'தொண்டோ?'

● எட்டயபுரம் பாரதிவிழா வில் 100 திரைப்பட நடிக நடிகைகள் இயங்கிகளில் உலா வருவர். அமைச்சர்களும், கட்சித் தலைவர்களும் கலந்து கொள்வர். – செய்தி.

○ கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளா ரடி
-கிளியே
நாளில் மறப்பா ரடி.
-பாரதி.

தமிழ்நாட்டில் தமிழ்.

பொது:

உலகில் தோன்றியுள்ள மொழிகள் பலவாம். ஒவ்வொரு மொழியும் மாந்தருள் ஒவ்வொரு பிரிவினரால் பேசப்படுகின்றது. சில மொழிகள் பெரும் பிரிவினராலும் சில மொழிகள் சிறு பிரிவினராலும் பேசப்பெற்று வருகின்றன. சில மொழிகள் உலகம் முழுவதும் பரவியுள்ளன; சில மொழிகள் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே வழங்குவனவாயுள்ளன. உலக மொழிகள் பலவற்றுள்ளும் சிலவற்றிற்கே இலக்கிய இலக்கண வளம் நிரம்பியுள்ளது. சிலமொழிகள் பல்வகைக் கலைகளும் நிரம்பியன வாயுள்ளன; சிலவற்றிற்கு இலக்கியம், இலக்கணம் இல்லை சில மொழிகள் ஒலி வடிவம், வரிவம் பெற்றன; சில ஒலி வடிவம் மட்டும் உடையன.

மொழிகள் மாந்தர்தம் மனக் கருத்தைப் புலப்படுத்தும் வாயில்களாயமைந்தனவே யாயினும் இன்று ஒவ்வொரு மொழி பேசுபவரும் ஒரு தனி இனமாய் அமைந்துவிட்டனர்; தமக் கென ஒரு தனி நாட்டையும் அமைத்துக் கொண்டுள்ளனர். மொழி அடிப்படையில் நாடும், நாட்டு அடிப்படையில் மொழியும் அமைந்து ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு நிலைத்து விட்டன. நாடும், மொழியும் அவ்வந் நாட்டு மக்களுக்கு இரு விழிகள் என்று கூறும் நிலையை எய்திவிட்டன. இன்னும் சிறப் பிக்கக் கருதிய மாந்தர் 'தாய் மொழி', 'தாய் நாடு' என்று அருமை பெருமையுடன் அழைக்கின்றனர்.

தாய் நாட்டிற்கோ, தாய் மொழிக்கோ ஊறு விளைக்கக் கூடிய வினை யாது நிகழினும் மக்கள் வெகுண்டெழுந்து வீறு கொண்டு எதிர்த்து வெற்றி காண்கின்றனர். இன்றைய உலகச் சூழ்நிலை இவ்வாறிருக்க, தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்களது தமிழ்ப்பற்றும் தமிழ் நாட்டுப்பற்றும் இருக்கும் நிலை இறும்பூது விளைப்பதாயுளது.

புலவர்.
வி. பொ. பழனிவேலன்,
பி. ஓ. எல்.

சிலர் "இந்தியா ஒரே நாடு; அதற்கு இந்தி ஒரே ஆட்சி மொழியாக வேண்டு"மென்கின்றனர். வேறு சிலர் "இந்தியா முழுவதும் ஒரே நாகரிகம், பண்பாடுள்ள நாடு; இதனைக் கூறு போடுவது இந்தியத் தாயை உருக்குலைப்பது போன்றது" என் கின்றனர்.

சிலர் இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகட்கும் ஒரே எழுத்து முறை கொணர வேண்டும் என்கின்றனர்; மற்றும் சிலர், அவரவரும் தம் தம் மொழியை வளர்க்கவும், வளப்படுத்தவும், அழிவுருமல் காக்கவும் முற்படுவது 'மொழி வெறி' என்கின்றனர் ஒவ்வொருவரும் தம் தாய் நாட்டையும் தாய் மொழியையும் காப்பாற்ற நினைப்பது இயற்கையே. அஃது 'வெறி' என்பது அவலக்கூற்றே.

ஒரு மொழியுடன் வேறு ஒரு மொழி கலந்தால் அந்த மொழியின் தூய்மை கெடும்; அம் மொழியின் சொல்வளம் குன்றும். மொழி நூல் வல்லுநர் இதனை நன்கறிவர். தமிழ் மொழியும் தமிழ் நாடும் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த நிலைமையையும் இன்றுள்ள நிலைமையையும் சீர்தூக்கிப் பார்ப்பார்க்கும் இஃது நன்கு புலனுகும். இன்று தமிழ் நாட்டில் தமிழ் இருக்கும் நிலையைப்பார்த்து மனமாழ்கியதால் எழுந்ததே இக்கட்டுரை. ஊன்றிப்படித்து உண்மை ஓர்க.

ஊர்ப்பெயர்:

தமிழ் நாட்டில் பண்டு ஊர்ப்பெயர்கள் யாவும் தூய தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன. அயலார் குடிபுகுந்ததனுலும், அவரது மொழிகள் நாட்டில் பரவியதாலும் ஊர்ப்பெயர்கள் மாற்றமுற்றன. எடுத்துக் காட்டு: பழைய திருமறைக்காடு 'வேதாரண்ய' மாயிற்று; மயிலாடுதுறை 'மாயூர' மாயிற்று; சென்னை 'மதராசாகி'ப் பின் 'மெட்ராசா'யிற்று; 'முதுகுன்றம்' 'விருத்தாசல' மாயிற்று தஞ்சாவூர் 'டேஞ்சூர்' ஆயிற்று; 'மதுரை' 'மெஜுரா'வாயிற்று. பரங்கிப்பேட்டை 'போர்ட்டோ நோவோ' ஆயிற்று; நாகபட்டினம் 'நெகபடம்' ஆயிற்று. எழுதிக்கொண்டே போனுல் ஏட்டிலடங்கா. குறிப்பாகச் சிலவே கொடுத்தேன்; உய்த்துணர்க.

கோவில் பெயர்கள்:

தமிழ் நாட்டில் உள்ள கோவில் பெயர்களும் அவற்றில் உள்ள இறைப்பெயர்களும் தமிழில் இல்லை. காட்டாகச் சில கூறுவோம். 'கபாலீசுவரர்' கோவில், 'பிரகதீசுவரர்'கோயில், ஸ்ரீ பவ ஔஷதீசுவரர் கோயில், சுவேதாரண்யேசுரர் கோவில், அக்நீசுவர சுவாமி கோயில் முதலியனவாம். எல்லாப் பெயர்களும் வடமொழிப் பெயர்களாகவே உள்ளன வென்பது யாவருமறிவீர்கள். ஆங்கிலர் இந்துக்களாயிருப்பின் ஆங்கிலத்திலும் பெயர்கள் இருக்கும்.

இறை வழிபாடு:

கோவில்களில் நடைபெறும் இறைவழிபாடுகள் சமற்கிருதத்திலேயே இன்றும் நிகழ்த்தப்படுகின்றன. தமிழிற்ருன் தமிழ் நாட்டில் இறைவழிபாடு நடத்தவேண்டுமென்று சிலர் வலியுறுத்தியதன் காரணமாகப்பெயரளவில் சிலஇறையகங்களில் முதலில் சமற்கிருதத்திலும் பின்னர் தமிழிலும் சொல்லி, ‘கண் துடைப்பு வேலை’ நடைபெறுகிறது. தமிழ் நாட்டரசின் மதியமைச்சர் பக்தவத்சலனுர்கூடச் சமற்கிருதத்தில் இறைவழிபாடு செய்வது தான் ‘புனிதமானது’ என்று கூறுமளவு அம்மொழி தமிழர்களால் போற்றப்படுகின்றது. தாயைத் தவிக்கவிட்டு மாற்ருந்தாய்க்கு மாளிகை கட்டும் செயல் போன்றதே இஃது.

தமிழர் இல்லக் கரணங்களில்:

தமிழ் மக்களது இல்லங்களில் நடைபெறும் திருமணம், இறுதிக் கடன் முதலியவற்றில் சமற்கிருத மந்திரங்களே சொல்லப்படுகின்றன. இதனுல் நாம் அறிவது ஒன்றுண்டு. அதாவது இந்தச் சடங்கு முறைகளெல்லாம் ஆரிய சமய அடிப்படையில் அமைந்தவையே என்பதாம். பார்ப்பனர் வந்து சமற்கிருத மந்திரம் சொல்லிக் கரணங்கள் நிகழ்த்திஞல்தான் சிறப்பு என்று நினைக்கும் தமிழர் பலர் இன்றும் உளர் என்பதே வியப்பினும் வியப்பு. தமிழர்களின் மொழிப்பற்று இருந்தவாறென்னே!

தமிழர் இல்லப் பெயர்:

தமிழர்கள் தங்கள் வீடுகட்கு வைக்கும் பெயர்கள் பெரும் பாலும் இன்றும் சமற்கிருதத்தில் இடப்படுகின்றன. ‘ஆனந்த விலாஸ்’, ‘சுப்பிரமணிய விலாஸ்’, ‘சரஸ்வதி விலாஸ்’, ‘லெட்சுமி விலாஸ்’ ‘சீனிவாச விலாஸ்’ ‘ரங்க விலாஸ்’ முதலியன சிலவாகும். தமிழ்ப் பெயர் தெரியாமல் இவ்வாறு செய்கிருர்கள் போலும்!

தமிழ் மக்கள் பெயர்கள்:

தமிழர்கள் தங்கள் பிள்ளைகட்கு இடும் பெயர்கள் யாவும் கோவிந்தன், கோபாலகிருஷ்ணன், கோதண்டராமன, சாமிநாதன், சரோஜா, பானுமதி, கிருஷ்ணவேணி, இராஜலட்சுமி, பங்கஜம் போன்ற வடமொழிப் பெயர்களே. தமிழில் இனிய பெயர்கள் பலவிருக்க வடமொழிக் காதல் விட்டபாடில்லை. ஆனுல், இப்போழ்து சிலர் தமிழ்ப்பெயர்கள் இடத்தொடங்கியுள்ளமை பாராட்டிற்குரியதே. அப்பெயர்களைக்கண்டு ஏளனம் செய்கின்றவர்களும் இத்தமிழ் நாட்டில் இல்லாமலில்லை.

பேசுந்தமிழ்:

தமிழ் நாட்டில் தமிழ் மக்களால் பேசப்படும் தமிழில் தூய்மையில்லை. பல மொழிகள் கலந்தே பேசப்படுகின்றது. தமிழ்ப் புலவர்கள் முதல் தற்குறிகள் ஈருக யாவரும் கலப்புத் தமிழும் கொச்சைத் தமிழுமே பேசுகின்றனர் ஆங்கிலச் சொல், ஒரு வட சொல், ஒரு பாரசீகச் சொல், ஒன்றும் புரியாதவிடத்து ஒரு தமிழ்ச் சொல் சேர்த்துப் பேசுகிருர்கள். ஒரு தமிழாசிரியர் பேசுங்கால், ''நான் எஸ்டர்டே ஈவினிங் உங்களை மீட் பண்ண லான்னு பார்க்குக்கு வந்தேன். 'பட்' (ஆனால்) காணமுடிய வில்லை. பிறகு ராத்திரி டுவல்வோ கிளாக்குக்குமேல் ரொம்பக் கஷ்டப்பட்டு வீடு போய்ச் சேர்ந்தேன்,'' என்று கூறினார்.

ஒரு கல்லா மாந்தன், ''நேத்து காத்தாலே கோழியெல் லாம் வயல்லே கருதையெல்லாம் உருவிட்டது. ஓம்மவனுக் கிட்டே சொள்ளி கவனிச்சி பாத்துக்கச் சொள். ஒரு டீ, கீ வாங் கிச் சாப்பிட்டுகிட்டாச்சும் இருக்கட்டும். சாய்ங்காலம் ஸ்கூல் பள்ளிக்கொடத்துக்குப் போவலான்னு சொள்றீயா,'' என்று கழறினன்.

ஒரு மேடைப் பேச்சாளன், ''நம்மிடையே பல பிரச்னைகள் இருக்கின்றன. இந்தக் கூட்டத்திலே ஒரு ரிசல்யூஷன் மூவ் பண்ணி சர்க்காருக்கு அனுப்பி அந்த ரிசல்ட் தெரிந்துதான் மற்றதை அட்டெண்ட் பண்ணனும்,'' என்று முழங்கினன். தமிழ் நாட்டில் பேச்சுவழக்கில் தனித் தமிழில் பேசுவோர் ஒருவருமே இல்லையெனலாம். யாராவது பேச முன்வந்தாலும் பலருடைய ஏளனத்திற்கும் ஆளாக நேர்கிறது; கேட்டவர் நகுகின்றனர். தமிழ் நாடே! நீ என்று திருந்துவாயோ?

செய்தித்தாள்களில் தமிழ்:

எனது பட்டறிவுக்கெட்டியாங்கு தனித் தமிழில் எழுதும் ஏடு, ''தென்மொழி'' ஒன்றே என்பது துணிபு. ஏனைய ஏடுகள் பிழைப்பை அடிப்படையாகக் கொண்டவை. திரைப்பட நடிகர் நடிகைகள் படங்களை வெளியிட்டும், அவர்களது வரலாற்றை எழுதியும், கேள்விகட்கு விடையளிக்கச் செய்தும் விற்பனையை மிகுதிப்படுத்த முயல்கின்றனவே யன்றித் தூய தமிழில் செய்தி களை வெளியிட்டுத் தமிழை வளர்க்க முற்படுகின்றனவாயில்லை.

சில செய்தித் தாள்கள், பேசுவது போல, கொச்சைத் தமிழில் எழுதுகின்றன; சில அம்மாமித் தமிழில் எழுதுகின்றன. அத்தகைய தாள்களையே பொதுமக்கள் மிகவும் விரும்பிப் பயில் கின்றனர். கற்றவர்கள்கூட அத்தகைய தாளிகைகளைப் படிக்

கின்றனர். ஆனால், 'தென்மொழி' போன்ற இதழ்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

மக்களைக் கவர்வதற்கு என்னென்ன வகையில் செய்திகளை வெளியிடலாம் என்று கவல்கின்றனரேயன்றித் தமிழ் வளர்ச்சியன்று அத்தாளிகைகளின் ஆசிரியர்களது குறிக்கோள். தனித் தமிழில் எழுதும் செய்திகளை அவர்கள் வெளியிடுவதுமில்லை; திருப்பி அனுப்புவதுமில்லை.

தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ் நாகரிக வளர்ச்சி, தமிழ் வரலாற்று வளர்ச்சி முதலியவற்றையே குறியாகக் கொண்டு வெளிவரும் இதழ் 'தென்மொழி'யைத் தவிர வேறுஎதுவுமில்லை. தமிழ் நலத்தை மட்டும் பேணும் தாளிகைகளும் சிலவுள. தமிழ்ச் சொற்களைக்கூட எழுத்துப் பிழையின்றி எழுதத் தெரியாத ஏடுகள் பல. கொச்சைத் தமிழிலும் கொடுந்தமிழிலும் எழுதும் ஏடுகளும் பல. அவை மொழிபற்றிக் கவலைப்படாதவை. தாளிகைத் தொழிலைப் பிழைப்பாகக் கொண்டவை.

இசையரங்குகளில் தமிழ்:

தமிழ் நாட்டில் நடைபெறும் இசையரங்குகளில் பெரும்பாலும் தெலுங்குப் பாடல்களும், இந்திப் பாடல்களுமே பாடப்படுகின்றன. யாராவது தமிழ்ப்பாட்டுப் பாடுக என்று கூறினால் ஓரிரு பாடல்கள் பாடப்படும். தமிழில் பாடல்கள் இல்லையென்பாரும் உளர். அவர்கள் தமிழிசை அறியாதாரே. இன்று பாடப் பெறுவது ''கருநாடக சங்கீதமே'' யாம். தமிழிசை மறைந்தே போயிற்றெனலாம். தமிழிசையை மறுமலர்ச்சியுறச் செய்ய அண்ணாமலைப்பல்கலைக் கழகம் மேற்கொண்ட முயற்சி நன்முறையில் நடைபெறுமாக. தமிழ்ப் பாடல்கள் தொகுப்பு நூல் ஒன்று தமிழிசைக் கல்லூரியின் சார்பில் வெளியிடப் பெற்றுளதெனத் தெரிகிறது. தமிழில் பாடல்கள் இல்லையென்பார்க்கு இஃதொரு மறுப்பு.

அங்காடிகளில் தமிழ்:

தமிழ் நாட்டில் உள்ள கடைத் தெருக்களில் தொங்கும் பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துகள் தெரிகின்றனவே தவிரத் தமிழ்ச்சொற்கள் இல்லை. 'ஜெனரல்மர்ச்சென்ட்ஸ்' 'ரெடிமேட் ஸ்டோர்ஸ்' 'சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ்,' 'மெடிகள் எம்போரியம்,' என இத்தகைய பெயர்களே காணப்படுகின்றன. கடைகளில் இருக்கும் பொருள்களின் பெயர்களும் தமிழாகவே இல்லை. 'வேஷ்டி, ஷர்ட், டவல், சேரி, ஜாக்கெட், சோப், ஆயில், பவுடர், லைட், கிளாஸ், டம்ளர், மெடிசன்,' முதலான ஆங்கிலப் பெயர்களாலேயே அறையப்படுகின்றன.

தமிழ்நாட்டுக் கடைத்தெருக்கள் தாமோ என்ற ஐயம் எழுகின்றது.

உண்டிச்சாலைகளில்:

தமிழ்நாட்டு உணவுச் சாலைகளில் தொங்கும் பெயர்ப் பலகைகள் தமிழில் இல்லை. மங்களாம்பிகா லாட்ஜ், ஆனந்தா லாட்ஜ், வெங்கடேசுவரா லாட்ஜ், மிலிடரி ஹோட்டல், காபி கிளப், லஞ்சு ஹோம், கிருஷ்ணு கபே, ஒரிஜினல் அய்யங்கார் கேப் முதலிய பெயர்களே காணப்படுகின்றன. உள்ளே உள்ள பண்டங்களின் பெயர்களும் தமிழாகவே இல்லை. பூரி, லாடு, பஜ்ஜி, அல்வா, சிலேபி, மைசூர் பாக்கு, ஜேங்க்ரி, பாதாம்கீர், பாதுஷா, தூத்பேடா, கேசரி, ரோஸ்மில்க், லட்டு என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன. தமிழர்கள் ஒரு பண்டங்கூடச் செய்து தின்றதில்லையோ என்று எண்ணவேண்டியுளது. ஏனெனில், ஒரு பண்டத்திற்குக்கூடத் தமிழில் பெயர் இல்லையல்லவா? செய்திருந்தால் தமிழ்ப் பெயர் இட்டிருக்கமாட்டார்களா? என்ற ஐயங்களே.

பொதுப் பெயர்ப் பலகைகள்:

அலுவலகம், தொழிலகம், படிப்பகம் முதலியவற்றிற்கு உள்ள பெயர்ப் பலகைகள்கூடத் தமிழில் எழுதப்படவில்லை. போஸ்டாபீஸ், இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட், டுடோரியல் காலேஜ், ஹேர் கட்டிங் சலூன், ரீடிங் ரூம், பப்ளிக் லைப்ரரி, ரைஸ் மில், பிளவர் மில், போர்டு ஹைஸ்கூல், ஹையர் எலிமென்டரி ஸ்கூல், ஆரம்பப்பாடசாலை, சைக்கிள் மார்ட் என்றே எழுதப் பெற்றுள்ளன.

ஆனால், இப்பொழுது மாநில அரசுக்குட்பட்ட சில அலுவலகங்களின் பெயர்கள், தமிழில் எழுதப்பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதே.

பள்ளிகள், **அலுவலகங்கள்:**

தமிழ் நாட்டு ஆட்சியாளர் தமிழ் முதன்மொழி என்றும், சில அலுவலகங்களில் தமிழைப் பயன்படுத்தவேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளனர். ஆனால், முதன்மொழிக்குரிய உரிமைகள் எதுவும் வழங்கப்பெறவில்லை. தமிழகப் பள்ளிகளில் மாணவர் வருகைப் பதிவுப் பட்டியல்கூடத் தமிழில் இன்னும் எழுதப்பெறவில்லை; மாணவர் வருகைப் பதிவு செய்யப் பெயர்களைச் சொல்லும்போது 'உள்ளேன் ஐயா' என்று சொன்னால்கூடச் சில தலைமையாசிரியர்கள் 'ப்ரெசென்ட் சார்,' என்று கூறும்படி கட்டளையிடுகின்றனர். சில ஆசிரியர்கள் தமிழ் வகுப்பில் தமிழில் சொல்லுங்கள், என் வகுப்பில் ஆங்கிலத்திலேயே சொல்லுங்கள் என்கின்றனர்.

சுற்றறிக்கைகளும், அரசினர் ஆணைகளும், கடிதப்போக்கு வரத்துகளும் இன்னும் ஆங்கிலத்திலேயே அனுப்பப்பெறுகின்றன. பெயரளவில் முதல்மொழியே அன்றி, செயலில் கொணரப் பெறவில்லை யென்பது வருந்தத்தக்கதே. ஏனைய அலுவலகங்களிலும் இந்த நிலைதான் நீடிக்கிறது. ஆட்சிச்சொல் அகர வரிசை இருந்துங்கூடத் தமிழில் எழுதத் தெரியவில்லையாம்; எழுதினால் புரியவுமில்லையாம். யாவரும் தமிழரா? ஆங்கிலேயரா? என்பது விளங்கிற்றிலது.

தமிழ்ப்புலமையும் பள்ளியிறுதி வகுப்புப் பயிற்சியும் பெற்றவர்களையே தமிழக அரசினர் அலுவலகங்களில் எழுத்தர்களாகவும், தமிழ் எம். ஏ; பி. ஏ; பி ஓ. எல்; எம். ஓ. எல். முதலிய பட்டத்தினரை உயர் அலுவலர்களாகவும் அமர்த்தினால் எல்லாம் எளிதில் தமிழில் நடைபெறும்.

தமிழ்ப் பேராசிரியர்கள், புலவர்கள்:

கல்லூரி, உயர் பள்ளிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்களில் வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் தமிழ் கற்றவர்கள் பலர் உளர். தமிழ்ப் பற்றுடன் தமிழ் கற்றார் ஒரு சிலரேயாவர். தமிழ்ப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் உள்ள தமிழாசிரியர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் அல்லது வேதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

பேராசிரியர்கள் என்பவர்கள்கூடத் தனித்தமிழில் பேசுவதற்கோ, எழுதுவதற்கோ அஞ்சுகிறார்கள். சிலர் ''கதம்பத் தமிழை''யே கையாளுகிறார்கள். பண்டாரகர் பட்டம் பெற்றவர்களில் பலர் அத்தகையோரே.

பாடம் பயிற்றும் போழ்தும் தூய தமிழை அவர்கள் பயன்படுத்துவதில்லை. ஏனெனின், தமிழ்ப் பகைவர்கள்பால் பாராட்டுப் பெறுவதற்கும், பொன்னாடை போர்த்தப் பெறுவதற்குமேயாம். இத்தகையோரைத் தமிழர்கள் என்று கூற எனது நா கூசுகின்றது. 'தென்மொழி' போன்ற தமிழ்த் தாளிகையைக் கண்ணால்கூடப் பார்க்கமாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

தமிழ்நாட்டுச் சட்டமன்றங்கள்:

இங்குத் தமிழிலும் பேசலாம்; ஆனால் பலருக்குப் புரியாதாம். ஆங்கிலத்தில் பேசினால் அனைவர்க்கும் புரிகிறதாம். சில சட்ட நுணுக்கங்களைத் தமிழில் சொல்ல முடியவில்லையாம்; சொன்னாலும் புரிந்துகொள்வது கடினமாயிருக்கிறதாம். என்னே! தமிழராட்சித்திறன். அயலார் தமிழ் நாட்டில் நுழையாத பண்டைக் காலத்தில் முடிகெழுமூவேந்தர் எம்மொழியில்

நாட்டாட்சி நடத்தினர்? இப்போழ்து மட்டில் ஏன் தமிழால் ஆள முடியவில்லை?

கல்லூரிகளில்:

தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் பயிற்று மொழியாகத் தமிழை வைக்கத் தமிழ் அரசு தயங்குவது ஏன்? தமிழ்நாட்டுக் கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாப் பாடங்களும் தமிழில்தான் கற்பிக்கப்பெறும் என்று அரசு கட்டளையிட்டால் யாரே மறுக்க வல்லார்? சில கல்லூரிகளில் மட்டில் பயிற்றுமொழி என்றும், பயிலும் மாணவர்க்குத் தலைக்கு மாதம் முப்பது உருபா உதவித் தொகையளிக்கப் பெறும் என்றும் கண்துடைப்பு வேலை செய்து விட்டு மாணவர் தமிழில் பயில முன்வரவில்லை என்று குறை கூறுவதால் பயனென்?

தமிழர் கடமை:

தமிழ்ப் பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் தமிழர் ஒவ்வொருவருடைய இன்றியமையாக் கடமையாகும். பிறநாட்டினரைப் பார்த்தபின்னராவது தமிழர்க்கு அப் பற்றுகள் உண்டாக வேண்டாமா? ஏன்? 'இந்தி' மொழி பேசுவோர் தம்மொழியை இந்தியப் பொது மொழியாக்கச் செய்யும் சூழ்ச்சிகளை அறிந்தாவது திருந்தக்கூடாதா?

தமிழ் என்ற ஒருமொழியும் தமிழர் என்ற ஓர் இனமும் நிலையாக வாழ வேண்டுமாயின் தமிழ்நாட்டில் தமிழ் ஒன்றே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். உலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் பொது மொழியாக இருக்க வேண்டும் வேறு எந்த மொழியும் தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்பதை எல்லாத் தமிழர்களும் ஒருமுகமாக உணர்ந்துரைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப்பெயர்கள், மக்கட் பெயர்கள், இறையகப் பெயர்கள் முதலியவை தமிழ்ப் பெயர்களாக்கப் பெற வேண்டும். கோவில்களில் தமிழர்களே வழிபாட்டுக்குதவுவோராயிருந்து தமிழிலேயே வழிபாடாற்ற வேண்டும். பெயர்ப் பலகைகள் எல்லாம் தமிழில் மாற்றி எழுதப் பெறவேண்டும். தமிழகப் பள்ளிகளில் எல்லா நடவடிக்கைகளும் தமிழில் நடைபெறவேண்டும். அலுவலகங்களிலும் எல்லாம் தமிழாக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் எங்குநோக்கினும் தமிழ் மணங்கமழ வேண்டும். தனித் தமிழ்த் தாளிகைகளையே தமிழர்கள் விரும்பியேற்க வேண்டும்; ஏனையவற்றை இகழ்ந்தொதுக்க வேண்டும். 'தமிழைப் பழித்தவனைத் தாய்தடுத்தாலும் விடேன்' என்ற உணர்ச்சி எல்லாத் தமிழர்க்கும் உண்டாக வேண்டும். பேச்சிலும் எழுத்திலும் தனித் தமிழ் களிநடம் புரியச் செய்யத் தமிழர் யாவரும் உழைப்பார்களாக.

மலர்ச்சி தோன்றும்!

செந்நீரைத் தண்ணீராய்ப் பாய்ச்சி வையம்
செழிப்படைய உழைக்கின்ற கூட்டந் தன்னை
எந்நாளுங் கண்ணீரைச் சிந்த வைத்தே,
ஏலத்தில் எலிப்புழுக்கை கலந்து விற்கும்
பன்னாடைக் கூட்டத்தைப் பல்லக் கேற்றிப்
பன்னீருந் தெளித்துப்பல் லாண்டு கூறும்
புன்னீர்மை கொண்டதொரு குமுகந் தானும்
புழுத்துவிடும் சிலநாளில்! மலர்ச்சி தோன்றும்!

உலகத்தை விலைகூறி வந்த போதும்
உண்மைக்கே தலைவணங்கும் பெற்றி யோரை
நிலையாக ஒழுக்கத்தில் நிற்கும் ஆண்மை
நிறைமாந்தர் தமையிருளில் மறைத்து வைத்துக்,
கொலைசெய்வா ரினுங்கொடிய கள்ளச் சந்தைக்
கோட்டான்க ளைத்தலையில் தூக்கி வைத்துத்
தலைதாழ்த்திக் கொண்டாடுங் குமுகந் தானுந்
தகர்ந்து விடும் சிலநாளில்! மலர்ச்சி தோன்றும்!

நாணயத்தை வயலாக்கிப் போது மென்ற
நல்லமனம் எருவாக்கி உண்மை பாய்ச்சி
வாணிகத்தைப் பயிராக்கி வளர்ப்பார் தம்மை
வயிறெரிய மூலையிலே முடக்கி விட்டுக்
கோணல்வழிச் சந்தையிலே கொள்ளைக் காசு
குவிக்கின்ற குள்ளநரிக் கூட்டத் தாரின்
ஆணவத்தை வளர்க்கின்ற குமுகந் தானும்
அழிந்துவிடும் சிலநாளில்! மலர்ச்சி தோன்றும்!

பணிமனைகள் கலையரங்கு பள்ளிக் கூடம்
பல்வேறு தொழிற்சாலை வழக்கு மன்றம்
பிணியகற்றும் விடுதிகளிங் கெல்லாம் ஆவி
பிரிந்தாலும் ஒழுக்கத்தைப் பிரியா தாரைத்
துணிந்தேநல் லறத்திற்கே துணைநிற் பாரைத்
"தூ"வென்று தள்ளிவிட்டுக் கள்ளச் சந்தைப்
பணத்திற்கே மதிப்பளிக்குங் குமுகந் தானும்
பாழ்த்துவிடும் சிலநாளில்! மலர்ச்சி தோன்றும்!

புதுவை சுப்பிரமணியன்

விண்ணியல்

புறவுலகங்களில் உயிர் வாழ்க்கை.

கதிரவக் குடும்பத்தைச் சேர்ந்தவற்றுள் செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு கோள்களில் மட்டுமே உயிர் வாழ்க்கை நடைபெறுவதாக இருக்கலாம் என்று அறிவியலறிஞர் கூறுகின்றனர். பிற கோள்கள் எல்லாம் மிக வெப்பமாகவோ, மிகக் குளிராகவோ அன்றி நச்சுக் காற்றுகள் சூழ்ந்தனவாகவோ தாம் இருக்கின்றன. செந்நிறமான செவ்வாயுள்ளும் மிகக் குறைந்த அளவே நீர் கிடைப்பதால், மிகத் தாழ்ந்த நிலைத்திணையாகிய பூஞ்சணம் முதலிய உயிர்ப்பொருளே வளரமுடியும் என ஆய்வாளர் கூறுகின்றனர். வெண்ணிறக் கோளாகிய வெள்ளியில் உயிர்வளியும் நீராவியும் மிகமிகக் குறைவாகலின், ஒருவேளை அது வெறும் புழுதிப் பாலையாக-நிலைத்திணையே இல்லாததாக இருத்தலும் கூடும் என்று கருதுகின்றனர். அறிவு வளர்ச்சியுற்ற உயிரினங்களன்றிக், கூர்தலற முறைப்படி மிகச் செப்பமாக வளராத உயிரினங்கள்கூட அவற்றில் வாழ்வது இயலாதெனத் திட்டமாக அவர் கூறுவர். இவை இரண்டன்றி மற்ற கோள்களிலோ, பல்லாயிரக்கணக்கான பாகைகளின் வெப்பத்தால் கொதித்துக் கொண்டிருக்கும் கதிரவன் போன்ற உடுக்களிலோ எவ்வகை உயிரும் வாழ்தல் இயலாதென்பதை யாவரும் அறிவர். வால்மீன் (Comets) எரிமீன் (Meteor) போன்ற வற்றிற்கோ இழுப்பாற்றலே மிகவும் குறைவு; காற்று மண்டிலமும் இல்லை. ஆதலின் கதிரவனின் வெண்ணீலக் (Ultraviolet) கதிர்களின் கடுவெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் இல்லை; அதனால் அவற்றில் உயிர்வாழ்தலும் இயலாது. அறிவியலறிஞர் சிலர் பிற விண்மீன்களைச் சுற்றிச் சுழல்கின்ற கோள்கள் சிலவற்றுள் உயிர்வாழ்க்கை நடைபெறலாம் என உறுதியாக நம்புகின்றனர்.

பர். ஆட்டோ சுட்ரூவ் என்னும் அறிஞர் மெல்லச் சுழல்கின்ற (Slow-Spinning) விண்மீன்களே தங்களைச் சுற்றிக் கோள்களை இழுத்துக்கொண்டுசெல்கின்றன என்று கூறுகின்றார். திரள்கின்ற துகள், அன்றி ஆவிக் குமிழ்களே மெல்ல மெல்லக் கோள்களாக இறுகுகின்றன என்று அறிவியலறிஞர் கூறுவர். வாறு உருவாக்கப்படும் உடுக்களுள் சில ஏறத்தாழப் பத்து விழுக்காட்டுக்குக்குறைவான அணுத்துகள்படலங்களையே பெற்றுள்ளன. தம்மைச் சுற்றிச் சுழலும் கோள்களின் இடைவிடாத இழுப்பாற்றலால் நாளடைவில் மூல விண்மீன்கள் வலிவிழந்து போகின்றன. நாமறிந்த விண்மீன்களில் 90 விழுக்காட்டுக்கு மேல் உள்ளவை கோள்களை உருவாக்க முடியாதவாறு அவ்

வளவு மிக விரைவாக இயங்குவனவாக இருக்கின்றன என்று சுட்ருவ் கூறுவர். பால்வெளி மண்டிலத்தில் உள்ள ஏறத்தாழப் பத்தாயிரங்கோடி விண்மீன்களில் பத்தில் ஒருபங்கே மெல்லச் சுழல்கின்றன என்று அவர் கணக்கிட்டுள்ளார். இத்தகைய உடுக்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஐந்தைந்து கோள்களைப் பெற்றிருக்கும். இதன்படி, பால்வெளி மண்டிலத்தில் மட்டும் ஏறத்தாழ 5000 கோடி கோள்கள் சுழல்வதாகக் கூறலாம். இவற்றுள் ஆயிரங்கோடி கோள்களிலேயே உயிர்கள் வாழ்தல் கூடும் என்று மதிப்பிடுகின்றார். இக்கணக்கீட்டின்படி பத்திலக்கம் முதல் ஒருகோடிவரை உள்ள கோள்களிலேயே அறிவுள்ள உயிர்கள் வாழ்தல் கூடும் என அவர் நம்புகின்றார்.

உயிர் வாழ்க்கை நடைபெறுகின்ற கோள்கள் தாங்கள் சுற்றி வருகின்ற மூல விண்மீனை மிக நெருங்காமலோ, அதனை விட்டு மிகத் தொலைவில் சென்றுவிடாமலோ சுற்றிவரல் வேண்டும். இல்லாவிடில் மிக வெப்பத்தாலோ, மிகக் குளிராலோ அக்கோள்களில் உயிர்த்தோற்றமே இல்லாமற் போகலாம். மேலும் அவற்றில் காற்று மண்டிலமும் (Atmosphere) நீரும் இருக்குமளவிற்கு அவை பெரிதாக விருத்தலும் வேண்டும். மிகவும் பெரிதாக இருக்குமாகில் அளவுக்கதிகமான காற்று மண்டிலம் உருவாகி விடும். நீர்வளி தேவையான அளவு பிரிந்து செல்லாமற் போமாயின் காரியிலும் வியாழனிலும் உள்ள 'அமோனியா' 'மீதேன்' போன்ற நச்சுக்காற்றுகள் உருவாகி விடும். எனவே மண்ணுலகின் சுழல்களின் மாறுபட்ட கோள்களில் உயிர் வாழல் முடியும் என்று கருதுதற்கில்லை என்று சுட்ருவ் கருத்தறிவிப்பார். ஆனல் பர். ஆர்லோ சேப்லி இவர் கருத்துக்கு மாறுபடுவர் உயிரினங்கள் தங்களைச் சூழலுக்குத் தக்கபடி மாற்றிக் கொள்ளும் திறனுடையன என்றும், நெடுங்கால அளவில் அவை தங்கட்கொவ்வாத சூழல்கட்கும்கூட ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ளல் முடியும் என்றும் அவர் கூறுவர். நம் உலகிலும் பல்வகையான வெப்பக் குளிர்நிலைகட்கு ஏற்றவாறு ஆங்காங்கு உயிர்கள்வாழ்ந்து வருவதையும், பனிமூடிய நிலமுனைப் பகுதிகளிலும் வெப்ப நீரூற்றுகளின் அருகிலும்கூட ஒருவகை நுண்பூண்டுகளும் நுண்ணுயிர்களும் வாழ்வதையும், அவர் தம் கூற்றுக்குத் துணையாகக் காட்டுவர். உயிர்கள் திடுமென ஏற்படும் இயற்கை நேர்ச்சிகளால் சிதைத் தொழிக்கப் படாவிடில், எத்தகைய சூழல்கட்கும் தங்களைப் பொருத்தமாக்கிக் கொள்ளக் கூடிய தனித்தன்மை பெற்றிருக்கின்றன. ஆகவே இம்மண்ணுலகினும் குளிரோ வெப்பமோ மிகுந்த பிற உலகங்களிலும்கூட உயிர் நீட்டிப்புக்குத் தேவையான மாறுதல்களுடன் ஒருவகை உயிர்கள் வாழ்தல் கூடும் என்ற கருத்தும் பொருந்துவதே

புடவியிலுள்ள கோள்களில் குறைந்தது 100 கோடி அன்றி 1000 கோடி கோள்களிலேனும் உயிர் வாழ்தல் கூடும். அங்

குள்ள உயிர்களெல்லாம் உயிர்வளியை உட்கொண்டு கரி வளியை வெளிப்படுத்தும் இயங்குதிணை உயிரிகளைக் கொண் டோ, கரிவளியை உட்கொண்டு உயிர்வளியை வெளிப்படுத் தும் நிலைத்திணை உயிரிகளைக் கொண்டோ இயங்கலாம். மேலும் உயிர்வளியும் கரிவளியும் பெற்றிராத வேறு கோள்களிலும்கூட உயிர்கள் தோன்றியுள்ளன என்பதற்குச் சான்றுகள் உள. கலி போர்னியாவில் உள்ள கலவை நூலாசிரியரான பர். மெல்வின் கால்வின் என்னும் அறிவியலறிஞர் நம் மண்ணுலக உயிர்வாழ்க் கைக்கு மாறான சூழல் கொண்ட கோள்களில்கூட ஒருவகை உயிர் வாழ்க்கை நடைபெறக்கூடும் என்பர். இவர் கூற்றுக்குப் பர். பென்சர் சோன்சு உடன்படுவர்.

பிற கோள்களில் உயிர்கள் உண்டா இல்லையா எனக் கண்டுபிடிப்பதற்கு அறிவியலார் மூன்றுஅடிப்படைக் கொள்கை களை வகுத்துள்ளனர். ஒன்று, இப்புடவி எங்கும் பரந்துள்ள உயிரணுக்கூட்டம் ஒரே தன்மையானவை; அவை எங்கிருப்பி னும் ஒரே விளைவையே உண்டு பண்ணக் கூடியன. இரண்டு, உயிர்கள் முதன் முதல் நீர்மப் பொருளிலேயே தோன்றிப் பல்வகையாகப் பெருகும் ஆற்றலுடையன. மூன்று, உயிர்கள் ஒரு முறை தோன்றிவிடின், என்றும் அற்று விடுவதே இல்லை. இம்மூவகை அடிப்படைகளிலேயே உயிர்கள் தோன்றி வளர் தல் கூடும். இவ்வகையில் பிற கோள்களில் உள்ள உயிர்கள் எத்தகையனவாக இருக்கலாம் என்பதற்கும் அறிவியலறிஞர் விடை தந்துள்ளார். சில கோள்களில் வெறும் நிலைத்திணைகளே இருக்கலாம். வேறு சிலவற்றில் வளர்ச்சியுற்ற விலங்குகள் உயிர் வாழலாம்; இன்னும் சிலவற்றுள் இவ்வுலகில் எப்பகுதி யிலும் காணப்பெறாத வேறு வகையான உயிர் கூட்டுப் பொருள் களும் அசைவுயிர்களும் இருக்கலாம். இன்னும் சிலவற்றுள் மாந்தன் தன் கண்கட்குப் புலப்படாத உயிர் நடமாட்டமும் இருக்கலாம்.

பர். சேப்ளி என்னும் அறிவியலறிஞர், இந்நிலவுலகின் காலத்தோடும், அளவோடும், அகவையோடும், அமைப்போடும் ஒத்த ஒரு கோளுக்கு நாம் செல்லக் கூடுமாயின் அங்கு நம் நம்பிக்கைக்குமேல் வியக்கத்தகும் ஓருயிர் வாழ்ந்துவிடப்போவ தில்லை; 15 கோடியாண்டுகட்கு முன் இவ்வுலகில் வாழ்ந்த பூதநிலை விலங்குகள்கூட அங்கிருக்கலாம்; அவற்றைப் பார்த்து நாம் வியத்தல் வேண்டுவதில்லை என்பர். பிரித்தானிய அறிவிய லறிஞர் பர். கிளார்க் அவர் தம் கூற்றுப்படி புறவுலகங்களில் மண்ணுலக மாந்தனைப் போன்ற உயிர்களும் இருக்கலாம்; அவனைவிட அறிவிலும் உருவிலும் சிறந்தோ குறைந்தோ கூட விருக்கலாம் ஆங்காங்குள்ள கலவைப் பொருள்களின் கூட்டுத் திறனைப்பொருத்ததாகும் அது. ஏனெனில் உயிர் வாழ்வுக்குகந்த

எல்லாக் கோள்களும் ஒரே காலத்தில் உருவாகியிரா என்பர். மாந்தனின் வரலாற்றுக் காலம் மிகக் குறுகிய தாகலின், அவன் இப்புடவியில் உள்ள உயிர்களில் முதிரா உயிர் என்றும் கொள்ளலாம். இவனைவிடப் பத்து அல்லது நூறு கோடி ஆண்டுகள் முன்பே வேறு கோள்களில் உயிர்கள் தோன்றி, அவை இவனைவிட அறிவினும் நாகரிகத்தினும் முற்றி முதிர்ந்தும் இருக்கலாம் என்பதும் அவர் கருத்தாகும்.

கோள்களின் கலவைப் பொருள், காலம், அளவு முதலிய பொருட்டுகளால் உயிர்கள் தாமேதோன்றி வளர்வதுபோலவே, ஒரு கோளில் உள்ள ஓருயிரின் நுண்ணணுக்கள் பிறிதொரு கோளுக்குப் போய்த் தங்கிப் பரந்து சிறத்தலும் கூடுவதாகும்.

இவ் வளக்கலாகாப் பெரும்புடவியெங்கும் பரந்து சுடர்கின்ற ஒளியின் அழுத்தத்தால் ஒரு கோளில் உள்ள நுண்ணிய உயிர்கள் விண்வெளியின் வழி உந்திச் செல்லப் படுகின்றன. இவ்வாறு செல்கின்ற இவை ஏதேனும் ஒரு கோளின் இழுப்பாட்சிப் பரப்பில் நுழையுங்கால் அக்கோளால் இழுக்கப்பெற்று அதனை அடைந்து அங்கும் உயிரைத் தோற்றுவிக்கின்றன என்று அறிவியலறிஞர் கூறுவர். பல கோடிக்கணக்கான அணுத்துகள்கள் இவ்வகையிலேயே பிறகோள்களை எய்தி ஆங்காங்கு உயிர்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வழியில் உயிர்கள் செவ்வாயிலிருந்து தோன்றி மண்ணுலகுக்கோ, மண்ணுலகில் தோன்றி செவ்வாய்க்கோ போயிருக்க வேண்டும் என்றுபர். சிம்சன் என்னும் அறிஞர் கூறுவர் விண்வெளியில் இயங்கும் கதிரவன் போன்ற விண்மீன்களினின்றும் வெளிப்படும் மிகு வெப்பமுடைய வெண்ணீலக் (Ultra-Violet) கதிர்களால் இந் நுண்ணுயிர்கள் அழிந்து போகுமாதலின் மேற்கூறிய கூற்று சரியன்று என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இத்தகைய கதிர்களின் கடுவெப்பத்தையும் எதிர்த்துத் தம்மை நிலைப்படுத்திக்கொள்ளும் போராற்றல் சில நுண்ணுயிர்கட்கு உண்டு என சிம்சன் தம் கருத்தையே வலியுறுத்துவர். அவ்வாறே கொள்ளின் ஒரு கோளினின்று மற்றொரு கோளுக்குச் செல்லப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும் ஆகையால், அந்நெடுங் காலம் வரை இவ்வுயிர்கள் வாழ்ந்திருத்தல் இயலாது என்று வேறு சிலர் கருத்தறிவிப்பர். எவ்வாறாயினும் இக்கருத்தை அடியோடு தள்ளுதற் கியலா தென்றும் அவ்வாறு தள்ளுதல் மடமையென்றும் சிம்சன் கூறுகின்றார்.

இத்தகைய முடிவற்ற நிலையில் வானிலை ஆய்வாளர்களுக்குள் இன்னொரு வினாவும் எழுகின்றது. உயிர்கள் பிற உலகங்களில் தோன்றி வாழ்வது உண்மையாயின் அவை நம்முலகத்திற்கு வந்து சேராமைக்கு என்ன காரணம் என்பதே அவ்வினா. இவ்வினாவிற்கு ஒருவாறு விடையிறுக்கப் பெறுகின்றது.

ஓர் உலகத்தினின்று பிறிதோர் உலகத்திற்குச் செல்லப் பெரிதும் தடையாகவிருப்பன காலமும் தொலைவுமே. நமக்கு மிக அண்மையிலிருப்பதாகக் கூறப்பெறும் ஒரு விண்மீன் நமக்கு 250 கோடி கற்கள் தொலைவில்உள்ளது. அவ்விண்மீனைச் சுற்றி யுள்ள ஒரு கோளினின்று ஒரு விண்வெளிக் கப்பல் ஒன்று ஒரு மணிக்குப் பத்திலக்கம் கற்கள் மேனி பயணம் துவங்கினால் அது மண்ணுலகை வந்தடைய 3000 ஆண்டுகள் ஆகும். மற்றும் உயிர்களின் அறிவுத்திறனும் ஓர் எல்லைக்குட்பட்டதே. நம்மி னும் மிக்க தேர்ச்சி பெற்ற அறிவை உடைய ஓர் உயிர் அங்கு வாழ்வதாகக் கருதினாலும், அவ்வுயிர் இப்பயணத்துக்கேற்ற கப்பலை உண்டாக்கிக் கொள்ள முடியுமா என்பது ஐயமே. பறக் குந்தட்டில் நம்பிக்கை வைக்கும் கற்பனையாளர் சிலரே இதை நினைத்து மகிழல்கூடும். அறிவியலறிஞரும், வானூர்திப் பயணி களும் இக்கருத்தை எள்ளி நகையாடுவர். இவை தவிர விண் வெளியிலுள்ள பிற கோள்களினின்று எவ்வகை ஒலிக் குறிப்பும் இன்றுவரை நம்மை வந்தடைந்ததில்லை. செவ்வாய் மண்டிலத் தார் நம்மோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்கின்றனர் என்று ஒரு சிலர் கூறிய கூற்றும் ஆய்வுக்கு நிற்கவில்லை. 1900-திசம் பர் திங்களில் செவ்வாயிலிருந்து இரவு நேரங்களில் ஒருவகை ஒளிக் குறிப்பு இவ்வுலகிற்கு வந்ததென்று விண்ணியலார் சிலர் கூறினர். ஆனால் அஃது அதனைச் சூழ்ந்துள்ள முகில்களில் கதிரவன் ஒளிபட்டுத் தெறிப்பதே என்று பிறர் ஆய்ந்து கூறினர். 1924-இலும் இங்கிருந்து ஆய்வாளர் ஒரு சிலர் செவ்வாய்க்கு ஒளிக்குறிப்பு அனுப்பி விடையும் பெற்றதாகப் பரபரப்பை ஏற் படுத்தினர். ஆனால் அதுவும் ஏமாற்றே எனப் பிறகு கண்டனர். அண்மையில்கூடப் பல செய்திகள் அவ்வப்பொழுது கூறப்பெறு கின்றன அவை அனைத்தும் கவைக்குதவாக் கற்பனைகளே. நம் உலகில் இருப்பதினும் செவ்வாயில் உயிர்வளியும் நீரும் மிகவும் குறைவு; அதனால் நம் போன்ற உயிர்கள் அங்கு வாழமுடியா.

புறவுலகங்களினின்று வருவதாகக் கருதப்பெறும் குறிப்பு களைப் பற்றிப் பலவாறு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின் றன. மேற்கு வர்சீனியாவில் கிரீன்பாங்கில் உள்ள விண்ணியல் நோக்கு களத் (Observatory) தில் ஓர் ஒலிவாங்கி (Listening Post) இதற்கென நிறுவப்பெற்றுளது. இங்கு 85 அடி அகல முள்ள வானொலித் தொலைநோக்காடி ஒன்று உள்ளது. இது 1420 மெகாசிகிள் (Megacycles) ஆற்றலுடையது. இவ்வாற்றல் நம்மினும் அறிவு வாய்ந்த புற உலக மாந்தர் உணருமாறு விண் வெளி ஒலி அலைகளைப் பரப்பவும், அத்தகைய அலைகளை வாங்க வும் வல்லதாகும். அவ்வாறு பெறும் ஒலியலைகளை நாடாப் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்துள்ளனர். ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு செய்தியைப் பெறினும் அதற்கனுப்பப் பெறும் விடை அங் குப் போய்சேர எத்தனை ஆண்டுகள் பிடிக்குமோ? வளர்ந்து கொண்டு வரும் அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் எதிர் காலமே இதற்குத் தெளிவான விடை கூற முடியும். *

ஆங்கில மொழியாக்கம்

The Rival

Repeatedly the poets sing
Of Pāri, praising him alone;
But Pāri's not the only one
There's Rain too, to sustain the world.
(Puram : 107 Kapilar)

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.
(புறம்: 107. கபிலர்)

Only the other night
When the moon was full
Our father was with us
And our hill unconquered stood -
And, alas, this night
The moon is full again :
But the triumphant kings have got our hill;
And our father is no more.
(Puram 112.)

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே.
புறம்: 112. (பாரிமகளிர் பாடியது)

ம. இலெ. தங்கப்பா.

• காமராசரின் வேலை விலகல் திட்டம், ஒரு பெரிய அரசியல் புரட்டு!

• ஏமாற்று வேலை!

(நம்நடுநிலை அரசியல் நோக்காளர்)

காமராசர் அண்மையில் வெளியிட்ட வேலைவிலகல் திட்டம் ஓர் அரசியல் புரட்டே! இதனால் தன் முன்னைய சிறப்பை மிகுவாகக் குறைத்துக் கொண்ட பேராயக் (Congress) கட்சிக்கோ, அக்கட்சியின்உறுப்பினர்கட்கோ, அன்றி அவ்வுறுப்பினர்களை அனுப்பிவைத்த பொதுமக்கட்கோ எள்ளளவும் பயன் விளையப் போவதில்லை என்பதை இன்று திட்டவட்டமாகக் கூறலாம்; இன்னுஞ் சில நாட்களில் கண்கூடாகக் காணலாம்.

முதன்முதல் அத்திட்டம் மக்களாட்சியாலும், சீனப் போராலும் சலிப்பும் அச்சமும் அடைந்துள்ள நாட்டு மக்களுக்குப் பெயரளவில் ஒரு வகை நிறைவையும் அச்சமின்மையையும் அளிக்கலாம் எனினும், வெள்ளையரை வலிந்து வெளியேற்றிக் குடியரசு அமைத்துக் கொண்ட நாட்டில் புரட்சியோ, உள்நாட்டுப் போரோ, வறுமையோ புலப்படாதா என்று ஏங்கிப் பொழுது பார்த்துக் கொண்டிருக்கும் உருசியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முன்னேற்ற வல்லரசு நாடுகட்கும், சீனா, பாக்கித்தான், இலங்கை போன்ற பகை பாராட்டும் நாடுகட்கும் நகையும், நாட்டமும் விளைப்பதாகும். பேராயக் கட்சியினரின் காலங்கருதாத ஒரு செயலுக்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு கிடைப்பதரிது காமராசர் இதைக் கொண்டுவந்த நோக்கமெல்லாம் நூற்றுக்கு இருபது விழுக்காடு பேராயக் கட்சியைக் கழுவித் தூய்மை செய்வதற்காகவும், எண்பது விழுக்காடு அக்கட்சியின் பதினைந்தாண்டுக்கால ஆட்சியினால் யாதொரு பயனையும் தனிப்படப் பெறாத நடுநிலை மக்களின் சாம்பிய உளத்தையும் ஏங்கிய பார்வையையும் மறுபுறம் திருப்பவும், நாடுபிடிச்

சீனரின் போர் அச்சத்தால் வெகுண்ட மக்களைத் தேற்றவும், பேராயக் கட்சிக் கேற்பட்ட எதிர்பாரா அரசியல் சறுக்கல்களை மறைக்கவும், பிறகட்சிகளுக் கேற்பட்ட உயர்நிலைத் தருக்கைக் குறைக்கவுமே ஆகும் என்பதைக் கூரிய அரசியல் நோக்காளர் யாவரும் நன்கு உணர்வர். மற்றபடி இத்திட்டத்தால் ஒருபயனும் விளையப் போவதில்லை என்பதைத் தி. மு. க. வின் நான்மொழி (திராவிட) நாடு என்பது ஒரு கற்பனை ஏக்கம் என்பதை அதன் தலைவர் அறிந்ததைவிடத் தாம் கொண்டுவந்த வேலை விலகல் திட்டத்தின் உட்பூசலைக் காமராசர் நன்முக அறிவார். ஐந்தாண்டுத் திட்டம், மதுவிலக்குத் திட்டம், கல்வித் திட்டம், ஊழல் ஒழிப்புத் திட்டம், கட்டாயச் சேமிப்புத் திட்டம் முதலிய கணக்கற்ற வாய்த்திட்டங்கள் எந்த அளவில் பயன் அளித்தனவோ, அந்த அளவில்தான் இத்திட்டமும் பயன் தரும். மக்கள் விரும்புவது வெறும் திட்டங்களல்ல; செயல்! பூத்துக் காய்க்காத இத்தகைய வெறுந் திட்டங்களால் கிடைத்ததும் கிடைக்கப் போவதும் ஒன்றுமில்லை.

தொடக்கத்தில் இவ்வேலைவிலகல் திட்டம் ஈகம் (தியாகம்) போல் தோன்றியது. பின்னர் இது தலைமையமைச்சர் நேருவின் சொல்வலிமையைப் புலப்படுத்தும்வகையில் தாழ்ந்து போயிற்று. வேலைவிலகும் திட்டமாக முளைத்த இது, வேலை விலக்குந் திட்டமாக மாறித் தமக்கு வேண்டாத அமைச்சர்களை அச்சுறுத்தி விலக்கவும், தமக்கு வேண்டியவர்களை இன்னும் நெருக்கமாக அணைக்கவும் துணை புரிந்தது எனலாம். மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது போன நிலை வேறு! ''இக்கூற்று பிழைபாடானது; உண்மையாக அமைச்சர்கள் தாங்களாகவே விலகிக் கட்சிக்கு உறுதுணையாக நிற்க முன்வந்துள்ளனர்'' என்று சிலர் நம் கருத்தை மறுக்கலாம். அவ்வாருயின் வேலை விலகுபவர்கள் எத்தகையவர்களாக இருத்தல் வேண்டும்.? நாணயமும், பொறுப்புணர்வும், நேர்மையும், ஒழுங்கும், ஈக (தியாக) மனப்பான்மையும் கொண்டவர்களே தாமாக விலக முன்வருவர். இவை அல்லாத அமைச்சர் பக்தவத்சலம் போன்றவர்கள் கிடைத்த நாற்காலியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு கிடப்பார்களே அன்றி வெளியேற மாட்டார்கள். இத்தகையவர்கள் தம் செயலால் அரசியலில் மிக்க அக்கறை உள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டாலும் வியப்பதற்கில்லை. தாமே விலகிப் போகும் நேர்மையாளரை நாம் இழந்து விடுதல் எப்படி ஆட்சிச் சிறப்புக்குத் துணை புரியும்? இத்தகையோரை இழப்பதால் இதுவரை கிடைத்த ஒரு சில நன்மைகள் இனிமேல் ஏற்படாமற் போயினும், எஞ்சியுள்ள நலம் உறிஞ்சிகளாலும் நேர்மைற்ற அறிவிலிகளாலும் மக்கள் மேன்மேலும் துன்புறவல்லவோ நேரும்! பொதுமக்களும் அறிஞரும் இதனை நன்கு எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம்.

தாமே விலகுதல் என்ற அடிப்படையில் இதைத்தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க வியலாது. இதுவன்றித் தலைமை யமைச்சரே ஒருவரை விலக்குதற்குச் சட்டம் இடம் கொடுக் காது. இந்நிலையில் என்ன மாற்றத்தை எதிர்பார்த்து இத்திட் டத்தைக் கொண்டு வந்தனரோ, அந்த அடிப்படை மாற்றமும் கூட இதனால் கிடைக்க வழியில்லை.

இவை ஒருபுறம் கிடப்ப, இம் மாற்றங்களால் ஏதாவது பய னுவது கிடைக்குமா வென்றால் அதிலும் ஏமாற்றமே! முடை நாற்றமும் தூய்மையின்மையும் இணைந்து, பார்க்கவும் அருவருப் பாகத் தோன்றும் ஒரு வீட்டில் துப்புரவையும் ஒழுங்கையும் நிலைநாட்ட விரும்புவான் ஒருவன், அவ்வீட்டின் உட்புறத்தே உள்ள தட்டு முட்டுகள், பெட்டி பேழைகள், கட்டில் கதவுகள், சட்டி சருவங்கள், படுக்கை உடுக்கைகள் முதலியனவற்றைக் கிழக்கே இருந்து மேற்கிலும், மேற்கே இருந்து வடக்கிலும், வடக்கே இருந்து தெற்கிலுமாகத் திசை, இடம், நிலை மாற்றி விட்டால் மட்டும் அவ்வீட்டுள் எழுந்து மூக்கைத் துளைத்துக் குடலைப் புரட்டுகின்ற முடை நாற்றம் ஒழிந்து போகுமா? ஒரு பொழுதும் போகாது. பெட்டிக்குள் உள்ள பாம்பும் பல்லியும் வெளியேற வேண்டும்; சட்டிக்குள் ஊசிக் கிடக்கும் பழம் பருப் பும் கருவாடும் கொட்டப்பட வேண்டும்; முகட்டுப் பூச்சிகளும் மூஞ்சுறுகளும் ஓட்டப்பட வேண்டும்; வீடு வெள்ளையடிக்கப்பட வேண்டும்; பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கப்பட வேண்டும். இவற்றிற் கெல்லாம் அவ்வீட்டைக் கட்டிக் காக்கும் பழைய பெருமாளின் மனமும் மாறவேண்டும். பழைய பெருமாள் முன் போலவே குந்தித் தின்னும் கொடுமையாளராக இருக்கும்வரை, முகட்டுப் பூச்சிகளும் கரப்பான்களும் மூஞ்சுறுகளும் உள்ள வரை, ஊசிய குழம்பும் அழுகிய பொருள்களும் உள்ளிருக்கும் வரை, பொருள்களை இடம் மாற்றி வைப்பதால் மட்டும் பய னில்லை. வேலை விலகியோர்க்கு வேறு வேலைகள் கொடுக்கப் பெற்று அரசியலில் பொறுப்பும் ஆட்சியிலே தொடர்பும் உள்ள வரை வேலை விலகுவதால் என்ன பயன் ஏற்படப் போகின்றது என்பதை நம்மால் கணிக்க முடியவில்லை.

அரசியல் என்பது ஒருவர்க்கும் புரியாத புதிர் அன்று. அஃது அப்படியிருப்பின் அதனால் ஒருவர்க்கும் பயன் விளையப் போவதுமில்லை. எவர்க்கும் புரியாத நன்மைகளைவிட, எல்லார்க் கும் புரிகின்ற தீமைகளே மக்களை எச்சரிக்கையாக விருக்கச் செய்யவல்லன. மந்திர தந்திரங்களால் மண்ணாண்டது பழைய காலம்! இந்நாளில் தூய உள்ளமும் தொண்டு நோக்கும் உள்ள வரே அரசாளல் வேண்டும். பத்து நல்ல மணிலாக் கொட்டை களையும் ஒரேயோர் ஊசிய கொட்டை துப்பச் செய்து விடும். ஆட்சியினரின் ஓரிரு உயரிய நேர்மையான திட்டங்களைக்கூட

அயல்மொழிச் சிறுகதை

பாதரி

அசாமிய மூலம் : இலட்சுமிநாத் பேசுபருவா
ஆங்கிலப் பெயர்ப்பு : பிரிஞ்சிகுமார் பருவா
அருந்தமிழாக்கம் : முகவை. ஆடவல்லான்.

அப்பொழுதுதான் சிசுராம் வயலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். புறக்கடையில் கலப்பையைச் சார்த்திவிட்டு, விரைந்து குளித்து நீர்ச்சீலை (கோவணம்) யைக் களைந்து மாற்றிய பின் சமையலறை நோக்கி விரைந்தான். அங்கே அவன் மனைவி நண்பகல் உணவாக்கிக் கொண்டிருந்தாள். அவள்தான் பாதரி. சோறு இன்னும் வடிக்கவில்லை. காய்கறிகூட இன்னும் ஆக்கவில்லை. இதைக் கண்டதும் சிசுராம் வெகுண்டான். 'தெகியா'க் கீரைகூடக் கழுவப்படாமல் கிடந்தது. மறைந்தொழிந்த 'மஞ்ஞை' போன்று வாழையிலை மேல் கேட்பாரற்றுக் கிடந்தது 'மைதா' (சிறு கத்தி). சணல் கொண்டு அலைக்கழித்ததால் உணர்விழந்து கிடந்த 'கை' மீனென்று 'திருநீறு பூசிய திருத்தொண்டர்' போல் கீழே கிடந்தது. மற்றொரு பக்கம் புகை கண்களை மறைக்க அடுப்பருகே தீ மூட்டிக் கொண்டிருந்தாள் பாதரி.

சமையல் இன்னும் ஆகவில்லை என்பதையறிந்த சிசுராமுக்குச் சினம்பெருக்கெடுத்தது. புலரிக் காலையிலிருந்தே ஒருவகைப் 'பொருதும் மனப்போக்கு' அவனை ஆட்டிக் கொண்டிருந்தது. பல்வேறு கரணியங்களால் அவன் தன் சினம் உணர்ச்சி முகடு

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆங்காங்குள்ள ஊழற் கழுகுகள் சூறையாடிவிட முடியும். இதற்குக் கழுவாய் வேலை விலகலன்று; அன்றி விலக்கலுமன்று; தண்டனை; கடுந்தண்டனை! தூக்குத் தண்டனை கூடப் பயன்படுத்தப் பெறலாம். இதுவன்றி இத்திட்டம் மணலால் கட்டிய அணை! கந்தலால் கட்டிய திரை! வெறும் சொற்புரட்டு! இதனை மக்கள் புரிந்து கொள்ள நீண்ட காலமாகாது என்று அரசினர் உணர வேண்டும். *

நோக்கிப் படிப்படியாக உயர்ந்து கொண்டே இருந்தது. அன்றைக்குக் கண்ணன் தன் பதிஞேராம்பிறை (கிருஷ்ணஏகாதசி). அந்நாளில் உழவு செய்வதில்லை. இன்று காளைகள், சாலையில் வயற்காட்டில் செய்த சண்டித்தனமோ மிகுதி. அதோடு இன்று காலைதான் அண்டைவீட்டு பாகுவாவோடு வரப்பைக் கூட்டிப் போட்டதற்காக வாய்ச் சண்டை வேறு. வாய்ச் சண்டை முற்றி, பிளவும் உறுதியாக உண்டாகி யிருக்கும். ஆனால் பாகுவா, நேரவிருக்கும்பேரிடரை உய்த்துணர்ந்து அவ்விடத்தை விட்டு அகன்று விட்டான். ''எப்போதாவது ஒருவன் சினங்கொண்டு சீறினால் பொறுத்துக்கொள்ள வேண்டியது அவன் மனைவியே'' – இது மூத்தோர் முதுமொழி. இதுபோல முன்பொரு முறை வலிவுடைப் பாகுவா கொடுத்த தொல்லையால் சினமூண்ட சிசுராம், காலாகாலத்தில் காளைகளுக்குத் தீனி வைக்க வில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு, அவளை அடித்துச் சினந் தணித்துக் கொண்டான்.

பாதரி, நில மடந்தை போன்று, யாதொரு முனகலுமின்றி, இதுபோன்ற கணவனின் தாக்குதல்களைப் பொறுமையாகத் தாங்கினாள். இத்தகைய இடைநிகழ்வாம் அடிகள் அடிபாடுகள், உறக்கம் உறுபசி போன்று இயற்கையானவை. அவை இல்வாழ்க்கையில் இன்றியமையாத் தொடர்முடிபுகள் என்று திட்டவட்டமாக நம்பினாள் பாதரி. அவள் சிசுராமிடம் பற்றுறுதி கொள்வதன் வாயிலாக அருளின்பத்தை நாடினாள்.

ஆயின் எதற்கும் ஓர் அளவுண்டு. அடக்கம் ஆட்கொண்ட நிலமடந்தைகூடச் சிலபொழுது அதிர்கிறாளல்லவா? எனவே பொறுக்கவொண்ணா நிலை ஏற்படும்போது பரிவுக்குரிய பாதரி கிளர்ந்தெழுந்தால், அது இயற்கைக்கு மாறானதோ?

புகையும் அடுப்பை ஊதி ஊதி அவளும் ஓய்ந்துவிட்டாள். சேய்மையிலிருந்தவாறே சிசுராம் அவளை நோக்கினான். சினந் தூண்ட உரக்கக் கத்தினான்:–

'' அடியே! எவ்வளவு நேரமாச்சு? ஏனின்னும் சோறுக்கலை ? ''

அவன் முகத்திலும், கண்களிலும் சினத்தால் செங்குருதி பாய்ந்து பரந்திருந்தது.

புகைமூட்டத்தினின்றும் திரும்பிய பாதரி சாரமின்றிப் பதிலளித்தாள்:–

''எந்தலையை வச்சா சோறுக்குறது? வீட்டிலே ஒரு சுள்ளி கூடக் கிடையாது. ஈரச் சுள்ளியை எரிய வைக்கறதுக்குத்தான் என்னால் ஆனமட்டும் ஊதிப்பார்க்கிறேன். கொஞ்சங்கூட 'இது' இல்லாம இப்படிச் சும்மா சீறுறது நல்லாயிருக்கா?''

''என்னடி சொன்னே? நாய்மவளே!'' சிசுராம் முழங்கினன். தோள்பட்டையை உயர்த்தி, அவள்மீது பாய்ந்து கீழே கிடந்த 'மைதா'வால் அவள் முதுகில் குத்தினன்; அடுத்து ஒன்று விழுவதற்குள் நெஞ்சு துளைக்க, பாதரி வீறிடுவதைக் கேட்ட சிசுராமின் தமையன் கினராம் ஓடோடிவந்து சிசுராமை வன்பிடியாகப் பிடித்து வெளியே இழுத்துச் சென்றன். பாவம்! பாதரி குருதிக் குட்டையில் மயங்கிக் கிடந்தாள்.

பின்னர் மருத்துவ மனையில் பாதரி சேர்க்கப்பட்டாள். மூன்று நாள் கழித்து உணர்வு திரும்பியபின் படுக்கையருகே யாரையோ எதிர்பார்ப்பதுபோன்று தன்கண்களை அறைமுழுதும் சுழலவிட்டாள். பணியாள் ஒருவன் அருகே வந்து அவளை உற்று நோக்கினன் பாதரி தணிந்த குரலில் ஆவலோடு கேட்டாள்:– ''அவர் எங்கே''?

''யாரம்மா வேணும்?'' –பணியாள் வினவினன்.

சற்றுத் திகைப்போடு பாதரி சொன்னள்: ''எங் கணவந்தாய்யா''

''ஓ! அந்த இழிஞஞ? அவனிப்போ காவலறையிலே இருக்கான்''

''அவரை, இங்கே வரச்சொல்லுங்கய்யா''. பாதரி இரக்கஞ் சுரக்கக் கெஞ்சினள்.

''அவன், எப்படிம்மா வரமுடியும்? அவன் அஞ்சத்திலே● இருக்காம்மா. அவனை நினைச்சா, உன் நிலைமை இன்னும் மோசமாயிரும்மா.''

பணியாளுக்குக் காது கொடுத்துக் கொண்டிருக்கும் போது அவள் கண்கள் சிறுத்தன. சில கட்துடிப்புக்களில் அவளுக்கு மறுபடியும் நினைவு தப்பியது. பண்டகருக்குச் சேதி அறிவிக்கப் பட்டது. பணியாள் நடந்ததை அவரிடம் கூறினன். சிசுராம் அங்கு வராவிடில், பொறையாளி○யின் நிலை சீர்கேடுறும் என்பதைப் பண்டகர் கண்டறிந்தார். எனவே சிசுராமை அங்கு கொண்டுவரச் செய்து அவள் படுக்கையருகே அவனை இருக்கச் செய்தார். அப்போதுதான் நினைவு திரும்பியவுடன், தன் கணவனை அவள் பார்க்க வியலும்.

மறுநாள் காலை பாதரிக்கு உணர்வு மீண்டது. தன்கணவன் தலையைத் தடவிக் கொடுப்பதையும், மெதுவாகத் தலையை நீவி விடுதலையும் பார்த்தாள் பாதரி. அவனைக் கண்ட அளவில் மனநிறைவின் தோற்றம் வெளிப்பட்டது. அவள் கணவன் வருகை

● அ(ஞ்)சத் = காவற்கைகாப்பு (Police custody);
○ பொறையாளி = Patient;

யால் அவளது தொல்லைகள் யாவும் தீர்ந்தன. அவள் புன்னகை யோடு அவனைக் கேட்டாள்.

"எப்படீங்க இருக்கிறீங்க! ஒழுங்காச் சாப்பிடுறீங்களா? நீங்களாச் சமைக்கிறது கடினங்கிறது எனக்கு நல்லாத் தெரியும் கவலைப்படாதீங்க. இன்னம் ஒன்றிரண்டு நாள்லே எனக்குச் சரியாப் போயிடும். என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக ஏற் பாடு செய்ங்க. உங்களுக்கு உதவியா யிருப்பேன்"

சிசுராமின் கண்களிரண்டிலிருந்தும் கண்ணீர் பெருக்கெடுத் துக் கன்னங்களில் வழிந்தோடியது.

அவள் படுக்கையருகே பண்டகர் வருவதைக்கண்ட பாதரி கெஞ்சினாள்:—

"என்னய்யா! எங்கப்பு! அவர்மேலே தப்பில்லே. அவர் ஒண்ணுமறியாதவரு; குற்றமற்றவரு; அவரை விட்டுடுங்க: அவரை மன்னிச்சிடுங்க. அய்யா! கெஞ்சிக் கேக்கறேன்யா. எங் கணவனை மன்னிச்சிடுங்க. நானுத்தான் 'மைதா' மேலே இடறி விழுந்து காயமடைஞ்சேன்."

அவள் கண்களிலே கண்ணீர் தளும்பி நின்றது.

பாதரியின் இச்சொற்களால் பண்டகர் (Doctor,) பணியாள் சிசுராம் உட்பட அனைவரும் வாயடைத்துப்போனார்கள். பீறிட் டெழும் துயரத்தை இதற்குமேலும் சிசுராமால் அடக்கமுடிய வில்லை அவன் கடுந்துயர் வயப்பட்டுக் குழவிபோல் அழுதான்.

"அது மெய்யில்லீங்க. நாந்தான் 'மைதா'வாலே அவளைத் தாக்கினேன். என்னைத் தூக்கிலே போடறதுதாங்க நேர்மை. ஆண்டகையே! ஒன்னும் அறியாத பெண்டாட்டியைக் குத்தின பாவி நாந்தாங்க." உணர்வெழுச்சியால் அவன் சொல்லிக் கொண்டே போனான்.

சில கிழமைகளுக்குள்ளேயே பாதரியின் வெட்டுக் காயங் கள் ஆறி, அவள் பண்டகர் மனையினின்றும் வெளியே வந்தாள். சட்ட முறையமைப்பினின்றும் சிசுராமை மீட்க, அவன் யாது மறியாதவன் என்றெல்லாம் கூறித் தடுக்க முயன்றாள் பாதரி. ஆனால் சட்டம் அதன் கவடைப் ● பின்பிற்றியது. மூன்று மாதம் கடும்பணி புரியுமாறு சிசுராமுக்குத் தண்டனை வழங்கப்பட்டது இழைப்புக்கு, ஈடுசெய்யச் சிசுராம் மலர்ச்சியோடு சிறை சென் றான். தன் கணவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்குத் தன்னையே நொந்து கொண்டாள் பாதரி. அவள் தன்னைக் கடிந்து கொண் டதுபோல் வேறெவரும் அவளைக் கடிந்திருக்க முடியாது. *

● கவடு = Course.

கேள்விச் செல்வம்

(இப்பகுதியில் திரவிட மொழிப் பெரும் புலவர், உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவைபற்றிய உங்கள் ஐயங்களை இப் பகுதிக்கு எழுதியனுப்புங்கள்! கேள்விகளைக், ''கேள்விச் செல்வம், தென்மொழி, திருப்பாதிரிப் புலியூர்'' என்ற முகவரியிட்டு அனுப்பவும். – ஆர்.)

பெரு. கிருட்டிணசாமி, சென்னப்பநாயக்கன் பாளையம்.

● சொல்லுக்கு 'நடுவில்' 'ந' முதல் 'நௌ' ஈறாக உள்ள எழுத்துகள் வருமா?

○ 'ர' முதல் 'ரௌ' ஈறாகவுள்ள உயிர் மெய்யெழுத்துகளுள், ர, ரா, ரி, ரு, ரை, ரோ என்பவை தனிச் சொல்லிடையில் வரும்.

இரா. பாலகிருட்டிணன், மதுரை–1.

● தமிழ் மொழியினின்று ஏனைய தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகள் பிரிந்திருப்பின் அவற்றுக்குத் தமிழ் எழுத்தின்றி மற்றோர் எழுத்து முறை வந்தது எப்படி?

○ தெலுங்கு கன்னடம் முதலிய திரவிட மொழிகள் தமிழில் இல்லாத வல்லொலிகளைப் பெற்றதனாலும், ஆரியச் சேர்க்கையினாலும், ஆரியமுறையொட்டிய நெடுங்கணக்கைக் கொண்டன

● தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால், இன்றைய பொருளியல் நிலையில் செழிப்போடு வாழ முடியுமா?

○ தமிழ்நாடு தனியாகப் பிரிந்து தழைத்தோங்குவதற்குரிய நிலைமைகளெல்லாம் அதற்கிருக்கின்றன. பண்டைக் காலத்தில் சேர சோழ பாண்டிய நாடுகளும், பிற்காலத்தில் நாயக்க மராட்

டிய அரசுகளும், தமித்துவாழ்ந்திருக்க, சோழ பாண்டி நாடுகள் *இணைந்த பகுதி இனி ஏன் தனித்து வாழமுடியாது?* இக்காலத்தில், இரசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய சில நாடுகள்தவிர ஏனையவெல்லாம் பெரும்பாலும் மேனடுகளின் *துணைகொண்டே வாழ்வனவாகும். இந்தியா* மேலைத் துணை கொண்டு வாழ்வது போன்றே தமிழ்நாடும் மேலைத் துணை கொண்டு வளம்பெற வாழும்.

கா. இர. பகலவன், சென்னை.

● **அகத்தியர் தமிழரா? வடமொழியாளரா? அகத்தியர் தொல்காப்பியத்திற்கு முந்தியதா? முதன் முதலில் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர் அகத்தியரா?**

○ *அகத்தியர் ஆரியர். அகத்தியம் தொல்காப்பியத்திற்கு* முந்தியது. அகத்தியர் காலம் ஏறத்தாழ கி. மு. 1500. தமிழுக்கு முதலிலக்கணம் வகுத்த தமிழ முனைவர் காலம் கி. மு. *10,000 ஆண்டுகட்குமுன். ஆரிய வருகைக்கு முற்பட்ட* தனித் தமிழிலக்கணங்களெல்லாம் அழிந்தும் அழிக்கப்பட்டும்போயின. தமிழ் முதனூலின் தொன்மை வரலாற்றிற்கெட்டாதது.

● **'துணங்கை' எனும் நாட்டிய வகை தற்காலத்துக் காணப்படும் ''rock'i holi'' வகையைச் சேர்ந்தது என்று *சிலர் கூறுவது உண்மையா?* இல்லெனின் அஃது எவ்வகையைச் சேர்ந்தது?**

○ துணங்கை குரவைக் கூத்து வகையைச் சேர்ந்தது.

ஆ. வேலாயுதம், கொழும்பு.

● *வள்ளுவர் திருநாள்* கொண்டாடுவது பற்றி நால் வகைக் கருத்துகள் இங்கு நிலவுகின்றன. (1) தை முதல் நாள் (2) மாசி உத்தரம் (3) பங்குனித் திருவோணம் (4) வைகாசி அனுடம் - ஆகிய நாட்களில் கெண்டாடலாம் என் நான்கு பிரிவினர் கூறுகின்றனர். இவை பற்றித் தங்கள் கருத்துகள் யாவை?

○ வள்ளுவர் திருநாளைப்பற்றி இற்றை நிலையில் திட்டமாய் *ஒன்றும் சொல்லவியலாது தை முதல் நாள் பொங்கல் விழா* வாதலால் வேறொரு நாளில் வள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவது நல்லது. அதை அறிஞர்கூடி முடிவு செய்தல் வேண்டும்.

சரவணக்குமார், சென்னை.

● காமம் என்பது தமிழ்ச் சொல்லா? காமத்திற்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடென்ன? காமம் இழிந்ததென்றால்

வள்ளுவர் 'காமத்துப்பால்' என்று அமைத்ததேன்? அதை 'இன்பத்துப்பால்' என்று சிலர் கொள்வது பொருந்துமா?

○ 'காமம்' தமிழ்ச் சொல்லே. காமம் கணவன் மனைவியரிடைப்பட்ட பேரன்பு; காதல் பிறரிடைப்பட்ட பேரன்பு. வள்ளுவர் காலத்தில் காமம் என்னும் சொல் பிற்காலத்திற்போல் இழிவடையவில்லை. 'இன்பம்' பொதுச் சொல்லாதலால், காமம் என்னும் சிறப்புச் சொல்லை ஆள்வதே நன்று.

பெ. கோ. மலையரசன், மலாயா.

● தமிழின் பீடழிக்கும் இந்தியை எதிர்த்தழிக்கும் நோக்கோடு சிலர் ஆங்கிலத்தையும் எதிர்க்க விழைவது அறிவுடைமையா?

○ ஆங்கிலத்தை எதிர்ப்பது அறிவுடைமையாகாது.

பெ. இராசசுந்தரம், சித்திரச்சாவடி.

● 'இனிமை'யி லுறைநல் லெழில்சேர் 'ழ' வுடன் இலங்கும் 'ஃ' ம் எம்மொழி உடைத்து?

○ இவ்விரண்டையும் தமிழே உடைத்து. ஆங்கிலர் சிலர் 'Pearl' போன்ற சொற்களிலுள்ள 'rl' இணையெழுத்தை ழகரமாக ஒலிக்கின்றனர். சமற்கிருத விசர்க்கம் தமிழாய்தத்தை ஒருபுடையொத்தது.

பெ. முனியப்பன், கர்த்தாரப்பட்டி.

● தி. மு. கழகத்தைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

○ தி. மு கழகம் தமிழ் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்புள்ள தலைமையான எதிர்ப்புக் கட்சி.

அறிவன், பறம்பை.

● சங்கினம் கூடி வாழ்வதால் 'சங்கம்' என்ற சொல் தமிழ்க் கழகத்தைக் குறிப்பதாகக் கொள்வது பொருந்துமா?

○ கழகத்தைக் குறிக்கும் சங்கம் என்னும் சொல் Sangha என்னும் வட சொல்லின் திரிபாகும். நந்தைக் குறிக்கும் சங்கம் என்பதே, வடசொல்லாகக் கூறப்படினும், தூய தென்சொல்லாம்

சுரி-சரி-சருக்கு. சருக்குதல் = வளைதல் சருக்கு + அம் = சருக்கம் (வட்டம்). சருக்கு + அரம் = சருக்கரம்-சக்கரம் = வட்டம், வண்டி (Wheel). சருக்கரம்-சருக்கரை = வட்டமான அச்சு வெல்லம். ஒ. நோ: வட்டு = வட்டமான பனை வெல்லம்.

சருக்கரை—சர்க்கரை—சக்கரை. சர்க்கரை யென்பது பிற் காலத்தில் பிற வடிவான வெல்ல அச்சுகளையும் உதிரி வெள் ளத்தையும், மணற் சீனியையும் குறித்தது. சக்கரம்—அக்கரம் —அக்காரம் = சர்க்கரை.

சருக்கு—சக்கு—செக்கு = வட்டமாய் ஆடும் எண்ணெய்ஆலை

சக்கு—சங்கு = வலமாகவும் இடமாகவும் வளைந்தது (வலம் புரி, இடம்புரி). ஒ. நோ: புரி = சங்கு, வளை = சங்கு. புரிதல் = வளைதல்.

சங்கு—சங்கம் = பெரிய சங்கு, சங்கு. 'அம்' என்பது ஒரு பெருமைப் பொருட் பின்னொட்டு. எ. டு: நிலை—நிலையம், மதி—மதியம், விளக்கு—விளக்கம்.

அறிவரசி, இளையான்குடி.

● சொல்லின் செல்வர் இரா. பி. சேது (பிள்ளை) தமிழுக் குச் செய்த தொண்டுபற்றி உங்கள் கருத்தென்ன?

○ எனது 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு' என்னும் திறனாய்வுச் சுவடியைப் பார்க்க.

● **தமிழ்நாட்டின் எதிர் காலம் எப்படியிருக்கும்?**

○ தமிழ் மக்களின் உணர்ச்சிக்குத் தக்கபடி யிருக்கும்.

மய்ம்மொழி, முகவை.

● வையாபுரி (பிள்ளை) 'ஆரிய அடிமை' என்பது தவிர, வர் சிறந்த ஆராய்ச்சியாளர் என்றும் அவரும் பலவகையில் மிழ்ப்பணி புரிந்துள்ளார் என்றும் ஒப்புக் கொள்ளலாமா?

○ ஆரியவடிமைப்பட்ட தமிழ்ப் பகைவர் எங்ஙனம் தமிழ்ப் ணி புரிந்திருக்க முடியும்?

பசுமை நினைவு

ன்பர்கட்கு,

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நடந்த நிகழ்ச்சிகளில் என் ன்றும் அழியாமல் உள்ளத்தே நிறைந்திருக்கும் பசுமை னைவுகள் சில இருக்கும். அத்தகைய நினைவுகள் சில அவர ர்க்கே இன்பந்தரவல்லன. சில பிறர்க்கும் மகிழ்ச்சியூட்டக் டியன. இன்னும் சில பிறர்க்கு வழிகாட்டியாகவும் அமையக் டியன. அத்தகைய உண்மை நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக ரே பக்கத்தில் வருமாறு எழுதியனுப்ப வேண்டுகின்றோம். நதியுள்ளவை வெளியிடப் பெறும். வெளியிடப் பெறாதவற் றத் திருப்பியனுப்பல் இயலாது. — ஆசிரியர்.

பொருளடக்கம்

சுவடி–1 ஓலை–8

புரட்டாசி–தி.பி.1994

ஆசிரியவுரை		3
சமற்கிருதவாக்கம்–சொற்கள்	(பாவாணர்)	11
எண்சுவை எண்பது	(இலக்கியம்)	19
மூன்று மடல்கள்	(பாடல்)	26
தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்பும்		28
ஏங்குதற் பத்து	(பாடல்)	35
மகிழ்ச்சி என்பது என்ன?		40
கடலில் ஒருதுளி		46
தமிழ்நாட்டில் தமிழ்		51
மலர்ச்சி தோன்றும்	(பாடல்)	59
புறவுலகங்களில் உயிர்வாழ்க்கை	(விண்ணியல்)	60
ஆங்கில மொழியாக்கம்		65
காமராசரின்......	(அரசியல்)	66
பாதரி	(சிறுகதை)	69

மற்றும்

கேள்விச் செல்வம், நூல் நிறை, வேறென்ன சொல்வது?